சென்னையிலும், பர்மாவிலும், வித்யா இலாகா
டைரக்டர்கள் அங்கீகரித்தது.

பத்மினி.

இந்துதேச சரித்ர ஸம்பந்தப்பட்ட
ஓர் உண்மைத் தமிழ்க்கதை.

நாகப்பட்டணம் ரேஞ்சு பள்ளிக்கூட டெப்டி
இன்ஸ்பெக்டரும், 'மதுரைத்தமிழ்ச்சங்கம',
'தமிழ்ப்புராதனசரித்ர ஆராய்ச்சிச்சங்கம'
'சென்னைத் தமிழர் கல்விச்சங்கம்,'
இவற்றின் அங்கத்தினரும, 'கதையும பாட்டும்'
'தனிப்பாக்கோவை' தொல்காப்பியம் பொருளதிகார
ஆராய்ச்சி முதலியவற்றின்
ஆசிரியரும் ஆகிய

வே. முத்துஸாமி ஐயர், எம். ஏ, எல். டி,

இயற்றியது.

(நான்காம் பதிப்பு)

தஞ்சை,

லாலி எலெக்டிரிக் பிரிண்டிங் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

காபிரைட் செய்தது.]

1924.

ரூ 4·00

Dedicated

BY KIND PERMISSION

TO

M. R. Ry. Rao Bahadur

A. C. PRANATHARTHIHARA AYYAR Avl., B. A., F. M. U., I. S. O.

Retired INSPECTOR OF SCHOOLS,

MADRAS.

Pages 125 to 148 Printed at the MANORANJINI PRESS, MADRAS

☞ Approved by

Director of Public Instruction, Madras,

for sc[illegible] reading, and also by

The Director of Public Instruction, Burma.

Some opinions on Tamil 'Padmini'

5. *M. S. H. Thompson, Esq., B. A., L.T.,* Asst. Inspector of Schools, Salem Range:— "It is a *delightful* translation, your crisp style making it a real pleasure to read it. Yours is *the sort of book* to place in the hands of students. Your language is *simple* and a *worthy model for imitation.* I congratulate you on the get-up of this book. Your book seems to be to have a *charm all its own.*"

6. *A. Madhaviah Avl. B.A.,* the author of several well known high class Novels and Dramas:—"I am glad to find the style *chaste, dignified* and *flowing neither too colloquial nor pedantic.*"

7. *P. Sambandam Mudaliar Avl., B. A., B. L.,* High Court Vakil, and Dramatist and Novelist, Madras:—"I must congratulate you on your book. I am certain the Tamil reading public will welcome this book".

8. *S. Anavaratha Vinay ι kam Pillai Avl. M.A., L. T.*, Vernacular Supt., Madras Christian College:- "It reads quite like an original Tamil Romance. Your prose style is *elegant and simple* and may, I think, be set before students of Tamil Composition *as a model.* Your Occasional Verses are *admirable* and indicate that your *poetic talents are of a high order*".

9. *Pandit D. Savari Royam Avl., M. R. A. S.* Head Tamil Pandit, St. Joseph's College, Trichino-poly:—"I should say that the language is a Model for writing essays. Now and then I read some passages in the composition classes as model lessons".

10. *K. Natesa Iyer Avl., M. A., L. T.*, English Lecturer, Government College, Kumbakonam:—"I consider it a distinct success, in that it is excellently adapted to the class of readers to whom it is intended. It is indeed written in *excellent Tamil, neither pedantic nor vulgar*, but *clear* in its flow and *elegant* in its diction and structure................I feel sure you will meet with immediate and widespread success."

11. *T. S. Subaramania Iyer Avl., M. A., L. T.*, Professor of History, Teachers' College Saidapet:— "I found it *good in every way.* The style and diction are *quite acceptable*".

12. *T. R. Punchapakesa Iyer Avl., M.A., L.T.,* Lecturer in Mathematics, Presidency College Madras:—"Your Novel is *very interesting* and language is *simply excellent*".

13. *A. Ponniah Esq., B.A., L.T.,* Headmaster, A. A. M. High School, Madanapalle:–"It is written in an *elegant* and yet *simple* style. Here and there are easy poems composed by the gifted author. The book is *decidedly superior* to many a Tamil Novel that one ordinarily comes across in these days. The subject matter as well as the language of the book makes it specially useful as a Supplementary Reader in the upper forms of High Schools".

சில தமிழ் அபிப்பிராயங்கள்.

---

14. 'சுதேசமித்ரன்' பத்திரிகை:—"இதில் முக்கியமான சரித்திர விஷயங்கள் உள்ளபடி விளக்கப்பட்டிருக்கின்றன. உண்மை, நீதி முதலிய நற்குணங்களை நிலை நிறுத்துவதற்கு அப்போது செய்யப்பட்ட பல வீரச்செயல்கள் விசேஷமாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்தப் புஸ்தகம் தெளிவான நல்ல தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கின்றது."

15. திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத்ஞானியார்மடாலயத்து ஸ்வாமிகள்:—'பத்மினி,' பெயர்க்கிணங்க நல்லொழுக்கம் நன்கமைந்தது; (ஒழுக்கம்-வசனநடை என்பதும் ஒரு பொருள்.) எவர்க்கும் எளிதில் பொருள் விளக்கும் எழிலது; செந்தமிழணங்கின் சீர்த்தியைத் தெரிப்பது; நடந்ததே நவில்வது.''

16. சென்னைக்கிறிஸ்டியன்காலேஜ் தலைமைத்தமிழ்ப் பண்டிதர் ப்ரஹ்மஸ்ரீ உ. வே. கா. ஸ்ரீ. கோபாலாசாரியர் அவர்கள்:— " இது, படிப்பார்க்கு மொழிபெயர்ப்புப்போலன்றி முதனூல்போலத்தோன்றுமாறு தெளிவும்இனிமையும் உடையதாய் இயற்கைநடைகொண்டு இலங்குகின்றது. அன்றியும்,இதனுள் மொழிபெயர்க்கப்பெற்றுள்ள செய்யுட்களும் மூலத்தினின்றும் விலகாது செல்லுகின்றன. முக்கியமாக 'குறத்திப்பாட்டு' அதற்குரிய சொல்லும் ஓசையுங் கொண்டிருப்பது உவக்கத்தக்கதே."

17. 'செந்தமிழ்'ப் பத்ரிகை, மதுரை:—" இது யாவரும் விரும்பிப் படிக்கத்தக்க . தெளிவான இனிய வசன நடையில் எழுதப் பெற்றிருக்கிறது. இதில் இடையிடையே வேண்டுமிடங்களில் புதியவும் . பழையவுமான சில செய்யுட்களும் பொருத்தமாகச் சேர்க்கப் பெற்றிருக்கின்றன......."

18. 'வித்தியாபாநு'ப் பத்ரிகை, மதுரை :—"......... ஆங்கில நூலைத்தழுவி எழுதப்பட்டதாயினும் முதனூலென்றே சொல்லத்தக்கவாறு, சொல்வளம் பொருள்வளம் நிறையப் பெற்றுள்ளது. வாசகநடைப்போக்கு வாசிப்பவர் மனத்தைக் கவரத்தக்க இனிமை மிகப்பெற்றுளது. இத்தகைய இயற்கை நலங்களுடன் மிகவும் நயமான கடிதத்தில் சுத்தமான எழுத்துக்களால் செயற்கை நலமும் மிக்குத் தோன்ற நன்கு அச்சிடப் பெற்றது............".

19. மஹாமஹோபாத்யாயர் ப்ரஹ்மஸ்ரீ வே. சாமிநாதையர் அவர்கள், மாஜி தமிழ்ப்பண்டிதர், ப்ரஸிடென்ஸி காலேஜ், சென்னை :— பத்மினி என்னும் புஸ்தகத்தைப் படித்துப் பார்த்தேன். ஆங்கில பாஷையில் எழுதப் பெற்றுள்ள ஒரு நூலின் மொழி பெயர்ப்பாக இருப்பினும், நடையையும் பாஷையையும் நோக்கும்போது இது நூதனமாக எழுதிய புஸ்தகம்போற் காணப்படுகிறது. இது நமது தேசத்தின் பழைய நிலைமையையும், அக்காலத்திருந்த ஜனங்களின் மனவுறுதியையும், ராஜபக்தி, பதிவ்ருதா தர்மம், செய்ந்நன்றியறிதல் முதலிய நீதிகளையும் நன்கு தெரிவிக்கின்றது. இதன் நடை தமிழ்மட்டும் கற்றவர்கள் எழுதும் நடையைப் போன்றுள்ளது. மாணுக்கர்கள் படிப்பதற்கு இது மிகவும் உபயோகமானது.

நான்காம் பதிப்பின்

முகவுரை.

இந்நூல், பல பாடசாலைகளில் வசன பாடமாக உபயோகிக்கப்பட்டு வருதலால் இதன் நான்காம் பதிப்பு வெளிவரலாயிற்று.

இதன் கதை உலகியலோடு ஒத்துச் செல்வதாயும் கதாபாத்ரங்களுடைய மனோபாவங்களை விரித்து விளக்குவதாயுமிருத்தல் வேண்டியும், பாஷை நடை தெளிவாயும் சுலபமாயும் அமைவதோடு தமிழ்மொழியின் இயக்கச் சிறப்பைப் புலப்படுத்தத் தக்கதாயுமிருத்தல் வேண்டியும் நான் என்னுலான முயற்சி செய்திருக்கிறேன். அன்றியும், இது மாணுக்கர்தம் பாஷைநடையோடு சில நடையையும் சீர்திருத்த வேண்டுமென்றும், ஒருவாறு தேசசரித்ர விவரங்களையும், தமிழின் பெருமையையும், மாணுக்கர்கள் அறிந்துகொள்ள அவர்களைத் தூண்டவேண்டுமென்றும் நன்னோக்கத்துடன் இதை எழுதியிருக்கிறேன்.

இது 1916-இல் சென்னை ஸர்வ கலாசாலை இண்டர்மீடியேட் பரீக்ஷைக்குப் பாடமாயும் 1920-இல் போதனுமுறைப் பரீக்ஷைக்குப் பாடமாயுமிருந்தது. சென்னை, வேலூர், திருச்சி, மதுரை, முதலிய ஊர்களில் ஹைஸ்கூல் மாணுக்கர்களுக்கு உபபாடமாக உபயோகிக்கப்பட்டு முள்ளது. திருவநந்தபுரம், மைஸூர் முதலிய சுதேச ராஜாங்க பாடசாலைகளிலும் அபிமானிக்கப் பெற்றிருக்கிறது. இங்ஙனம் இச்சிறு நூலை ஆதரித்துவரும் வித்யா அதிகாரிகளுக்கும், இதனை வெளிப்படுத்த அநுமதி தந்தருளிய சென்னை மாகாணக் கல்வித்தலைவர், கனம் டைரக்டரவர்களுக்கும் நன்றி செலுத்துவது என் கடமையாகும்.

இதிற் காணப்படும் 'குற்றங்களைந்து குறை பெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்.'

திருவாரூர்,
7—7—1924.

இங்ஙனம்,
வே. முத்துஸாமி ஐயன்.

பத்மினி.

1-ஆம் அத்யாயம்.

பெருந்தன்மையுள்ள அரசனும் பேராசை மந்திரியும்.

ஹிந்துக்களுக்கும் மஹமதியர்களுக்கும் கி. பி. 1565-ஆம் ஆண்டில் தலைக்கோட்டை யென்னுமிடத்தில் ஒரு கொடும்போர் நடந்தது. அதில், விஜயநகர ராஜ்யத்தை ஆண்டுவந்த ஹிந்துவரசன் முழுதும் தோல்வியடைந்தான். ஆதலால், அவனுடைய பெரிய ராஜ்யமும் நாளடைவில் சீர்குலைந்து போயிற்று. அந்த ராஜ்யம், சிறப்புற்றிருந்த போது, இந்தியாவின் தென்பாகத்திலுள்ள தேசங்களை யெல்லாம் தனதாட்சிக்குட்படுத்தி, இந்தியாவின் மூன்றில் ஒருபங்குள்ளதாய் விளங்கிநின்றது. இக்காலத்துத் தென்னிந்தியர்களின் குணமேம்பாட்டிற்கும், மதாபிமானத்திற்கும், காவ்ய ரஸத்திற்கும் இவ்விந்து அரசாட்சி பெரிதும் காரணமா யிருந்தது. ஒரு ஸமயம் இவ்விஜயநகரத்து அரசர்களில் ஒருவன் டில்லி பாச்சாவைச் சிறையிட்டிருந்தான் என்ற வதந்தியும் உண்டு. இவ்வாறு சிறப்புற்றிருந்த விஜயநகர ராஜ்யம் நாளடைவில் தளர்ச்சியடைந்தது. பின்னர் ஆங்கில அரசு இந்நாட்டில் எளிதில் ஸ்தாபனமாவதற்கும் ஒரு வழியாயிற்று. தென்னிந்தியாவில் சரித்திரத்தாற் பெயர் பெற்ற இக்காலத்தில், உண்மையையும் நீதியையும் நிலை நிறுத்த எத்தனையோ வீரச்செயல்கள் நிகழ்ந்தன.

எனினும், அவ்வீரர் தம் ஊரும் பெயரும் செயலும் என்றைக்கும் அழியாதிருக்கும்படி செய்யச் சரித்திரக்காரர் இல்லாது போயினர். பழைய சரித்திரத் தொகுதியில்லாத தேசமும் ஒரு தேசமாகுமோ? எந்த நாட்டில் குடிகள், தங்கள் நாட்டு வீரர் செயலைப் பாவலர் வாயாரப் பாடத் தாம் காதாரக்கேட்கவும், நாட்டார் நன்மையையே நாடிக் கொடுங்கோல் மன்னருக்கு அடங்காதெதிர்த்து ஸமயம் நேர்ந்தவிடத்துத் தம் உயிரையும் த்யாகம்செய்த தேசாபிமானிகள் இவர் இவர் எனச் செருக்கோடு அவர் திறம் செப்பவும் பாக்யம் படைத்துள்ளார்களோ, அந்த நாடன்றோ நாடு? இந்தியராகிய நமக்கு அப் பெரும்பாக்யம் மிகுதியாக இல்லாது போயிற்று.

இது நிற்க, விஜயநகர ராஜ்யம் சோர்வடைந்த பிற்காலத்தில் தென்னிந்தியாவின் நிலைமை மிகவும் பரிதாபப்படத் தக்கதாயிருந்தது. அப்போது க்ராமங்களை எரியூட்டலும், கொள்ளையிடுதலும் ஸஹஜமான செயல்கள். இரக்கஞ் சிறிதுமின்றிக் கொள்ளைக் கூட்டத்தார் இழைத்து வந்த தீமைகளோ எண்ணி முடியாதன: பெற்றோரிடமிருந்து பலவந்தமாகப் பறிக்கப்பட்ட பாலகர் பலர்; கற்பழிக்கப் பெற்ற காரிகைமார் கணக்கிலர்; அகாரணமாகக் கொலையுண்ட ஆடவர் அநேகர். இப்படிச் சொல்லற்கரிய துன்பம் புரிந்துவந்த கொள்ளைக்காரர்தம் கள்ளச் செய்கைகளை அடக்குவார் ஆருமில்லை. ஆதலால், அவர்கள் அங்கங்கே சிறிய ராஜ்யங்களை ஸ்தாபனஞ் செய்யவும் ஆரம்பித்தார்கள். இந்தக் கதை ஸம்பந்தமாய்க் கீழே சொல்லப்படும் விஷயத்திலும் கொடியது இவ் வுலகத்தில் எங்கேனும் நடந்ததுண்டோ என்பதைக் குறித்து, நீங்களே படித்துப் பாருங்கள்.

மேற்கூறிய தலைக்கோட்டைப் பெரும்போரில் தோல்வியுற்ற ஹிந்துவாசன், தென்றிசைநோக்கிச்சென்று, அங்கு ஒரு சிறிய ராஜ்யத்தை ஏற்படுத்திக்கொண்டு, பேருக்குத் தானும் ஒரு அரசனாக இருந்துவந்தான். அவனுக்குப் பின் அவன ஸந்ததியாரும், ஆங்காங்குப் புதிது புதிதாகத் தலையெடுத்த சிற்றரசர்களுக்கு ஆற்றாது, அப்போதைக் கப்போது தம்தம் இருப்பிடங்களை மாற்றிவந்தார்கள். கடைசியாக அவர்கள் சென்னைக்கு ஏறக்குறைய எழுபது மைல் மேற்கேயுள்ள சந்த்ரகிரி யென்னுமிடத்தைத் தங்கள் ராஜதானியாக்கிக் கொண்டார்கள். 17-ஆம் நூற்றாண்டின் முதற்பாகத்தில் இச்சந்த்ரகிரியில் ஆண்டுவந்த அரசன் மிக்க சாந்தகுணமுடையவன். மனிதற்கு இருக்கவேண்டிய தயை இரக்கம் பெருந்தன்மை முதலிய நற்குணங்களெல்லாம் நன்கமையப் பெற்றவன். எனினும், அவன் முன்னோர்களிடம் இருந்த தைர்யம் மனவுறுதி ஊக்கம் முதலிய அரசர்க்குரிய குணங்கள் அவனிடம் அதிகமாக இல்லை. அவனது ஆட்சியில் சாருவன் என்னும் அவனது மந்த்ரியே ஸர்வாதிகாரி. அந்தச் சாருவனோ, எடுத்தகாரியங்களை இடையூறின்றி இயற்றும் வல்லமையுள்ளவனாயினும், அக்காரியம் கைகூடும் விஷயத்தில் இன்னதாம் செய்யலாம் இன்னசெய்யலாகாது என்பதைச்சிறிதும் எண்ணான். அரசனது அமைதிக்குணமே அமைச்சனது அதிகாரம் நாளுக்கு நாள் அதிகப்படுவதற்குத் தக்க ஆதாரமாயிற்று. இம்மட்டோடுநில்லாது, மந்த்ரி, பேராசையுற்றவனாய், ராஜ்யத்தைத் தான் கவர்ந்துகொண்டு தற்காலம் தானும், தனக்குப்பிற் காலம் தன்குலத்தாரும், அங்கே அரசாளவேண்டுமென்னும் 'அராஜக' ஆவலை அகத்திற்கொண்டு, தன் கருத்தின்படி எல்லாவற்றையும் முடித்துக்கொள்ளற்கு வேண்டிய ஏற்

பாடுகளையே எப்போதும் எண்ணியவண்ணமாக இருந்தான்.

அவன், இப்படிப் பலநாள் சூழ்ச்சிசெய்தபின்னர், ஒருநாள், அரண்மனைவாயில்களைத் திடீரென்று அடைத்துவிடும்படி திட்டம்செய்து, தனக்கு வேண்டியவர்களான சிலவீரர்களுடன் விரைவாக வேந்தனிருக்குமிடம் நாடி வந்துகொண்டிருந்தான். இதற்குள் அரசனிடத்தில், விச்வாஸமுள்ள வீரர் சிலர், அரசனுக்குக் கேடுநேரும்போல தோன்றுகிறது என்றெண்ணி, அரசனிடம் ஓடோடியும் 'வந்து அரசே! மந்த்ரி துராலோசனையுடன் இங்குவந்துகொண்டிருக்கிறான். அவனை எதிர்க்கவாவது வேண்டும்; அன்றேல், இப்போதே இவ்விடம் விட்டோடிச்சென்று உயிர்பிழைக்கவாவது வேண்டும். எனப் பன்முறையும் வேண்டினர். அதற்கு, அந்த நல்ல அரசன முதலில் அவ்விஷயத்தைச் சிறிதும் நம்பவேயில்லை. தன் முழுநம்பிக்கைக்கும் உரியவனாயிருந்த மந்த்ரி தனக்கு தீங்கு நினைக்கவே மாட்டானென்று அரசன் எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், தான் கேள்விப்பட்டதற்கிணங்க, தன் கண்முன்னே, அமைச்சனும் அவனுடன் ஆயுதபாணிகளான சில வீரர்களும் சட்டெனத் தோன்றினர். இதனைக் கண்ணுற்ற அரசன் ஒன்றும் தோன்றாது திகைத்து நின்றான். அவனது கைகளில அடுத்த நிமிஷம் விலங்குகள் போடப்பட்டன. அரசனும், எல்லாம் மிஞ்சிப்போனது கண்டு, 'தெய்வமேகதி' என்று ஏங்கிநின்றனன். அதே நேரத்தில் அரண்மனையில், அரசனது மனைவி மக்கள் அனைவரும் சிறைப்படுத்தப்பட்டார்கள். இங்ஙனம் சிறைப்படுத்தப்பட்ட அரசன் முதலிய ராஜவம்சத்தினரெல்லாரையும், அப்பாதக மந்த்ரி ஓர் இருட்டறைபுள் அடைப்பித்தான். இச்செயக்கொல

லாவற்றையும் நமக்கு எடுத்துச்சொல்ல இவ்வளவு நேரம் பிடித்ததேயெனினும், இவையெல்லாம் ஒரே நிமிஷத்தில் நடந்துமுடிந்தன, அவ்வளவு தந்த்ரமாகவும், முன்ஜாக்ரதையுடனும் ஏற்பாடுசெய்திருந்தான் சாளுவன். இதுகுடிகளுக்குத்தெரிந்தவுடன், முதல் முதல் அவர்கள் ஆவேசங்கொண்டு கோபக்குறிகாட்டினார்களாயினும், அவரெல்லாம், சாளுவனது திறத்தினால் எளிதில் அடக்கப்பட்டார்கள். உடனே சாளுவனும், தானே அரசன் என நாட்டில் எங்கும் முரசு அறைவித்தனன். இவ்வளவு அக்ரமச்செயல் செய்து ராஜ்யத்தைக் கட்டிகொண்ட சாளுவன் அரசனைக் கொலைசெய்யமாத்திரம் துணியவில்லை. அவன் அரசன் மீது இரக்கங்கொண்டு அப்படி விட்டிருந்தான் என்பது அன்று. அங்ஙனம் தான் செய்தால் சுற்றுப்புறத்திலுள்ள சிற்றரசர்களும் பிரபுககளும் தனதுசெயலை முழுவதும் வெறுத்துத்தன்னையும் எதிர்த்துத்துரத்திவிடுவார்களென்று அஞ்சியே அம்மட்டோடு நின்றனன். அந்தோ! சிறைச்சாலையில் அடைபட்டிருந்த அரசன் ஜீவித்திருப்பதற்கும் தெய்வம் ஸம்மதிக்கவில்லை. அரசனுக்கு உயிர்க்கொலை ஏற்படுவதற்குக் காரணமாகிய ஸம்பவம் ஒன்று நிகழ்ந்தவாறு இனி எடுத்துக்கூறுவோம்.

அத்யாயம் 2: பாணர்குலச்சிறுவனும், சாளுவனும்.

ஒருநாள், சாளுவனது ஸபையில், பாணர்வகுப்பைச் சேர்ந்த ஒரு வாலிபன் வந்து தோன்றினான். அவனுக்கு வயது இருபதே. அவன் ஜாதியார் தாம், தங்கள் பாடல்களால் நாட்டில் பெருந்தன்மையையும் வீரச்செயல்களையும் வளர்த்துவந்தார்கள். அவர்கள் தம் முன்னோர்கள் பாடி

யுள்ள பாட்டுக்களைத் தலைமுறை தலைமுறையாகப் பாடி வந்ததுமன்றி ஸமயம் வாய்த்தவிடத்துத் தாமும் பாக்கள் பாடும் வாக்கு வன்மை வாய்ந்திருந்தனர். இப்படிப்பாடி வரும் இவர்கள் கலைமகளருளால் பாடுகின்றனரென்றே ஜனங்கள் கருதிவந்தனராதலின், இப்பாணர்கள் ஒருவகைப் புண்யபுருஷர்களாகப் போற்றப்பட்டு வந்தார்கள். இவர்கள் அச்சம் சிறிதுமின்றி ஊரூராகப் போவார்கள். இவர்கள் பாவெல்லாம் சிங்காரரஸஞ் சிறக்கும் அகப்பாக்களும் வீரச்செயல் விளக்கும் புறப்பாக்களுமேயாம். இப்பாணர்கள் யாழ்கையேந்திப் பாடும்போது, கேட்போரெல்லாம் பெருமகிழ்ச்சியுற்றுப் பரவசராவார்கள். அரசர்களும் வீரர்களும், தம்புகழ் பாணர்களாற் பாடப்படுவதையே யாவற்றினும் உயர்ந்த கௌரவமாகப் பாராட்டி வந்தார்கள். ஏனெனில் இப்படிப் பாடல் பெற்றவனுடைய புகழ் விரைவில் நாடுமுழுதும் பரவுமென்பதனால் சில ஸமயங்களில், இப்பாக்களை காரணமாக, கட்டழகுமிக்க கன்னிகையொருத்தி, பாட்டுக்குரியவனை மணஞ்செய்து கொள்வதும் உண்டு. இதுபற்றியே, இப்பாணர்கள், மிக்க செல்வாக்குடையவர்களாய், அரசர்களாலும் ஐச்வர்யவான்களாலும் ஆதரிக்கப்பட்டு வந்தார்கள். இன்னும் இவர்கள் ஒருவனைச்சுட்டி 'நீ கெடுக' என்று * அறம்பாடுவார்களாயின், அவன் கெட்டழிவது நிச்சயம் என்றும் ஜனங்கள் நம்பினார்கள். ஆதலால், இப்பாணர்களிடத்தில் ஜனங்களுக்கு மிக்க பயமும் உண்டு. இவர்களில் ஒருவா ஒரு அரசனைக்குறித்து அவன் கொடுங்கோல் வேந்தன்

---

* அறம் பாடுதல்-பிறர் கெடும்படி பாடுதல். "அறம்-தீமை"— நா. கதிரைவேற்பிள்ளை அகராதி. அரம் என்றிருக்கலாம் என்பது சில அறிஞருடைய கொள்கை.

எனப்பாடிஞல், அதுகேட்டு நாடுமுழுவதும் அவ் வாசனை எதிர்க்க ஒன்று சேர்ந்து விடுவதும் உண்டு.

இப்பாணர் வகுப்பினனுன ஒரு வாலிபன் சாளுவனது ஸபையில் வந்துதோன்றினனென்று முன்னே சொன்னேம். சாளுவன் ராஜ்யத்தை அரசனிடமிருந்து வலிதிற் கைப்பற்றிக்கொண்டு ஆட்சி செய்வதைப்பற்றிக் கோபத்திஞல் அவ்வாலிபன் மனம் கொதித்துக்கொண்டிருந்தது. தன் கல்விப்பயிற்சி முடிந்தவுடன், அவ் வாலிபன் தனது முன்னேர் தொழிலேயே தானும் தனதாக்கிக்கொண்டு, ஜீவனம் செய்யவேண்டுமென்று அப்பொழுதுதான் முதல்முதல் புறப்பட்டான். அப்படிப் புறப்பட்ட அவனது உள்ளத்தில் ஓர் எண்ணம் உதித்தது; அதாவது, தான் முதலில் சாளுவன் ஸபையிற்சென்று, அவன் செய்தது அநீதியென்று அவனுக்கு எடுத்துக்காட்டி, அவனது கருங்கல் மனத்தையும் கனியும்படி செய்து, பாக்யஸ்தனுகிய அரசனைப் பாழுஞ் சிறையினின்றும் மீட்கவேண்டும் என்பதே. ஆதலால் தனது முதற்பாடல் இது விஷயத்தைப்பற்றியே இருக்க வேண்டுமென்று தனக்குள்ளே அப்பாணச் சிறுவன் முடிவு செய்துகொண்டான். சிறுவனே, இளமையும் திறமையும் இனிது சேரப்பெற்றவன். சாளுவனுடைய சினத்திற்கு அவன் சிறிதும் அஞ்சாதவனென்று அவன் முகக்குறியே தெளிவாகக் காட்டியது. அவனது பரந்த கண்கள் மிக்க ஒளியுடன் ப்ரகாசித்தன. அவனுடைய கம்பீரமான தோற்றத்தைக் கண்ணுற்றுரெல்லாம், 'அவன் தன் கோரிக்கைப்படி அரசனை மீட்பன்; அன்றேல், அதுபற்றித் தன்னுயிரை மாய்க்க நேரினும் மாய்ப்பன்' என்று பேசிக்கொண்டனர். அவன் கையிற்கொண்டிருந்த யாழோ, சாஸ்த்ர முறைப்படி அமைக்கப்பட்டது. அதில், மரவேலைப்பாடு

தந்தியின் சேர்க்கை முதலியன வெல்லாம் மிக்க சாதுர்ய மாகச் செய்யப்பட்டிருந்தன. அவன் அதைக் கையிலெடுத்துப்பாட ஆரம்பித்தால், அப்போது வீணைகானத்தோடு அவனது சாரீரமும் இசைந்து விளைக்கும் இசை நயம் இப்படிப்பட்டதென எவராலும் இசைக்க முடியாது.

இவன் இப்போது பாடுவதற்கு எடுத்துக்கொண்டிருக்கும் விஷயமோ மிகப் பரிசுத்தமானது: அறமே உருவெடுத்தாற்போன்ற அரசனைச் சிறையினின்றும் விடுவிக்க வேண்டுமென்னும் நோக்கமுள்ளதன்றோ இவ் விஷயம். இதனினும் சிறந்த நோக்கம் இவ்வுலகில் ஏதேனுமுளதோ? இக்கருத்துடன் *அரசவை வந்துற்ற அப்பாணனும், கையில் வீணையை ஏந்தி, அங்கிருந்த ஒரு பெருந்தூணிற் சற்றே சாய்ந்து நின்றனன். அந்த ராஜசபையோ, மிகவும் விஸ்தாரமானது. அவன் சாய்ந்திருந்த தூண்மேல், உயர்ந்த வெண்சாந்தினாற் செய்த ஒரு அழகிய பெண்ணுருவம் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த ப்ரதிமையின் முகத்தில் அழகு குடிகொண்டிருந்தது. அதனைச்செய்த சிற்பி பல மாஸங்களாக அவ்வொரு வேலையிலேயே முயன்றிருந்தான். அச்சிற்பிக்கு, அவ்வேலை முடிந்தவுடன், சந்த்ரகிரியரசன், ஸர்வமானியமாகச் சில க்ராமங்கள் பரிசளித்தனனும். அந்த உருவம், சிறந்த சலவைக்கல்லிலிருந்து வெட்டிச் செய்யப்பெற்ற சிலைபோல் விளங்கியது. அதைப் பார்த்தோரெல்லாம் எத்தனையோ முறை அதனைப் பார்த்தவண்ணமே நின்றிருக்கிறார்கள். எவ்வளவோ அரசர்களுடைய கோபத்தை அந்த அழகிய உருவம் சமனம் செய்து, அவர்கள் குற்றவாளிகளுக்கு விதிக்கும் தண்டனையைக் குறைவுபடுத்தியு

* அரசவை—ராஜசபை.

யிருக்கிறது. இத்தகைய உருவத்தைத் தாங்கிநின்ற தூண் மேற் சாய்ந்துநின்ற அவ் வாலிபப்பாணனும், இவ்வுலகவாழ்க்கை நிலையற்றதென்றும், செல்வமும், அதிகாரமும் அடிக்கடி மாறிவிடுந்தன்மை யுடையனவென்றும், ஸத்யமும் நீதியுமே எக்காலத்தும் அழியாது நிலைத்து நிற்பனவென்றும், தெய்வத்தன்மை இன்னதென்றும், மானிடரியற்கை இன்னதென்றும், பட்டமரங்களுந் தளிர்க்கும்படி பாடிவருகையில், அந்தக்கெட்ட எண்ணமுள்ள சாளுவன் மனமும், எப்போதும் தனக்கு இயல்பாகவுள்ள பேராசைக் குணத்தை மறந்து, பாட்டிலும் அதன்பொருளிலும் ஈடுபட்டிருந்தது. இங்ஙனம் சற்றுநேரம், பைசாச குணத்துடன் மானிடவுருக்கொண்ட சாளுவனது மனத்தில் மனிதப்பிறவிக்குரியதும், அவனியல்பிற்கு முற்றும்மாறானதுமான தெய்விகவுணர்ச்சி சிறிது எழுந்தது. அதனை நோக்கிய நம்பாணச் சிறுவனும் மேலும் பாடுவானாயினான் :—

பொன்னாலும் மணியாலும் புனைவுபெறும் ஆஸனமும்,
    புகழை வேண்டிச்
சின்னாளாய்த் தரிக்குந் திருமுடியும், கோபுரத்தாற்
    சிறப்புற்றோங்கும்
தன்னேரி லாதன தரண்மனையும், பேரவையும்,
    சற்று நோக்கின்,
என்னாகும்? இவையிந்த மண்ணன்றோ! இவ்வுண்மை
    இனித்தேர் வாயே.

வேறு.

எண்ணிலாத குடிகளுக்கிங் கிறைவனாக எண்ணுநீ
மண்ணுலாவு சாம்பலே மரித்தபின்னர்; ஆதலால்
பண்ணுலாவு பாடலைப் பரிந்துகேட்ட நீயினித்
திண்ணமாக உலகியற்கை தெரிந்துசிந்தை தெளிவையே.

வேறு.

ஸத்தியமும் நீதியுமே தழைத்துலகில் என்றும்
நித்தியமாம்; மற்றிதனை நேர்மையுற நோக்கி
இத்தினமே சிறையினின்றெம் இறைவனை நீ விடுத்தே
எத்தினமும் அழியாத இசையுடன்வாழ் குவையே.

இப்பாணன் பாடல்களைக்கேட்ட சாருவன் மனத்தில் தெய்விகவுணர்ச்சி சிறிது முதலில் தோன்றிற்று என்று முன்னே சொன்னோம். எனினும், அப்பாணனது நோக்கம் இன்னதெனத் தெளிவாகப் புலப்பட்டவுடனே, சாருவன், பழைய சாருவனேயாயினன். அவனுடைய பிறவிக்குணம் புதிதாகத் தோன்றிய அத்தெய்விக வுணர்ச்சியை முற்றிலும் மறைத்துவிட்டது. சிறைபுண்ட அரசனை விடுவிக்கவேண்டுமென்பது தன் செவிகளிற் சேரா முன்னமே அவன் கண்களில் நெருப்புப்பொறிகள் பறந்தன. பக்கத்திலுள்ளவர்களெல்லாரும், சிறுவன் கதி யாதாகுமோவென்று ஏங்கினர். இச்சமயத்தில், சிறுவன், சாருவன்முகத்தில் தோன்றிய வேறுபாட்டினைக் கண்டதும், மனோதைரியம் முன்னிலும் மிகப்பெற்றவனாய், பின்வரும் பாவினைப் பாடினன் :—

மாட்சிசால் இந்த மகுடமோ கள்ளச்
சூழ்ச்சிசால் நினது *துகள்முடி தரிப்பது!
பாழ்த்தநின னுடலமோ பாத்யதை யோடிச்
சேர்த்தசிங் காதனம் சேருவது! அந்தோ!!
அரசவை யரண்மனை ஆமிவை யெல்லாம்
†விரஸமார் நினகெனை விளம்புதல் பேதாய்!
நன்றே! நன்றே!! சாலவும் நன்றே!!!

வாலிபன் தன்னையும் மறந்து ஆவேசமுற்றவன்போற் கூறியவந்தவற்றைக் காதாறகேட்டான் சாருவன். கேட்

* துகள்—குற்றம் † விரஸம்—ரஸமில்லாமை; ஆர்—நிறைந்த

டதுதான் தாமஸம்; உடனே, காயப்படுத்தப்பட்ட புலியானது மிக்க ஆக்ராஹத்துடன் தன் எதிரிமேல் எப்படி ஒரே பாய்ச்சலாய்ப் பாயுமோ, அப்படியே, சாளுவனும், கோபத்தினால் தலைதெரியாதவனாய், 'என்னையா இவ்வாறு இழிவாகக் கூறினாய்!' என்று சொல்லி, அவ்வாலிபபாணன் மீது பாய்ந்து, தன் கையிலிருந்த வேலினால் அவனது மார்பில் அழுந்த ஒரேகுத்தாய்க் குத்தினான். உடனே, அச்சிறுவன் கண்டத்தினின்றும் எழுந்த இனியசங்கீதம் நின்றுவிட, அதற்குப்பதிலாக அவனது மார்பினின்று எங்கும் இரத்தவெள்ளம் பொங்கியெழுந்தது. கீழேவிழுந்து குற்றுயிருடன் கிடந்த அவ்வாலிபனுடைய உதடுகள் சிறிது அசைவனபோற் காணப்பட்டன. உடனே அவன் மெல்லிய குரலுடன்,

கைவேலா லென்னைக் கடிந்தனைகாண்; என்சொல்லாம்
மெய்வேலுன் வம்சமெலாம் வீட்டுவது—பொய்போகாது;
இன்னுங்கேள்; தீயோய்! நீ ரமக*கடனின்றிப்
†புன்னரகம் ‡புக்கொழிவை போ.

என்று தன் மரணதசையில் சாளுவனைச்சபித்துப் பாடினன். பாட்டு முடிந்தும் சிறுவனுக்கு நினைவுநன்றாக இருந்தது. அவன் சுற்றுமுற்றும் விழித்துப்பார்த்தான். அங்கே தூணின்மேலிருந்த அந்த திவ்விய உருவம் அவன் கண்ணிற் பட்டது. அதனை உற்றுநோக்கிக்கொண்டிருந்த சிறுவன், அரைநிமிஷகாலம் எதையோ குறித்து ஆழ்ந்து சிந்திப்பவன்போற் காணப்பட்டான், பிறகு, சாகுந்தறுவாயில் தனக்கிருந்த முழுபலத்தோடும், தனது சிறந்த வீணையைச் சுழற்றி மிக்க விசையுடன் அவ்வழகிய ப்ரதிமையின்மேல்

*ரமம்—சுடுகாடு; ரமக்கடன்—உத்தர க்ரியை! †புல்நரகம்—அற்பமான நகரம்; ‡புக்கு—புகுந்து

வீசினன். உடனே, அவ்வுரு பொடிப்பொடியாய்த்தரை யில் உதிர்ந்ததுமன்றி, அந்த வீணையும் நூறு துண்டாய்த் தெறித்தது. சிறுவனது கடைசி மூச்சும் அப்பொழுதே நின்றுவிட்டது. இப்படி, அந்த ராஜஸபையில், ஒரேக்ஷணத் தில், அரசனைச் சிறைமீட்கவேண்டுமென்னும் மிக்கபெருந் தன்மையான நோக்கத்துடன் சென்ற பாணச்சிறுவனே, மண்மேல்மண்ணாய் மரித்துக் கிடந்தனன். ஸத்யத்தையும், நீதியையும்பற்றிக் கல்லும் மரமும் கனிந்துருகும்படி இனி மையாகப்பாடிய அவன் குரலும் அப்பொழுதே அடங்கிப் போயிற்று. அவன்குரலுக்கு இசைந்த யாழும், தூள் தூளாக நொறுங்கியொழிந்தது. அந்த அரசவைக்கு ஒரு தேவதைபோல மிகுந்த அழகுடன் முகமலர்ந்து விளங்கிய ப்ரதிமையும், பொடிப்பொடியாய் உதிர்ந்து கிடந்தது.

அத்யாயம் 3. ஒரு பெரும்பாதகச் செயல்.

நம்கவிகளில் ஒருவர், மனிதனுடைய இயல்பும் செய லும் பூமியின்மேலேயுள்ள மண்ணுக்கு ஸமானமென்று பாடியிருக்கிறார். மண்ணே, நாவுக்குச் சுவையற்றதா யினும் மிக இனிய பழங்களைத் தரும் மரங்களை வளர்க்கின் றது, மூக்கிற்கு மணமற்றதாயினும், முதல்தரமான முல்லை மல்லிகை முதலிய மலர்கொடிகள் வளர்வதற்குக் காரண மாயிருக்கின்றது. இன்னும், அது, காணுதற்கு அழகிய காட்சி தராவிட்டாலும், அதிலிருந்தே, பேரழகு வாய்ந்த பெண்களுடையமுகம், கண், கைமுதலிய உறுப்புக்களுக்கு உவமையாக உரைக்கப்படுவதும், கண்டோர் கண்ணையும், மனதையும் கவரும்படியான காட்சியுடையதுமாகிய *பங்கஜமலர்கள் வெளிவந்து விளங்குகின்றன. இப்படிப்

*பங்கஜம்—தாமரை; சேற்றில் முளைப்பது, காரணப்பொருள்.

பட்ட சுவைக்கனிகளும், நறுமலர்களும் ஒரு பக்கத்தில் தோன்று நிற்ப, அம்மண்ணினின்றே விஷக்கனிகளும், தீ நாற்றமுள்ள பூக்களும் மற்றொரு பக்கத்தில் தோன்ற வில்லையா ? மண்ணெனப்படுவது இவ்வித இருவித இயல் புடையது மனிதனும் இப்படிப்பட்ட இயல்புள்ளவனே.

இன்னும், வாழை மல்லிகை தாமரை முதலியவற்றின் சாராம்சம் அவற்றின் வித்தில் அமைந்துள்ளது எனக் கூறலாமெனினும், அவ்வித்து மண்ணுடனே சேர்ந்திருந் தால்தானே பயன்படுவதாகின்றது. அதுபோலவே மனித னும், நற்குணம் அமைந்த பெரியோர்களாலும் நண்பர்க ளாலும் நல்லவழியிலே நடத்தப்பெற்று வருவானானால், அவன் சிறந்த குணவானாகின்றான், அன்றி அற்பருடன் அதிகமாகப் பழகிக் கெட்டவழியிலேயே பயின்று வருவ னேல், அவன் மிக்க அயோக்யனாகின்றான். நன்மை, தீமை என்பன மனிதனுடன் பிறந்துவரும் பிறவிக்குணங் களே என்றாலும், அப்பிறவிக்குணம் நிலைத்து வளர்ச்சி யுறுவது கால தேச வர்த்தமானத்தைப் பொறுத்திருக் கின்றது, தேசசரித்திரத்தில் சேர்ந்தவர்களிலே நல்லவர் களும் உளர்; கெட்டவர்களும் உளர். கெட்டவர்களாகக் காணப்படுபவர், வேறொருகாலத்திலும், வேறோரிடத்தி லும் வேறுவிதமான நிலைமையிலும் இருந்திருப்பரேல், அவ ரே ஒருகால் மிகவும் சிறந்தவர் எனப்படினும் படலாம் இவ்வாறு மனிதனுடைய குணம் அவனது சுற்றுப் புறத்தி லுள்ள மனிதர்களாலும் பொருள்களாலும் மாறுத லடையுமென்பது வெளிப்படை. சிற்சில சமயங்களில், ஒரே செய்கையால், ஒருவனுடைய குணம் முற்றும் மாறிப் போவதும் உண்டு.

உலகில் மானிடரியற்கை இவ்வாறாக, அநியாய் அரசு கவர்ந்த அமைச்சன் மனநிலை என்னென்று சற்று ஆராய்வோம். சாணுவன் எப்போதும் படபடப்பும் பேராசையு முள்ளவனா. அவன் காலத்தில் அரசனைக் குடிகளெல்லாம் அவதாரபுருஷனாக மதித்தார்கள். அரசனுக்கிருந்த அதிகாரத்துக்கோ அளவேயில்லை. மந்திரியும் அக்காலத்தில் ஸர்வாதிகாரிதான். அப்போது இந்தியர்கள், அரசன் வேறு அமைச்சன் வேறு என்று எணணவில்லை. அரசனைக் காட்டிலும் மந்திரியே தங்களுக்கு அதிக நன்மை செய்யக்கூடும் என்பதை அவர்கள் நினைத்தும் இலர். இப்படிப்பட்ட குடிகளுக்கு இறைவனாய்விட்ட சாணுவன், தன்னைப்பற்றித் தானே மிக உயர்ந்த எண்ணம் கொண்டானா. அருள் அன்பு இவைகாரணமாக, ஒருவித அறச்செயலும், தானே தனைகயால் அவன் செய்வதில்லை. அப்படிச்செய்வது தனது கௌரவத்திற்குக் குறைவென்று அவன் எண்ணினன் போலும். அவனுடைய அரசாட்சி ஜனங்களுக்குத்ருப்திகரமாகவேயில்லை. அங்கங்கே குடிகள் தம் வெறுப்பை வெளிப்படையாகக் காட்டத்தொடங்கினர். "இச் சாணுவனுக்கு அரசுரிமை ஏது?" எனப் பேசவுந்தலைப்பட்டனர். இவையெல்லாம் சாணுவனுக்கு மிக்கக் கவலையை விளைததன.

இந்த நிலைமையிலிருந்த சாணுவன் முன்னே, பெருந்தன்மையும் தைர்யமும் வாய்ந்த அப் பாணர்குலச் சிறுவன் அரசவையில் அவன் செயல் அக்ரமமானது என்று எடுத்துக்காட்டியபோது, அது, சாணுவன் காதில், காயம்பட்ட இடத்தில் கனல்கொண்டு சுட்டாற்போல் இருந்தது. அச்சிறுவன் வேலால் குத்துண்டு இறக்கும்பொழுது இட்ட சாபமும், மிகத்தெளிவாக அவன் காதிற்பட்டது. இதெல்

லாம் நடந்தபிறகு, சாளுவன், தனியாக ஓரிடம் சென்று, அன்று நிகழ்ந்தவற்றைக் குறித்துப் பலவாறு சிந்தித்தான். அன்றிரவு முழுதும் அவனுக்குத் தூக்கமென்பது சிறிதும் வரவேயில்லை. அவன் பின் வருமாறு யோசிக்கலானான்:—

'அரசனைச் சிறைப்படுத்தியதனால் குடிகளுக்கு என் மேல் உண்டாயிருக்கும் வெறுப்பு, புகைந்துகொண்டிருக்கும் நெருப்பைப்போன்றிருக்கின்றது. எனது முன் ஜாக்ரதையினாலே, வெறுப்பென்னும் அப்புகையினின்றும் கலகமென்னும் நெருப்பு மூண்டெழாமலிருக்கிறது. எனக்கு எதிரிகளாயுள்ளவர்களெல்லாரும், என்னுடைய சேனையினது பலத்துக்கு அஞ்சி, ஒன்றுஞ்செய்யாமலிருக்கின்றனர் போலும்? அப்படியாயின், இன்று என் முன்னே தோன்றிய பாடக சிறுவனது செய்கையை என்னென்று கொள்வது? இவனை முன்னே என்னிடம் போகும்படி தூண்டி இதன்பயன் என்ன ஆகின்றதென்று தூரநின்று பார்க்கும் துஷ்டர்கள் எத்தனைபேரோ? இன்னுமொரு விஷயம்: தர்பார் மண்டபத்தில் நெடுநாளாயிருந்த அந்த அழகிய ப்ரதிமை, ஒரேக்ஷணத்தில் தூள்தூளாய்ப்போயிற்றே? அதுவும் ஒரு துர்நிமித்தமாகவன்றோ தோன்றுகின்றது? இதுபோலவே எனது குலமும், அரசும் சீர்குலையுமோவென்று என்மனம் மிக அஞ்சுகின்றதே. அப்படியாகாமல் இருப்பதற்கு நான் செய்யவேண்டுவன யாவை? ஒரு யோசனை தோன்றுகின்றது. அரசனும் அவன் குலத்தாரும் உயிர்த்திருக்கும் வரையில், ராஜவிச்வாஸத்தினால் ஜனங்கள் என்மீது வெறுப்புற்றே யிருப்பார்கள். எப்படியாவது, இவ்வரசனையும் இவனைச்சார்ந்தவர்களையும் முடித்து விட்டால், குடிகள், நானிருக்க, வேறொருவனை அரசனாக்கமுயலார்கள். எனது ஆட்சியும் நிலைபெற்றதாகும். இதுவே

முடிவான எண்ணம். இனிச்சிறிதும் காலதாமஸம் செய்யக்கூடாது.'

என்றிவ்வாறு இரவெல்லாம் தனக்குள் எண்ணமிட்டுக்கொண்டிருந்த சாருவன், மறுநாள், பொழுதுவிடிந்ததும் விடியாததும், தனக்கு நண்பனும் சுற்றத்தானும் தான் சொல்வதெல்லாம கேட்பானுமாகிய அபலன் என்பானை வருவித்து, தனது கருத்தை அவனுக்குத் தெரிவித்தான்; பிறகு, பாடகச்சிறுவனைக் குத்திவீழ்த்திய தன் கைவேலை அவன்கையிற் கொடுத்து, "எனதன்பிற்குரிய அபலனே இந்நாளே, சிறைச்சாலையுட்கிடக்கும் அரசனுக்கும் அவன் ஸந்ததியாருக்கும் கடைசிநாள். உன்னுடன், நம்பத்தகுந்த சிலவீரரைக் கூட்டிக்கொண்டு, இவ்வாயுதத்தினால் நீ அவர்களைவேலை தீர்த்துவிடு. இன்னுமொன்றுகேள்: அரசன் விரலில் அணிந்திருக்கும் ரத்னமோதிரம் உனக்குத்தெரியுமே? அது இவ்விஜயநகர ராஜியத்தை முதல் முதல் ஆண்டுவந்த அரசனுக்கு, பல நூற்றாண்டுகளுக்கு முன் பம்பை நதிக்கரையில் தவஞ்செய்துகொண்டிருந்த ஒரு முனிவர் கொடுத்தது. அவர் அதனைக்கொடுக்கும்போது, "இந்த ஆழியை அணிந்துகொண்டு ஆண்டுவரும் அரசனுடைய அரசு எப்போதும் செழித்து ஓங்கக்கடவது" என்று கூறியருளினார் என்பதை நாமெல்லாரும் கேள்விப்பட்டிருக்கிறோமன்றோ? நீ மங்களகரமான அம்மோதிரத்தை மறக்காமல் என்னிடம் சேர்ப்பிக்கவேண்டும். எல்லாவற்றையும் சாதுர்யத்துடன் ஸமயத்துக்குத் தக்கபடி முடித்துவிடு. ஜாக்ரதை! ஜாக்ரதை!! நீ திரும்பவும் வந்து பதில் சொல்லும்வரையில் எனக்கு வேறொன்றன்மேலும் கருத்துச் செல்லாது" என்றுசொல்லி முடித்தான். அப்படியே அபலனும் சிறைச்சாலைவந்து சேர்ந்தபொழுது, சிறைப்

பட்டிருந்த அந்த நல்ல அரசன் அப்போது தான் படுக்கையைவிட்டு எழுந்துகொண்டிருந்தான். அப்படுக்கையோ வைக்கோலாலாகியதொன்று; அது மாடுகள் படுப்பதற்கு உரியதேயன்றி, மனிதர் துயில்வதற்குச் சிறிதும் ஏற்றதன்று. அரசனுக்கு ஆறுமாஸகாலமாக ஏற்பட்டிருந்தது இவ்வைக்கோற்படுக்கைதான். இந்த ஆறுமாஸகாலத்திற்குள் அவன்முகம் வெளேரென வெளுத்து விட்டது. அவனுடம்பும் கூனிக் குறுகி விட்டது. சிறைபுகும்போது அவன் தலைமயிரில் ஒன்றேனும் நரைமயிரில்லாதிருந்தும் இப்பொழுதோ தலைமயிர் முழுவதும் நரைத்துப்போயிருந்தது. இந்த அரை வருஷத்திற்குள், அரசன், தன்னிலும் பதினைந்து இருபது ஆண்டு வயதுமுதிர்ந்த ஒருவனைப் போலக் காணப்பட்டான். ஐயோ! பாவம்!! இறைவனால் எல்லாப் பிராணிகளுடைய இன்பத்திற்காகவும் உண்டாக்கப்பட்டிருக்கும் காற்றும் வெளிச்சமுங்கூட, அரசனுக்கு இந்த ஆறுமாதமாக வேண்டிய அளவு இல்லையாயின.

இந்நிலையிலிருந்த அரசனைக் கண்டவுடனே, அபலனுடைய மனமும் இளகிற்று. இப்படி இரக்கமுற்ற மனத்துடன், அபலனும், அரசன் பக்கம் சென்று, அங்கு ஓர் ஆஸனத்தில் இருந்துகொண்டு கூறுவான்:—“ எனது தலைவராகிய சாளுவமகாராஜாது ஸபையில் மிக்க துணிவுடன் வந்து தோன்றி உங்களைச் சிறையினின்று விடுவிக்கவேண்டுமென்று மன்றாடின ஒருபாணச்சிறுவனது கதியைப்பற்றி உங்களிடம் சொல்லிவர அம்மகாராஜா என்னை இங்கு அனுப்பினார். நேற்றுவந்த அச்சிறுவன், இன்னும் என் கண்முன் வீணையுங்கையுமாக நிற்பவன் போலத் தோன்றுகின்றனன். அவன் பித்தேறியவனைப்போல் முரட்டு தைரியம்கொண்டு அரசவைக்கு அஞ்சாதிருந்ததும், கடைசியாக

மஹாராஜாவை அவமதித்ததும் அவனுக்கு என்ன பயனை விளைத்தன? அவன் உயிரிழக்க நேர்ந்ததே அதுதான் அவன் பெற்ற பயன்" என்று இவ்வாறு அபலன் கூற, அரசனும், "என்னுயிர்க்காகத் தன்னுயிரைப் போக்கிய இப்பெருந்தன்மையுள்ள வாலிபனுக்காக நான் பெரிதும் இரங்குகின்றேன். அவன் ஸ்வர்க்கம் சேர்ந்து நல்லின்பமடைவானாக" என்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே, அவன் கண்ணிலிருந்து முத்துப்போன்ற ஒருபெரிய கண்ணீர்த்துளி கீழே விழுந்தது. அப்போது, அபலனும் "என்ன! நீங்கள் அச்சிறுவனைப் பெருந்தன்மையுடையவனென்று கருதுகின்றீர்கள்? நாங்கள் அவனைச் சிறு பிள்ளைத்தனமுள்ள முரடனென்றெண்ணுகின்றோம். சிறிதும் பயன்படாதென வெளிப்படையாகத் தெரிந்திருக்கும் ஒரு விஷயத்தில் குருட்டுத்தனமாக ஊக்கங் காட்டுவது பெருந்தன்மையா? அன்றி, பேதமைக் குணமா? அவன் செயலால், வயோதிக நிலைமையிலுள்ள அவனுடைய பெற்றோர்களுக்கு எவ்வளவு துன்பம் ஏற்பட்டிருக்கும்? இம்மட்டோடு நின்றதோ அச்சிறுவனது செயலின் பயன்? நன்மை செய்யவந்தவன் என நீங்கள் கருதிய அவனால் உங்கட்குந் தீமையே உண்டாயிருக்கின்றது. எப்படியெனில், நீங்கள் இல்லாதிருப்பின் நேற்றுவிஷயம் ஒன்றும் நிகழ்ந்தேயிராதென மஹாராஜா நினைக்கிறார். இவ்வாறு நாட்டிற் கலஹமுண்டாவதற்குக் காரணமாகிய தங்களை ஒழித்துவிடுவதே தேச நன்மையைக் கருதிச் செய்யத்தக்க விஷயம் எனத் தீர்மானித்து, சாளுவ மஹாராஜா என்னை அனுப்பியிருக்கிறார்" என்றான்.

இப்படி அபலன் தன் கருத்தைச் சொல்லி முடிக்க, அரசன் சிறிதும் மனங்கலங்காது, "இப்படியா சாளுவ

னது எண்ணம் இருந்தது ! இருக்கட்டும், அப்பாணச்சிறு வனைப் பயித்தியக்காரனென்று நீங்கள் நினைக்கின்றீர்கள் ? நான் அப்படி நினைக்க வில்லை; அவன்போன்ற ஆவேசமுள்ள தேசபக்தர்களால் நாட்டுக்கு நன்மை ஏற்படுமென்பது பலதேச சரித்ரங்களால் நன்கு அறியலாகும். நாட்டின் நன்மையைக்கருதியா என்னைக் கொல்லவேண்டுமென்று சாறுவன் சொல்லி யனுப்பினான் ? என்னுயிர் போவதனால் என் குடிகளுக்கு நன்மை யுண்டாகுமாயின், ஒருமுறையன்று, ஓராயிரம் முறையெனினும் நான் சாவதற்கு ஸித்தனாக இருக்கின்றேன். அரசன் குடிகளின் நன்மைக்காகத் தானே இருக்கின்றான். நீ இச்செயலை முடிப்பதற்கே இங்கு வந்திருப்பாயானால், அதனை இப்பொழுதே செய்துவிடுக. இங்கே இந்தக்கொடிய சிறைச்சாலையிலிருந்து காலங்கழிப்பதிலும், எனது நாட்டார் நன்மைக்காக நான் உயிர்நீத்து ஸ்வர்க்கம் புகுவது எவ்வளவோ உயர்வுடையது!" என்றனன்.

இங்ஙனம் சலியாத சிந்தையுடையவனாய் அரசன் மொழிந்தவற்றை யெல்லாம் கேட்டுவந்த அபலன், அரசனது மாட்சிமைக் குணத்தால் தன்மனம் உருகப்பெற்று "ஐயா ! எண்ணிவந்த கார்யத்தை செய்ய நினைக்கு முன்னரே எனது கை நடுங்குகின்றது ; மனமும் சோர்கின்றது; நானோ, இதோ அவ்வாலிபனைக் கொன்ற இவ்வேலினாலேயே இக்கார்யத்தைச் செய்து முடிக்கவேண்டுமென்று உத்திரவு பெற்றிருக்கிறேன். நாம் செய்ய வேண்டியது இதனோடு முடியவில்லை. அதை எப்படி என்வாயால் நான் சொல்லுவேன். உங்கள் குலத்தார் எல்லோரையும் நானே இன்று கொன்று முடிக்க வேண்டும் என்பது மஹாராஜாவினுடைய ஆக்ஞை.

இவற்றால் எவ்வளவுபாவம் வந்து என்னைச் சூழுமோ, அறியேனே!" என்று மனம் தழுதழுத்துச் சொல்ல, அதற்கு அரசனும், "இந்தவேலால் இறக்கும்படி ஏற்பட்டதே; இதை, வேறு எவ்விதமான மரணத்திலும் ஏற்றமுடையதாக நான் எண்ணுகிறேன்: இவ்வேல், அந்த உத்தம வாலிபனுடைய மார்பினை ஊடுருவிப் பிளந்ததன்றோ? அதை இங்குக் கொடு. நானே அதனால் என்னைக் குத்திமாய்த்துக்கொள்ளுகிறேன்: கொலைத்தொழிலால் உனக்குப் பாதகமுண்டாகுமென்று நீ அஞ்சாதே" என்று கூறிவிட்டு, அவ்வேலை எடுத்துக்கொண்டு சிறை கோட்டத்தின் உள்ளே சென்றான்.

இவ்வாறு உள்ளேசென்ற அரசன் தன் மனைவி மக்கட்கு இனி நடக்கப்போவனவற்றைக்குறித்துச் சொல்லிக்கொண்டிருக்கையில், அரண்மனைத் துணிகளை வெளுக்கும் வண்ணான் அழுக்குத் துணிகளைச் சேர்த்து மூட்டையாகக் கட்டிக்கொண்டிருந்தான். அப்போது, அரசனது உள்ளத்தில் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. தோன்றவே, அரசன் அவ்வண்ணானை நோக்கி, "நீ ஒருவனே எனது மரணதசையில் இங்கு என் கண்முன் இருக்கிறாய். உன் பழைய அரசனாகிய எனக்கு இப்போது ஒருதவி செய்வையானால், உனக்குப் புண்யமும் புகழும் உண்டாகும். என்மீது உனக்கு விசுவாசம் உண்டென்பதையும், நீ புது அரசனுக்குப் பயந்தே அந்த விசுவாசத்தை வெளியிற்காட்ட அஞ்சுகின்றாயென்பதையும் நான் நன்றாய் அறிவேன்" என்று சொன்னான். அதற்கு அவ் வண்ணானும், "எஜமான்களே! அவ்விடத்து உத்திரவு எதுவாயினும் அடியேன் அதன்படி நடக்க ஸித்தனாயிருக்கின்றேன். தாங்கள் காலாலிட்ட வேலையைத் தலை

யாலே தாங்கிச்செய்யும் தாஸனன்றோ நான்? நான் செய்ய வேண்டியதைக் கட்டளையிட்டருளுங்கள், எஜமான்களே' என்று மிக்க வணக்கத்துடன் விடைகூறினன். உடனே, அரசனும், மிகவும் தாழ்ந்த குரலுடன், "இங்கு நிற்பவன், ஸ்ரீரங்கராயன் என்னும் எனது இரண்டாம் பிள்ளை. இவனை உன் துணிமூட்டையுடன் சேர்த்துக்கட்டி, அரண்மனைக்கு வெளியே எடுத்துப்போய், உன் குடிசையில் இன்று பகல் முழுவதும் மறைவாக வைத்திருந்து, இரவில் எங்கேனும், அயலூருக்குப் போகும்படி அனுப்பிவிடு; இதுவே எனது வேண்டுகோள்" என்று சொன்னன். வண்ணனும், 'சித்தம், மஹாராஜா! அப்படியே ஆகட்டும்" எனவே, அரசன், அங்கிருந்த பனையோலையை யெடுத்து, அதன்மேல் தந்தப்பிடியுள்ள தனது எழுத்தாணியால், "இவன் எனது இரண்டாம் புத்ரனுகிய ஸ்ரீரங்கராயன் என்பவனே. இவன் கையில் வைத்திருக்கும் ரத்னமோதிரம், எனது முன்னோர்கள் அணிந்துவந்த மிக்க சிறப்புள்ள கணையாழியாகும். இவனுக்கு அத்ருஷ்ட காலம் கைகூடி வரும்போது, இவனைப்பற்றி யாவது இவனுடைய மோதிரத்தைப் பற்றியாவது ஒருவரும் ஐயப்பட வேண்டாம். இது என் கையினலேயே எழுதியது. இந்தப்படி வேங்கடராய ராஜன்" என்று மிகவிரைவாக எழுதிமுடித்து, தான்பட்டத்துக்கு வந்தது முதல் ஒருநாளும் தன்கையினின்றும் வாங்காத கணையாழியைக் கழற்றி, அதை அவ்வோலையோடு ஒரு பட்டுக்குட்டையிற் சிக்கென முடிச்சிட்டு, அக்குட்டையை அரசிளங் குமரனது கையினிற்கட்டி, அம் மைந்தனை நோக்கி, "குழந்தாய்! இதை நீ ஒருபோதும் அவிழ்க்காதே. நான் கட்டியவண்ணமே இது உன் கையிற் கட்டுண்டு கிடக்கட்டும். இதுதான், நான் உனக்குக் கடைசியாக என் கையினற் கொடுக்கும் ஆஸ்தி

இன்று பகல் முழுதும் இவ்வண்ணனுடன் இவன் வீட்டில் இரு, இரவில் எங்கேனும் தூரதேசத்திற்கு ஓடிப்போய் அங்கே ஆடு மாடு மேய்க்கும்படியாயினும் மேய்த்து, நீ உயிர் பிழைத்திரு. அதோ அந்தத் திருப்பதி மலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் கடாக்ஷமிருக்குமேல், [இருவரும் சந்த்ரகிரிக்குப் பக்கமுள்ள திருமலையை நோக்கி வணங்குகின்றனர்.] நீயும், உரியகாலத்தில் உன் குலத்து முன்னோர்கள் ஆண்டுவந்த நாட்டிற்கு அரசனாக முயலலாம். அப்படி முயற்சி செய்யும்போது, உனக்கு உதவியாக நாற்படை வலியும் அமைந்திருப்பினும், போர் செய்து அரசுபெற நீ சிறிதும் சம்மதியாதே. ஐயோ! நம் நாட்டில் வீணாக அடிக்கடி எத்தனையோ மனிதர்களுடைய உதிரம் சிந்தியிருக்கிறது. இன்னும் இரண்டொரு நிமிஷத்தில் உன் குலத்தார் உதிரமும் பூமியை நனைக்க இருக்கிறது, ஆதலின், ஒரு துளி ரத்தம் சிந்துவித்து நீ அரசனாவதினும், நீ ஒரு ஏழைக்கூலிக்காரனாக இருந்து வீந்தால், அதுவே எனக்கு த்ருப்தியாக இருக்கும். ஆனால், சண்டை சச்சரவு ஒன்றுமில்லாத, ஒருவித உயிர்க்கொலையும் உண்டாகாமல், எப்போதாவது இந்த அரசு உனக்குக் கிடைத்திடுமாயின் நீ உள்ளம் உவந்து அவ்வுரிமையை ஏற்றுக்கொள். அப்போது, நீயார் என்று கேள்விமுறையுண்டானால் இதோ நான் உன் கையில் கட்டியுள்ள இப்பட்டுக்குட்டையை அவிழ்ப்பாயாக. அதுவரையில் இது இப்படியே இருக்கட்டும். எல்லாவற்றிற்கும் அருட்பெருங் கடவுள் ஒருவர் இருக்கிறார். நீ அவரருளால் அளவிலா நன்மைகளை அடைவாயாக" என்று, தனது மைந்தன் தலைமேல் தன் கையை வைத்துக்கொண்டு, திருப்பதிமலைச் சிகரத்தை நோக்கி; "எங்கள் குலதெய்வமாகிய ஸ்ரீவேங்கடேசப் பெருமாளே!

நீதான் இச் சிறுவனுக்கு உற்றதுணை" என்று கூறி, ஓர் இமைப்பொழுது மெய்மறந்து இருந்தான். பன்னிரண்டே ஆண்டுள்ள ஸ்ரீரங்கராயனும், நடந்தவற்றை யெல்லாம் நன்குணர்ந்துகொண்டு, தன் தந்தையை வணங்கி, பின் வண்ணான் மூட்டையிற் சேர்ந்தனன். வண்ணானும், மகிழ்ச்சியுடன் அவ்வரிய மூட்டையை முதுகிற்சுமந்து, ஏழு கோபுர வாயில்களையும் கடந்து, தன் குடிசைபோய்ச் சேர்ந்தான். இதே சமயத்தில் இங்கு சிறைச்சாலையில் நிகழ்ந்தவற்றை எழுத நம் மனமும் கையும் நடுங்குகின்றன. வண்ணான் சென்றபின், அரசன், தனது பதினெட்டு வயதுள்ள முதற் குமாரனைக் கூப்பிட்டு, முந்தியநாளில் பாடகச்சிறுவன் வந்தது முதல் இதுவரை நடந்தவற்றை யெல்லாம் ஒன்றையும் ஒளிக்காமல் உரைத்தான். அதனைக்கேட்ட அவ்விளங்குமாரனும், க்ஷத்ரியர்க்குரிய மனோதைர்யம் நிரம்பப்பெற்று, தனது சிந்தை சிறிதும் கலங்காது, தன்னையும் தனது இளமனைவியையும் கொலைசெய்ய ஒப்புக்கொண்டான். பிறகு அரசன் தன் மனைவியிடம் சென்று, இந்த துக்ககரமான விஷயத்தைத் தழுதழுத்தகுரலுடன் சொல்லவே, அந்த உத்தமபத்தினியும், வாய்திறவாமல், அடிமையாயிருந்த அரிச்சந்த்ரன் தன்னை வெட்டவேண்டி வந்தபோது எப்படி சந்த்ரமதி வாளுக்கு முன்னே மனங்கலங்காது தலைகுனிந்து நின்றாளோ, அப்படியே தன் கணவன் முன்னர்த் தலை சாய்த்து நின்றாள். அரசனும் தன்கைவாளால் அவளை வெட்டிவீழ்த்தி, பிறகு, தனது ஐந்து வயதுள்ள மைந்தனையும் வாட்கிரையாக்கினான். தன் மூத்தமகனும் அவன் மனைவியும் சங்கேதப்படி உயிர்நீத்த விஷயம் உணர்ந்து தானும், சாளுவன் அனுப்பிய வேலைத் தரையில் அழுந்த ஊன்றி, அதன்மீது பாய்ந்திறந்தனன். இவ்வாறாக, அரை

நாழிகைக்குள் விஜயநகர ராஜவம்சம் முழுதும், பன்னிரண்டு வயதுள்ள பாலகன் நீங்கலாக, இருந்தவிடந் தெரியாமல் அழிந்து போயிற்று. அச்சிறுவன் மாத்ரம், ஸ்ரீவெங்கடேசப்பெருமாளது திருவருளால் உயிருடன் தப்பினன்.

அத்யாயம் 4: பத்மினி—ஒரு ஏழை க்ராமப்பெண்.

'உலகம் பலவிதம்' என்பது ஒரு பழமொழி; இந்தப் பெரிய உலகத்தில் யாராவது இருவர் ஒத்த உருவினராய் இருக்கின்றனரா? அன்றி, முற்றிலும் ஒத்த மனத்தினராய்த் தான் இருக்கின்றனரா? இல்லையே. மேலும் ஒருவனது குணமும் செயலும் இப்போதிருப்பனபோல் நாளைக்கிருக்கும் என நிச்சயமாகக்கூற இயலுமோ? அதுவுமில்லை. அன்றியும், நல்லோரென்பவர் என்றும் நன்மையே செய்து வருபவர்களா? தீயோரென்பவர் எப்பொழுதும் தீமையே செய்பவர்களா? தர்மகுணமே உருவெடுத்தாற் போன்ற பாண்டவர் திலகராகிய தர்மபுத்ரரும் ஒரு பொய் கூறவில்லையா? விஷப்பாம்பினும் கொடியோனாகிய துர்யோதனன், தனக்கும் கர்ணனுக்கும் இருந்த ஸ்நேஹமுறையில் எவ்வளவு பெருந்தன்மை பாராட்டினன்! இவற்றையுற்றுநோக்கில், மானிடரியல்பு இப்படிப்பட்டதென்று வரையறுத்து வகுத்துரைக்க முடியாததென்பது, எல்லோர்க்கும் எளிதில் தெரியவரும். இதற்கிணங்கவே சாருவன் செயலும் இருந்தவிதம் பின்வரும் கதைத்தொடர்ச்சியைக்கொண்டு அறியலாம்.

அவன் பேராசையுடையவன் என்பதும், தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளும் விஷயத்தில் பெரும்

பாதகச் செய்கைகளைச் செய்வதற்கும் பின்வாங்காதவன் என்பதும், இதனைப் படிப்பவர்க்கெல்லாம் தெரிந்த விஷயமே. அவனோ, உண்மையரசனைக்கொன்று அரசு கவர்ந்து கொண்டதுமன்றி, அப்படி அக்ரமமாகக் கவர்ந்து கொண்ட நாட்டினை அநீதியாகவும் ஆண்டுவந்தான். இவ்வளவு கொடியவனிடத்திலும் நற்குணம் சிறிது இருந்தது என்றால், நீங்கள் ஐயமுறுவீர்கள் அன்றோ? மேல்நடப்பதைப் படித்து நீங்கள் ஐயம் நீங்குவீர்களாக.

சாளுவனுக்கு சேனுபலம் அதிகமென்று முன்னர்க் கூறியிருக்கிறோம். அச்சேனையின் பலம் குறையாமல் இருப்பதற்கு, சாளுவன் தன் ராணுவத்திற் சேரவிருப்பங்கொண்ட பலசாலிகளைச் சேர்த்துவர நாடெங்கும் உத்யோகஸ்தர்களை அனுப்புவது வழக்கம், அவர்களின் பேராசையில் சாளுவனுக்கு ஸமானமான ஒருத்யோகஸ்தன் அரசனுக்கு உகந்தசெய்கை ஏதேனும் செய்து, அதனால் உயர்ந்த நிலைமைக்குத் தான் வந்துவிடவேண்டு மென்று பலநாளாக எண்ணிக்கொண்டிருந்தான். அவனுக்கு தக்க ஸமயமும் வாய்த்தது. அவன் ஊரூராய்ச் சென்றுகொண்டிருக்கையில், ஒரு க்ராமத்தில், அழகெல்லாம் ஓர் உருக்கொண்டு வந்தாற்போன்ற ஒரு பெண்மணியைக் கண்டான். சுரங்கத்தில் ஒளிகுன்றி மறைந்திருக்கும் வைரத்தைப்போல், கட்டழகுமிக்க இக் கன்னிகையும், ஜன்மத்தொகை மிகவும் குறைவான ஒரு சிறு க்ராமத்தில் வளர்ந்து வந்தாள். அப்பெண்ணினது பேரழகையும், எளிய நிலைமையும், அவளது கள்ளங்கபடமில்லாத ஸ்வபாவத்தையும், வீட்டுப் பணி செய்வதில் அவள் காட்டி வந்த விசேஷ ஊக்கத்தையும் உற்று நோக்கி, "இப்பெண், ஒரு ஏழைக் குடித்தனக்காரனுக்கு வாழ்க்கைப்பட்டு எப்

போதும் ஒரு வயிற்றுக்கஞ்சிக்காக உழைப்பதற்கு ஏற்ற வளல்லள்; இவள், இந்நாட்டரசனுக்கு மனைவியாகும் மாட்சி யுடையவள்" என்று இவ்வாறு அவன் எண்ணி, இதுவே நாமும் ஒரு பெரும்பதவி யடைதற்குத் தக்க காரணமாகுமாதலால் இப்பெண்ணைப்பற்றிச் சாளுவ மஹாராஜாவிடம் இப்பொழுதே சொல்லவேண்டு மென் னும் துணிவுடன் சந்த்ரகிரி போய்ச்சேர்ந்தான்.

அங்கு அவன் அரண்மனையுற்று, அரசனையணுகி, அப் பெண்ணினது அழகினைப் பலபடப் பாராட்டிக் கூறவே, சாளுவனுக்கும் அவள்மேல் ஆசையுண்டாயிற்று. சாளுவனோ நாட்டுக்கரசன். அவன் வாயயசைத்தாற் போதும். அவன் ஏவலாளர்கள், அந்த க்ராமப்பெண்ணை அரண்மனைக்கு உடனே கொண்டுவந்து சேர்த்துவிடுவார் கள். ஆனால் அவன் அப்படிச்செய்யவில்லை; அந்தக்கன்னி கையின் மனத்தில் தன்மீது காதல் உண்டாகும்படி செய் வித்துப் பின்னர் முறைப்படி அவளைக் கல்யாணம் செய்து கொள்ளவே கருதினன். ஆகவே, அவன், தனக்குச் செய்தி தெரிவித்த அம்மனிதனையே, அப்பெண்ணின் பெற் ரோரிடம்சென்று, அவள்மேல் தனக்குள்ள காதலை அவர் களுக்கு உரைத்துவரும்படி ஏவினன். அதனுடன், பொன்னாலும் மணியாலும் செய்த சிறந்த அணிகலன்களும் கொடுத்தனுப்பினன். அப்பெண்ணின் பெற்றோர்கள், என்றும் தாம் கனவிலும் கருதியிராத இவ்வரசனைப்பற்றிக் கேள்விப்பட்டவுடனே, ஆனந்தக்கடலில் ஆழ்ந்தார் கள்; தம் பெண்ணினது அத்ருஷ்டமே அத்ருஷ்டம் என்றூர்கள். ஆனால், பத்மினியென்னும் பெயருள்ள அப் பெண்ணோ, சாளுவனை மணப்பதற்குச் சிறுதும் ஆசைப் படவில்லை: விலையுயர்ந்த அவ்வாபரணங்களை அவள் தாய்

அவளுக்கு அணியவந்தபோது, பத்மினி, சரேலென ஒரு புறமொதுங்கி, ஒளிவீசும் தன்னுடைய கண்களினின்றும் தாரைதாரையாய்க் கண்ணீர்பெருகத் தன் பெற்றோர் தம் பாதங்களில் விழுந்து, "எனக்கு இவ்வெளிய குடிசையே சந்த்ரகிரி யரண்மனையினும் ஆயிரமடங்கு இன்பந் தருகின்றது. இவ்வீட்டு வேலைகளைச் செய்து வாழ்தலே இந்நாட்டரசியா யிருப்பதிலும் மேம்பட்டது என எனக்குத் தோன்றுகிறது. நான் அரசனுக்கு வாழ்க்கைப்பட்டால் அரசியாகலாமென்பது மெய்யே; ஆனால் அப்படி அரசியானபின் உங்களை விட்டுப்பிரிய வேண்டுமே. நான் குழந்தைப்ராயம்முதல் வளர்ந்துவந்த இவ்வூரில் எனக்கு இஷ்டமாய் உள்ளவற்றை யெல்லாம் விட்டுவிட்டு எங்கேயோ புதிய ஊருக்குப் போகவேண்டுமே. நான் அப்படி இவற்றைப்பிரிந்து ராஜபோகத்தை அநுபவிப்பதிலும், இங்கேயே இருந்து காலங்கழிக்க விரும்புகின்றேன்" என்று கூறினள். என்ன ஆச்சரியம்! இவ்வேழை க்ராமப் பெண், செல்வம் சிறப்பு அதிகாரம் முதலிய உலகத்தார் மதிக்கும் ஆடம்பரங்களால் சிறிதும் மனம் மயங்கவில்லை.

இது நிற்க, தூதாகவந்த உத்யோகஸ்தன் பத்மினியின் வீட்டிற்குத்தான் சென்றதையும், அங்கே பின் நடந்த வரலாற்றையும் உள்ளன உள்ளவாறே சாளுவனுக்குரைத்தனன். சாளுவனோ, இப்படியாகும் என்று சிறிதும் எண்ணவேயில்லை. இவ்வுலகத்தில் நாம் எளிதிற் கிடைக்குமென்று கருதும் ஒருபொருள், நாமாகவே வலிந்து அதைத் தேடப்புகின் கிடைப்பது அரிதாவதும், அது கிடைத்தற்கு எவ்வளவுக்கெவ்வளவு அரிதாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அப்பொருளின்மேல் நமக்கு விருப்பம் மிகுதியாவதும், பலரும் அநுபவத்தில் அறிந்துள்ள

விஷயம். இதற்கிணங்கவே, பத்மினி தனக்குக்கிடைப்பது துர்லபம் என்று சாளுவனுக்குத் தோன்றிய உடனே, அவள் அழகும் குணமும் அவன் மனத்தில் முன்னிலும் பதின்மடங்கு சிறந்துதோன்றின. ஏதேனும் ஒரு எண்ணம் சாளுவன் மனத்தில் புகுந்துவிட்டால், அது நிறைவேறும்வரை அதைப்பற்றிச் சிந்தித்துக் குழம்பிக்கொண்டேயிருப்பது அவனுடைய இயல்பு. பத்மினியைப் பற்றி அவன் சிந்திக்கச்சிந்திக்க, அவள் விலைமதிக்க முடியாத மாணிக்கம்போல அவன் மனத்தில் தோன்றினாள்.

இவ்வாறு பத்மினியினது, உருவம் சாளுவன் மனத்தில் நன்றாய்ப் பதிந்துவிட்டது. அவன் அவளைத் தான் மணந்தே தீரவேண்டுமென்று தனக்குள்ளே முடிவுசெய்து கொண்டான்; ஆனால், இவ்விஷயத்தில் மாத்ரம் அக்ரமமான முயற்சியொன்றும் செய்தல் தகாதென்று அவன் கருதினான்; ஆதலால், அவள் தகப்பனுக்கு, அரண்மனைக் கார்யஸ்தர்களில் ஒருவராக ஓர் உத்தியோகம் கொடுத்தான். அதனால், பத்மினியின் குடும்பத்தா ரெல்லாரும் விரைவில் சந்த்ரகிரிக்கு வரும்படி நேர்ந்தது. பத்மினியும் வருத்தத்துடன் தன்னூரை விட்டு நீக்கி, ஒவ்வொரு விதத்திலும் புதிதாகக் காணப்பட்ட பட்டணத்துக்கு வந்து சேர்ந்தாள். அவள் சந்த்ரகிரிக்கு வந்தபோது, அப்பட்டணம், மிகவும் சிறந்த நிலைமையில் இருந்தது. அங்குள்ள அகன்ற வீதிகளும், மேல்மாடிகள் அமைந்தபெரிய கட்டிடங்களும், காண்போர் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தன. பொற்பட்டத்தினாலும், வெள்ளியம்பாரியாலும், பட்டுக்கயிற்றாலும், அலங்கரிக்கப்பெற்ற பெரிய யானைகளையும், மிக அழகிய ஜேணம்பூண்டுதெருக்களெங்கும் குதித்துச் செல்லும் குதிரைகளையும், விருதுக

ளணிந்துகொண்டு உல்லாஸமாக உலாவித்திரியும் அரண்மனை வேலைக்காரர்களையும், ஸேவகர்கள் வெள்ளித்தடியைக் கையிலேந்தி முன்னே கட்டியம் கூறப் பின்னே மலை போலும் காளைகள் கட்டிய வண்டிகளில் கம்பீரமாக ஸவாரிபோகுங் கனவான்களையும் பத்மினி அங்கே தான் முதல் முதல் பார்த்தாள். இன்னும், தன் க்ராமம் முழுவதும் விற்றாலும் ஒரு நகைக்கேனும் ஈடாகாதென்று மதிக்கும்படியான விலையுயர்ந்த நகைகளையணிந்து விளங்கிய தேவதாஸிகளையும், சந்தைப் புறத்தில் வெவ்வேறுவித உடைகளணிந்து வெவ்வேறு பாஷைகள்பேசித் தான் இதுவரையும் காதால் கேட்டும் இராத சரக்குகளை விலை கூறும் பலதேசத்து வர்த்தகர்களையும் அங்கே பார்த்த பத்மினிக்கு அப்போது தான் மனிதருடைய வாழ்க்கை பலவகைப்பட்டது என்பது தெரியவந்தது. அதற்குமுன் மனிதர்களெல்லோரும் தன் க்ராமத்தாரைப்போலவே தான் இருப்பார்கள் என்று அவள் எண்ணியிருந்தாள். தனது க்ராமத்தார்க்கும் இச்சந்த்ரகிரியில் உள்ளவர்க்கும் இருந்த வேறுபாடொன்று பத்மினிக்குத் தெளிவாய்ப் புலப்பட்டது. இங்குள்ளாரெல்லாரும், தேனில் ஈ மொய்ப்பது போல் பட்டணத்துக்குள்ளே நெருக்கமுற அடைந்து, வீண் ஆடம்பரச் செலவு செய்வதில் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு ஊக்கங் காட்டி வந்தார்கள். க்ராமவாஸிகளோ, தங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவு முதலியவற்றைத் தேடுதலாகிய தொழிலிலேயே முயன்றுவந்தனர். க்ராமத்தில், அவ்விடத்திலேயே உண்டாகும் மட்டமான தான்யங்களும், வீட்டுக்கூரைகளில் விளையும் ஸாமான்யக் காய்கறிகளுமே அங்குள்ளவர்களுக்கு உணவாயிருந்தன. குயவன் செய்துதரும் மட்

குடம் முதலிய பாத்ரங்களும், சேணியன் நெய்துதரும் முரட்டுத் துணிகளுமே அங்குக் காணப்பட்டன. பணக்காரர்கள் வீட்டுக் குழந்தைகளிற் சிலரே, ஒன்றிரண்டு வெள்ளிநகைகள் அணிந்திருந்தனர். இங்குச் சந்த்ரகிரியிலோ என்றால், முதல்தரமான அரிசி முதலிய தான்யங்களும், சுற்றுப்புறத்தூர்களிலிருந்து சந்தைக்கு வந்திருக்கும் உயர்தரக் காய்கறிகளும், மிக அழகாக வகுக்கப்பட்டிருக்கும் சிங்காரத் தோட்டங்களிலுள்ள சிறந்த மலர்கள், கனிகள் முதலியவைகளும், பொன் வெள்ளி வெண்கலம் முதலிய உலோகங்களாற் செய்யப்பட்ட பாத்ரங்களும் பட்டினாலும் சரிகையினாலும் ஆகிய உயர்ந்த ஆடைகளும், வைரம் பொன் முத்து முதலியவற்றால் ஆகிய ஆபரணங்களும் அபரிமிதமாய்க் காணப்பட்டன. இவற்றையெல்லாம் மிகவிரைவில் கண்டுணர்ந்துகொண்ட பத்மினியும் 'இவ்வாறு செல்வமும் இன்பமும் சிறந்து விளங்குவதும் ஸங்கீதம் சிற்பம் சித்ரம் முதலியவற்றிற்கெல்லாம் உறைவிடமும் ஆகிய இச்சந்த்ரகிரியினரசன், ஏன் ஒன்றுக்கும் பற்றாத ஏழையாகிய என்னை விரும்புகின்றான்?' என்று தனக்குள் ஸந்தேஹப்பட்டுக்கொண்டிருந்தாள்.

சாளுவன் முதன்முதல் பத்மினியினுடைய முகத்தைப் பார்க்கநேர்ந்தபோது, அம்முகவொளியினால் கருத்து மயங்கினான். அவளுடைய அழகு, தான் உத்தேசித்திருந்ததிலும் பன்மடங்கு உண்மையாகவே உயர்ந்திருக்கக் கண்டான். மருந்து முதலியவைகளால் தேற்றப்பட்டிராத அவளுடைய தேஹஸௌக்யம், ஆடை ஆபரணம் வாஸனைச் சுண்ணம் முதலிய செயற்கை யழகுகள் சேர்ந்திராத அவளது இயற்கை யழகு, கள்ளங்கபடமில்லாத அவளுடைய உள்ளத்தின் அமைப்பு ஆகிய இவற்றையெல்

லாம் நேரிற்கண்ட சாருவன் மட்டில்லாமகிழ்ச்சி யடைந்தான். பத்மினியும், சந்த்ரகிரியிலிருந்த அழகிய மாதர்களுக்கிடையில், விண்மீன் நடுவில் ஒண்மதி போலவும், தேமரு மலரிடைத்தாமரை போலவும் விளங்கினாள். அவள் பெயர்க்கேற்ப அவளைத் தாமரை மலர்க்கு ஒப்பாகச் சொன்னது உற்றுநோக்கத்தக்கது. அவள் அழகுபற்றித் தாமரையை ஒத்திருந்தாளென்றாலும் எப்படித் தாமரையானது சேற்றில் முளைத்தாப்பின் சிறந்த இடங்களிற் சேர்கின்றதோ, அப்படியே அவளும் எளிய க்ராமத்திற் பிறந்து பின் பக்வபருவத்தில் ராஜதானியில் அரண்மனைக்கு வந்துசேர்ந்தாள். இன்னும், எவ்வாறு தாமரை மலரானது சூரியகிரணம் ஏற ஏறத் தனது ஒளியையும் மணத்தையும் அதிகமாகவீசுகின்றதோ, அவ்வாறே, பத்மினியும், அரசனுக்கு ஆசை தன்மேல் அதிகப்பட அதிகப்பட, தனது மேன்மைக்குணத்தை மேன்மேலும் சிறப்பித்துக் காட்டினாள்.

இயல்பாக முரட்டுத்தனமுள்ள கொடுங்கோற் சாருவன், இந்த எளிய க்ராமப்பெண் தன்னைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று அவளைக்கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருந்தான். எப்படி ஒரே நிமிஷத்தில் விஜயநகர வம்சம் முழுவதையும் இருந்தவிடந்தெரியாமற் போம்படி அழித்தானோ, அப்படியே, தனக்கு விருப்பமிருந்தால், அப்பொழுதே, அவன், பத்மினியை பலவந்தப்படுத்தித் தனக்கு மனைவியாக்கிக் கொண்டிருக்கலாம். ஆயினும், அப்படிச் செய்ய அவன் மனம் இசையவில்லை. மனிதரியல்பு இத்தன்மையதென அறியமுடியாததென்று முன்னரே கூறினோமன்றோ?

அத்யாயம் 5: பத்மினியும் அம்பிகை என்னும் அரசியும்.

இந்தியாவே பதிவ்ருதாதர்மத்திற்குப் பிறப்பிடம். இந்தியமாதர்கள் அந்த தர்மத்தைப் பல்லாயிரவருஷங்களாகப்பாதுகாத்து வருகின்றனர். அவர்கள் பெண்மைக்கு அணிகலமாகிய கற்பைக்காத்துக் கொள்வதில் எவ்வளவு கஷ்டம்வரினும் அதைப் பொறுத்துக் கொள்வார்கள். ஸாவித்ரி, சந்த்ரமதி, சீதை ஆகிய இவர்கள் தங்கள் கணவர்களுடைய நன்மைக்காகப்பட்ட கஷ்டத்தை யாரால் கணக்கிட முடியும்? ஒருகாலத்தில் வைகைநதிக்கரையில் நடந்த ஒரு பெருஞ் சண்டைக்குத் தன் மகனை அனுப்பியிருந்த ஒருத்தி, தோற்று ஓடி வருபவர்களைக்கண்டு, தன் மகன்செய்தி என்ன ஆயிற்றோ என்று சிந்திக்கலானாள்: "என் மகனுடைய ப்ரேதம் போர்க்களத்தில் காணமற்போயின் அவனும் இப் பேடிகளைப் போலவே முதுகு காட்டி ஓடியிருக்கவேண்டும். அப்படி அச்சவம் அங்கே காணப்படினும் அவன் முதுகில் காயம் இருக்குமாயின் அது அவன் தோற்று ஓடும்போது பட்டகாயமாகும். அவன் ஓடியிருந்தாலும் ஸரி: அன்றி, முதுகிற் காயம் பட்டுக்கிடந்தாலும் ஸரி, அவனுடைய பேடித்தனத்துக்கு நான் காரணமாவேனேயன்றி, மஹா சுத்தவீரராகிய அவனது தந்தையார் சிறிதும் காரணமாகமாட்டார். ஆதலின், அவனுக்குப் பாலூட்டிய எனது மார்பினை இக்கத்தியால் அறுத்திடுவேன்;" என்று தனக்குள்ளே முடிவுசெய்து கொண்டு போர்க்களம் புக்கனள். அப்படி அங்குப்போய்ப் பிணக்குவியல்களைப் புரட்டிப் பார்த்துவந்தபோது, அங்கோரிடத்தில் தன்மகன் மார்பிலும், தோளிலும் காயமுற்றுக் கையும் கத்தியுமாய்ப் பகைவர் பிணங்களினிடையே விழுந்து கிடப்பதைக்

கண்டனள்; கண்டவுடனே, தன்கணவர் குலத்திற்கும் புகழுக்கும் இகழ்ச்சி வாராதபடி தன்மகன் போர்க்களத்தில் நடந்து கொண்டதைக்குறித்துப் பெருமகிழ்ச்சி யடைந்தாள். * இவ்வாறு இந்தியமாதர்கள் கணவர்களையே தெய்வமெனப் பாவித்து, அவர்களுக்குப் புகழும் பெருமையும் சிறக்கும்படி எப்பொழுதும் நடந்துவந்திருக்கிறார்கள். அவர்கள் என்றும் அவ்வாறே நடந்துவருவார்களாக.

அப்படிச் செய்வதனால் இந்தியமாதர்கள் புருஷர்களுக்கு அடிமைகளாயிருக்கிறார்களென்பது ஸரியன்று. உற்றுநோக்கின், இந்தியாவில் புருஷர்களைவிட ஸ்த்ரீகளுக்கே கௌரவம் அதிகமாக இருக்கிறதென்பது வெளிப்படையாக விளங்கும். எப்படியெனில், புருஷர்கள் சிற்சிலவற்றில் தவறு செய்கிறார்கள்; மனைவியிறந்தால் அவர்கள் மறுமுறை மணஞ்செய்து கொள்கிறார்கள். பெண்டிரோ, தங் கணவர்களை யிழந்தால் அப்படிச் செய்கிறதில்லை. அன்றியும், சாகும்வரை தம் கணவரது ஆத்மா த்ருப்தியடைதற்காகத் தாம் கைம்மை நோன்பினைக் கைக்கொள்ளுகிறார்கள். எனவே, இந்திய மகளிரைக்காட்டிலும் ஆடவர்

* "நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள், சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற,
மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினை இ-(சினந்து)
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள், சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ, (கண்டு),
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே." —புறநானூறு 278.

தாழ்ந்த மன அமைப்புடையவர்களன்றோ? இந்தியமாதர்களால் தான், ஹிந்துக்களின் சிறந்த குணங்களாகிய விருந்தோம்பல் மதப்பற்றுமுதலியவைகள் இன்றும் நிலைத்திருக்கின்றன.

இவ்வாறே சாளுவன் மனைவியாகிய அம்பிகை என்பவளும் தன் கணவனையே தெய்வமாகக் கொண்டு ஒழுகி வந்தாள். மற்றவர் அவனைப்பற்றி எது நினைத்தாலும் அவள் மாத்ரம் அவனது சொற்படி நடப்பதே தனக்குச் சிறந்த தர்மமெனக் கருதிவந்தாள். அவளுக்கும் சாளுவனுக்கும் நடந்த கல்யாணத்தைப்பற்றிய ஒரு விஷயம் கேட்டற்கு ஆச்சர்யமாயிருக்கும். அது கீழ்வருமாறு:—

அம்பிகை, விஜயநகர ராஜவம்சத்தைச் சேர்ந்தவள். சாளுவனும் அக்குலத்தார்க்கு உறவினனாதலால், அரண்மனையிலேயே வளர்ந்துவந்தான். அப்படி வளர்ந்து வருகையில், அரண்மனையில் வழக்கம்போல் 'தசரா' க்கொண்டாட்டம் வந்தது. இந்த தசராக்காலத்தில் ஒவ்வொரு அரசனும், விஜயலக்ஷ்மிபூஜை செய்வதற்குமிகச்சிறந்த ஏற்பாடுகள் செய்வான். அச்சமயத்தில் தர்பார்மண்டபம் முழுவதும், போர்வீரர்களும் அழகிய மாதர்களும் நிறைந்திருப்பார்கள். அச்சபையில் வீரர்பலர் அரியசெயல்களால் அங்குள்ளார்க்குத் தம் திறமையைக் காட்டுவார்கள். சந்த்ரகிரி யரண்மனையிலும் இந்த தசராக்கொண்டாட்டம் மிக்க சிறப்புடன் நடந்துகொண்டிருந்தது. அப்போது அந்த ராஜ ஸபையில் ஒருவீரன் ஒரு புலியுடன் போர் செய்து அதனையடக்க முயன்றுகொண்டிருந்தான். அந்தப் புலியும் அவ்வளவு பெரிய கூட்டத்திற்கு முன் நின்று எதிர்க்க விரும்பாமல், தான் தப்பியோடுதற்காக அங்கு

மிங்கும் சுற்றிப்பார்த்து, அச் சபையில் கூட்டம் சிறிது குறைந்திருந்த மங்கையர் தங்கியுள்ள பக்கம் நோக்கி வாலையாட்டிக்கொண்டு விரைந்து சென்றது. அதைக் கண்டு அனைவரும் அஞ்சி நடுங்கினர். அச்சபைமுழுதும் ஒரு பெருங்குழப்பம் உண்டாயிற்று. அப்போது அங்கு ஒரு சிறுவன், மிக்க தைர்யத்துடன் தனதிடத்தினின்றும் இறங்கி, தன் தலைக்குட்டையை இடக்கையில் நன்றாய்ச் சுற்றிக்கொண்டு வலக்கையில் கத்தியை ஓங்கி, மாதர் கூட்டத்துக்குள் பாய்வதற்குத் தயாராயிருந்த அப்புலியின் முன் சரேலென வந்து நின்றான். புலியும் மிக்க கோபத்துடன் அவன் மீது பாய்ந்தது. அப்படிப் பாய்ந்த புலியினது திறந்த வாய்க்குள், அவன், தனது துணி சுற்றிய இடக்கையைத் திணித்து, வலக்கையால் வாளை வீசி, அப்புலியை ஒரேக்ஷணத்தில் தலைவேறு உடல்வேறாக இரண்டு துண்டாய் வெட்டி வீழ்த்தினான். இச்சிறுவன்தான் நம் சாளுவன். இதனை நேரிற்கண்ட அம்பிகையும், சாளுவன் அரசகுமாரனாகாததனால் தனக்குக் கணவனாதற்கு உரியவனல்லாமற் போனபோதிலும், அவனுடைய வீரத்தைவியந்து, அவனை மணஞ்செய்துகொண்டாள். அரசனாகிய நிலைமையில் சாளுவன் மிகவும் கொடியவனாயிருந்த போதிலும், கணவனாகிய நிலைமையில் தன் மனைவியினிடத்து மிக்க அன்புடையவனாயிருந்தான். அம்பிகையும், "குலமகட்குத் தெய்வம் கொழுநனே" என்பதற்கு இணங்க, சாளுவன் சொல்வதே சட்டமென நடந்துவந்தாள்.

தன் மனைவி தன்மேல் வைத்துள்ள அன்பை நன்றாய் அறிந்துகொண்ட சாளுவன், தனக்கும் அவளுக்கும் புத்திரப்பேறு இல்லாததையும், தனக்குப் பத்மினிமேல் உள்ள ஆசையையும் சிறிது சிறிதாக அவளிடம் தெரிவித்தான்.

அதற்கு அம்பிகையும், அவன் பவிருட்ணிக்கு இடையூறு செய்யாததுமன்றி, அவன்பத்மினியைத் தை மணத்தற்குத் தன்னுலான முயற்சி செய்யவும் உடன்பட்டாள். உடனே அவள் பத்மினியைத் தன் பணிப் பெண்களில் ஒருத்தியாகச் செய்துகொண்டனள். அம்பிகையும் பத்மினியும் நாளடைவில் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகி வந்தார்கள். அம்பிகையும், ஸமயம்பார்த்து ஒருநாள், "பத்மினீ! உனக்குக் கடவுள் மிக்க அழகைத் தந்திருக்கிறார். அவ்வழகுடன் நீ இப்போது தக்க வயதுவந்த பெண்ணுகவும் இருக்கின்றாய். காட்டில் மலரும் பூவைப் போல நீ பிறர்க்குப் பயன்படாமலிருத்தல் தகாது. சிறந்த புருஷனை நீ கல்யாணஞ் செய்துகொண்டு அவனுடனே இணையில்லாத இல்லறம் நடத்தி இன்பம் நுகர வேண்டும். இதைப்பற்றி நீ நன்றாக யோசிப்பாயாக" என்று நயம்படப் பேசினாள். அதற்குப் பத்மினியும், "அரசீ! காதல் என்பது, மக்கள் மனத்துள் தானுகவே தோன்றும் ஒரு உணர்ச்சியன்றோ? அவ்வுணர்ச்சி மனத்தில் இல்லாமற்போனால், மணம் செய்துகொள்வதால் தீமையே அதிகமாக விளையுமன்றோ? எனக்கு அப்படிக் காதல் யார்மீதும் இதுவரை உண்டாகவில்லையே; நான் இப்போது தங்கள் விருப்பப்படி எப்படி நடக்க முடியும்?" என்று கூறினாள்.

அம்பிகை:—"ஏன், பத்மினி! இந்நாட்டிக்குத் தலைவராகிய மஹாராஜா இருக்கின்றாரே. அவர் உனக்குச் செய்துள்ள நன்மைகளை நினைத்து நினைத்து, அவர்மீது காதல் கொண்டு, அக்காதலை நாளுக்குநாள் விருத்திபண்ணிக் கொள். அவர் உன்னை மணம்புரிவார் என்பதில் ஐயமேயில்லை."

பத்மினி:—“அப்படியன்று; தாங்கள் நம் நாட்டுப் பழமொழியாகிய ‘தானகப் பழுக்காததைத் தடியால் அடித்தாற் பழுக்குமா?’ என்பதை அறிவீர்களே. அப் பழம் போலத்தானே காதலும். இதனை நீங்கள் அறிந்திருந்தும் இப்படிச் சொல்வது ஸரியன்று.”

அம்பிகை:—“நான் பலவந்தப் படுத்துவதாக நீ நினைக்காதே. நீ அரசனை மணந்தால் ஸகல பாக்யங்களுடனும் வாழ்ந்திருப்பாயென்று நினைத்தேன். அதை உனக்குச் சொன்னேன். பிறகு உன்னிஷ்டப்படி செய்யலாம்.”

பத்மினி:—“தாங்கள் என் நன்மைகருதிச் சொன்னீர்கள். ஆதலின் நானும் என் மனஸிலுள்ளதை ஒளிக்காது சொல்லிவிடுகிறேன்: இல்வாழ்க்கை இனிது நடப்பதற்குக் கணவனுக்கு மனைவி மீதும் மனைவிக்குக் கணவன் மீதும் மெய்யன்பு இருக்கவேண்டுமன்றோ? “காதலிருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டதே யின்பம்” என்றாள் ஔவையும். மஹாராஜா எப்போதும் என்மீது அன்புடையவராகவே யிருப்பர் என்பது நிச்சயமா? அப்படியே அவர் இருப்பரென்று ஒரு பேச்சுக்காக ஒப்புக் கொள்வோம். எனக்கு அவர்மீது ஆசை ஒருபோதும் உண்டாகாது. அவருடைய கொடிய செயல்களையெல்லாம் கேள்வியுற்றிருக்கும் நான் அவர் முகத்தைப் பார்க்கவும் வெறுக்கின்றேன். இது நிற்க, சாளுவமகாராஜா நல்ல, குணசீலரென்றே வைத்துக்கொண்டபோதிலும், மனைவிக்குரிய மாட்சிகளெல்லாம் நிறைந்து விளங்கும் மஹாராணியாராம் தங்களை அக்னிசாக்ஷியாக மணந்தவர் இப்போது என்னை இச்சித்தல் தகுமா? இன்று தங்களை விடுத்து,

என்னை விரும்புபவர், நாளை நம் மிருவரையும் அப்பால் அகற்றிவிட்டு மூன்றாவளாக இன்னொருத்தியை இச்சிக்க மாட்டாரென்று எப்படி நம்புவது? அப்படி அவர் செய்தால், அது, ஒருவேளை தங்களுக்கு ஸம்மதமாயிருப்பினும், எனக்கு முற்றிலும் வெறுக்கத்தக்கதாகவே தோன்றும். இவற்றையெல்லாம் பார்த்தால் இதை வற்புறுத்திப் பேசுவதினாலே நீங்கள் உங்களுக்கே தீங்கு தேடிக்கொள்ளுகிறீர்கள் என்று புலப்படவில்லையா?"

அம்பிகை:—"அம்மா, பத்மினீ! அப்படிச் சொல்லாதே, வாழ்க்கைப்பட்ட ஸ்திரீகளுக்குத் தம் கணவர் தெய்வத்துக்கு ஸமானம்; அவர் யாது சொன்னாலும் அதைக் கேட்பதே அவர்களுக்கு உரிய தர்மம். பாரதத்திலிருந்து ஒரு கதை உனக்குச் சொல்லுகிறேன். நீ அதை கவனமாய்க் கேள்.

"ஒரு காலத்தில் ஒரு அரசனுக்கு நாளாயனி என்ற பேருடைய ஓர் அழகிய பெண் இருந்தனள். அவளது அழகையும் அறிவையும் குணத்தையும் பற்றிக் கேள்வியுற்று அரசகுமாரர்களுள் பலர் அவளை மணம்புரிய விரும்பினர். ஆனால் அப் பெண் அவர்களுள் ஒருவரையேனும் விரும்ப வில்லை. கடைசியாக, காட்டிலிருந்துகொண்டு காய்கனிகளையுண்டு எப்போதும் சாஸ்த்ர ஆராய்ச்சி செய்துவந்த மௌத்கல்யன் என்ற ஒரு முனி புத்ரன் அரசனிடம் வந்து, நாளாயனியைத் தனக்குக் கன்னிகாதானம் செய்து கொடுக்கும்படி கேட்டான். அரசனும், தன் மகளுக்கு அம் முனிபுத்ரனை மணப்பதில் விருப்பம் உண்டென்பதை அறிந்துகொண்டு, அவ் விருவருக்கும் வதுவை முற்றுவித்தான். பிறகு அந்த முனிபுத்ரன் நாளாயனியை

நோக்கி, "பெண்ணே! நான் காட்டின் நடுவேயுள்ள என திருப்பிடத்துக்குப் போகவேண்டும். இங்குள்ள ஸுகத்தில் ஒன்றும் அங்கே இல்லை; நீ அரண்மனையிலேயே இருக்க விரும்பினால் ஒரு தடையுமின்றி இருந்துவிடலாம்; அன்றி, என்னுடன் வர விரும்பினால் இப்போதே புறப்படவேண்டும்" என்றனன். அதற்கு நாளாயனியும், "ஐயனே! 'ராமர் இருக்குமிடம் அயோத்தி' யன்றோ? உங்களுடனிருப்பின் காடும் எனக்குக் கற்கோட்டைபோலாகும்: நீங்களில்லாவிட்டால், நானிருப்பது அரண்மனையேயாயினும், அது எனக்கு அரண்யம்போலத்தான்" என்று சொல்லி, தன் பெற்றோரிடத்தில் அநுமதிபெற்றுக் கொண்டு, தன் கணவனுடன் புறப்பட்டுக் காடுபோய்ச் சேர்ந்தாள். அங்குச் சில காலமிருக்கையில், அவள் கணவனுக்கு மிகக்கொடிய குஷ்டநோய் உண்டாயிற்று அப்போதும் நாளாயனி மனவெறுப்பின்றித் தன் கணவனுக்குரிய பணிவிடைகளை எப்போதும் போலவே செய்து வந்தாள். நாளுக்குநாள் நோய் முற்றிற்றென்றாலும், அவள் செய்து வந்த பணிவிடை சிறிதும் குறைவுபடவில்லை. ஒரு நாள் நாளாயனியின் கணவனுடைய விரல்களில் ஒன்று குஷ்டநோயால் அற்று, அவன் உணவுண்ட இலையில் மிஞ்சியிருந்த எச்சிலுடன் வீழ்ந்து கிடந்தது. நாளாயனியும் அவ்வுணவை அருவருப்புச் சிறிதுமின்றி உண்டாள். இம்மட்டோ? இன்னுங்கேள், பத்மினீ! அவளுடைய குணவிசேஷத்தை: ஒரு நாள் அவள் கணவன் அயல் கிராமத்திலிருக்கும் ஒரு தாஸி மேல் தனக்கு ஆசையுண்டென்றும், தனது நோய் முதிர்ச்சியால் அவள் வீட்டிற்குத் தானாகப் போக முடியவில்லையென்றும், தன் தேஹம் அசைந்து வருந்தாமல் தன்னை எடுத்துச்சென்று

அவள் வீட்டிற் சேர்க்க வேண்டுமென்றும் நாளாயனியை வேண்டினான். அதற்கு நாளாயனி, தன் கணவன் கருத்துக்கு மாறாய் நடக்க மனமில்லாதவளாய், ஒரு கூடையில் அவனை வைத்து, அவன் உடம்பு நோவாமல் அவனை எடுத்துச் சென்றாள். அப்போது, அம் முனிபுத்ரனும், தனது மனைவியை நோக்கி, "ஏ! பெண்கள் நாயகமே! நான் உன்னைச் சோதித்தற்கே இக் கொடிய நோயை வருவித்துக் கொண்டு இவ்வாறு செய்தேன். உனது கற்பின் சிறப்பை மிகவும் மெச்சுகின்றேன்." என்றனன். பிறகு அவர்கள் நெடுங்காலம் இல் வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்தி வந்தார்கள்.

"இக்கதைதான், பத்மினி! நம் நாட்டாரெல்லாராலும், மனைவி தன் மணாளனிடத்தில் நடந்து கொள்ளும் முறைக்கு உதாரணமாக எடுத்துச் சொல்லப்படுகின்றது. இதைக்கேட்ட நீ, மஹாராஜா சொற்படி நான் நடப்பது ஸரியா அன்று என்பதைப்பற்றிச் சற்று ஆராய்ந்துபார்."

பத்மினி:—"அம்மா! தாங்கள் சொல்லிய கதையின் முக்யமான விஷயமொன்றைத் தாங்கள் மறந்து விட்டீர்கள் போலும்: அந்த முனிபுத்ரன் தன் மனைவியைச் சோதிக்க நினைத்தானேயன்றித் தான் மெய்யாகவே வேறொருத்தியை விரும்பவில்லை; தங்கள் கணவருடைய செய்கை அப்படிப் பட்டதன்றே. ஆதலால் தாங்கள் இவ்விஷயத்தில் கணவர் சொற்படி நடப்பது ஸரியென்று நினைத்திருத்தல் எனக்கு ஸம்மதமன்று. எனக்கு அவரை மணந்துகொள்வதில் சிறிதும் இஷ்டம் இல்லை. அப்படி நான் அவரை விரும்புவதாக வைத்துக்கொண்டாலும், அவரை நான் கல்யாணம் செய்து கொள்வதால் உங்களுக்கும் எனக்கும் தீங்கே

விளையுமாதலால், தயைசெய்து இந்தப்பேச்சை நிறுத்தி விடுங்கள்."

அம்பிகை:—"பத்மினீ! நான் சொல்லிவந்ததெல்லாம் உன் அழகும் இளமையும் வீண்போக வேண்டாமென்பது தான். உனக்கிஷ்டமான புருஷனை நீ கல்யாணம் செய்து கொள்ளலாம். ஆனால், அதிக தாமஸம் செய்யாதே."

பத்மினி:—"மஹாராணி! எனது மனஸுக்கிசைந்த மணவாளன் நேர்வனேல் நான் கல்யாணம் செய்து கொள்வதற்குச் சிறிதும் ஆக்ஷேபம் செய்யமாட்டேன்."

அம்பிகை:—"அப்படிப்பட்ட குணசீலன் வருவானென்று எவ்வளவுகாலம் வீணே தாழ்ப்பது? உன்னை ஸ்ருஷ்டித்த சர்வேச்வரனுக்கு, நீ இப்படிக் கன்னிகையாய்க் காலங்கழித்தல் ஸம்மதமாகாது."

பத்மினி:—"ஆம், அம்மா, ஸர்வேச்வரனே என்னை ஸ்ருஷ்டித்தவன். அவனே என்னைக் காப்பான். 'மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்' என்பது பழமொழியன்றோ? அந்த ஸர்வேச்வரனே என் மனத்திலும் ஒருநாள் காதலை உண்டுபண்ணுவான். எனக்கென்று கணவனொருவன் இவ்வுலகில் எனக்கு முன் எங்கேனும் பிறந்தேயிருப்பான். அவன் என்னை எந்த நாள் வந்துசேர்வான் என்பதை ஈசனே அறிவர். "எல்லாம் எனையாளும் ஈசன் செயல்."

அத்யாயம் 6: ஒரு வைரக்கல் அகப்படுதல்.

தென்னிந்தியாவில் வஜ்ரகருவூர் என்னும் ஒரு க்ராமம் உண்டு. அப்பெயர், வைரக்கற்களைத் தன் வயிற்றுள் அடக்கியிருக்கும் ஊர் என்று பொருள்படும்; அவ்வூரின்

சுற்றுப்புறமெங்கும், பண்டைநாளில் வைரக்கற்கள் புதைத்திருந்த சுரங்கங்கள் பல இருந்தன. ஆப்பிரிக்கா அமெரிக்கா முதலிய கண்டங்களில் வைரக்கனிகள் கண்டு பிடிக்கப்படு முன்னர் வைரக்கற்களுக்காக உலகெங்கும் பேர்பெற்றது இவ்வூர்தான். மொகலாய அரசர்கள் வீற்றிருந்ததும், விலைமதிக்கமுடியாதபடி சிறந்து விளங்கியதுமான மயிலாஸனத்தின் மேலிருந்த வைர மணிகளெல்லாம் இங்கிருந்து போனவைகளே. இப்போது இங்கிலாந்து அரசர் முடியில் அணிபெறச் சேர்ந்து திவ்விய ஒளி வீசும் 'கோஹினூர்' அல்லது 'ஒளிமலை' எனப்படும் உயர்தர வைரமணியும், இவ்வூரில் முதல்முதல் அகப்பட்டு, பின் ஆப்கானியர் சிக்கியர் முதலியவர் கைமாறி, கடைசியில் ஆங்கிலேயர் கைப்பட்டது. முற்காலத்தில் வ்யாபார நோக்கத்துடன் இங்குவந்த ஐரோப்ய வர்த்தகர்களிடம், இச்சுரங்கங்களில் அகப்பட்ட வஜ்ரங்களை ஐரோப்ய அரசர்களிற் பலர், உயர்ந்த விலை கொடுத்து வாங்கி, அணிகலன்கள் செய்துகொண்டனராம்.

நமது கதை நிகழும் 17-வது நூற்றாண்டிலோ, அவ்வூர், ஏதோ ஒரு சாபக்கேடுற்றாற்போலத் தனது பெருமையெல்லாம் போய், ஒரு சிறு க்ராமமாயிருந்தது. அங்கே சில ஏழைக் குடியானவர்கள் குடிசை கட்டிக்கொண்டு, சுற்றுப் புறத்து நிலங்களைப் பயிரிட்டுக் கஷ்டஜீவனம் செய்து வந்தார்கள். அவ்வூரில் வைரம் அகப்பட்டு வந்ததும், அதை அங்கேயே கடைசல் பிடித்து வேலை செய்ததும், அவ்வூரிலுள்ள சில வயோதிகர்கள் தாம் சிறுவர்களாயிருந்தபோது பெரியோர் சொல்லக் கேட்டிருந்தார்களேயன்றி, இப்போது வைரவேலையொன்றும் முறையாக அங்கு நடைபெறக் காணவில்லை. எனினும், ஒரு பெரு

மழை பெய்தால் அவ்வூராரெல்லோரும் வெளியேசென்று தங்கள் தேஹம் சோர்வடையும்வரை அங்குமிங்கும் வைரத்துக்காகத் தேடியலேவார்கள். அப்படி அலேயும் சிலர்க்கு ஒவ்வொரு ஸமயம் சிறு வைரக்கற்கள் சில அகப்படுவதுமுண்டு. மழை பெய்தபிறகு உழவர் உழுதுசெல்லும்போது, கலப்பையின்கீழ் சில ஸமயத்தில் பெரிய வைரக்கல்லும் அகப்படும். இவைதாம், இவ்வூர் முன் சிறந்த வைரக்கனிகளுக்குப் பேர்பெற்றிருந்ததற்கு அறிகுறியாகும்.

இப்படிப்பட்ட அவ்வஜ்ரகரூரில் ஒருநாள் ஒரு அருங்கோடையிரவில் சந்த்ரன் மிக அழகாக ஒளிவீசிக் கொண்டிருந்தான். யாவரும் கோடையின் வெப்பத்தைத் தணித்துக்கொள்ளும்படி தென்றற்காற்றும் இனிது வீசிற்று. அப்படியிருக்கையில், திடீரென்று நாலாபக்கங்களிலும் சிதறிக்கிடந்த மேகங்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஆகாயத்தை மறைத்தன. உடனே குளிர்காற்றும் வீசத்தொடங்கிற்று. பிறகு "படபட" என்று கோடைமழை ஏறக்குறையப் பத்து நாழிகை நேரம் விடாது அடித்துச்சொரிந்தது. மழைபெய்து ஒய்ந்தவுடன் சட்டென்று வானமும் வெளிவாங்கிற்று. சந்த்ரனும் முன்போல ஆகாயத்தில் ப்ரகாசித்தான். அப்போது விடியற்காலமுமாயிற்று. அவ்வூரிலுள்ள ஒவ்வொருவனும் 'இப்படி மழைபெய்து எத்தனேயோ வருஷங்களாயின; இன்று நமக்கு அத்ருஷ்டமுண்டேல், ஒரு நொடிப்பொழுதில் நாம் குபேரனுகலாம்' என்று எண்ணி மிக்ககளிப்புடன் கரடுமுரடான ஆயுதங்களைக் கையில் எடுத்துக்கொண்டு, வைரந்தேடப்புறப்பட்டான். சுற்றிநான்கைத்துமைல் அவ்வூரார் சென்று அலேந்துகொண்டிருந்தார்கள். மழைநீர்

குன்றினின்றும் இழிந்தோடும் வழிகளில்தான் கூட்டம் அதிகமாயிருந்தது. வெளியூரிலுள்ள பெரியவர்த்தகர்களின் தரகுக்காரர்கள், குதிரைமீதேறிக்கொண்டு, 'அகப்படும் வைரத்தை நாம் முதலிற்கைப்பற்றவேண்டும்; நாம் முதலில் கைப்பற்றவேண்டும்' என்னுமெண்ணத்துடன், தம்தம்குதிரைகளை வேகமாகச் செலுத்திவந்தனர். சில சில்லரை வியாபாரிகளும், அன்று அகப்படும் சிறு வைரக்கற்களை வாங்குவதற்குப் பணப்பையும் கையுமாக வந்து தயாராக இருந்தனர். துணிமணி, நவதான்யம், காய்கறி முதலியவற்றின் விற்பனைக்காக அன்று ஏற்பட்ட சில்லரைக்கடைகளோ பல. அவ்வூர்முதனாள் இருந்ததற்கும் இன்று இருந்ததற்கும் எத்தனை மாறுபாடு! முதனாள் எங்கும் ஒரே காய்ச்சலாய்க்காய்ந்து நிலம் வெடித்து இருந்தது. அவ்வூர்ப்புறத்தில் அயலூரைச்சேர்ந்த ஒரு ஈ காக்கைகூடக் காணப்படவில்லை. இன்றைக்கோ எங்கும் மழைநீரும் ஈரநிலமுமாயிருந்ததுமன்றி, சுற்றிக் காததூரம் ஒரே ஜனத்திரளுடையதாயிருந்தது. எத்தனை வர்த்தகர்கள்! எத்தனை தரகுக்காரர்கள்!! இன்றுமிக ஏழையாயிருக்கும் ஒருவன் ஒரேக்ஷணத்தில் கோடீச்வரனாய் விடுதலுங்கூடும். அப்படியே ஒருவன் ஆனான்.

அவ்வூரில் ஒருவன் காலையில் தரையைஉற்றுநோக்கிச் சென்றபோது, ஸூர்யகிரணம் ஒரு கல்லிற்பட, அந்தக்கல் அவன் கண்ணைப்பறிக்கும்படி ப்ரகாசித்தது. உடனே அவன் அங்கே ஓடிப்பார்க்கையில் அக்கல் நன்றாய்ப் பூமியிற் பதிந்திருக்கக்கண்டான். மண்ணைப்பறித்து வைரத்தைக்கையிலெடுத்துப்பார்க்கவே, அவனுக்குண்டான மனமகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவ்வளவுபெரிய வைரக்கல் அவ்வூரில் சென்ற ஐம்பது வருஷமாக அகப்பட்டதேயில்லை. அதன்

நீரோட்டமும் மிகச்சிறந்திருந்தது. இவ்வைரம் அகப்பட்ட செய்தி ஒரிமைப்பொழுதில்எங்கும்பரவிற்று. அதனைச்சுற்றி ஒரே கூட்டமாகப் பலர் கூடினர். பலர் அதனை மங்களகரமானதெனக்கருதித் தம் கண்களில் ஒற்றிக்கொண்டார்கள்.

இதுநிற்க, அக்காலத்து அரசியல்முறைப்படி குறித்த ஒரு அளவினைக்காட்டிலும் பெரியனவாய் அகப்படும்வைரக் கற்களெல்லாம் அரசனைச்சேரவேண்டியவை. அம்முறைப் படி இவ்வைரக்கல்லும் அரசனுக்கேசேரவேண்டும். அங்கு வந்திருந்த வ்யாபாரிகளிற்சிலர், திருட்டுத்தனமாய் உயர்ந்த விலைதருவதாகக் கூறியபோதிலும், அவ்வூரார் அதற்குச் சிறிதும் இணங்கவில்லை. இந்தியர்களுக்கு அரசன் தெய்வம் அரசனுக்கு துரோஹம் நினைப்பது ஐம்பெரும்பாதகங்களில் ஒன்றென்பது, அவர் மதக்கோட்பாடு. "பலவுமிக்கனர் தேவரிற் பார்த்திபர்" என ஜீவகசிந்தாமணியும், "அரசரே நாட்டிற்கு அரியகண்" எனச் சூளாமணியும், "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக்கண்டேன்" எனத் திருவாய்மொழியும் முழங்குகின்றன அன்றோ? இவற்றிற்கு இணங்க, அவ்வூரார், 'அவ்வைரக்கல்லை எவர்க்கும்விலைக்குக் கொடுத்தல் கூடாது; அது அரசனுக்கே சேரவேண்டும்' என்று கூறவே, அங்கு வந்திருந்த குதிரைவீரர்களிற் சிலர், அவ்வூரையே எதிர்த்து அவ்வைரக்கல்லை அடித்துக் கொண்டுபோக எண்ணினாரானாலும், அவ்வூர்த்தலைவனும் மற்றவர்களும் ஒற்றுமையுற்றவர்களாய் மிக்க எச்சரிக்கை யுடன் இருந்தபடியால், அவர்களெண்ணம் பலிக்கவில்லை. அன்று அவ்வூர்த் தெய்வத்திற்குச் சிறப்பாகத் திருவிழா நடந்தது. மறுநாள், நாட்டுக்குத்தலைவனாகிய சாளுவமஹா ராஜனுக்கு, மிக்கவணக்கத்துடன், அவ்வைரக்கல் அகப் பட்ட வகையினையும், அது இப்படிப்பட்டது என்பதையும்,

அவ்வூர்த்தலைவன் ஒரு ஓலையிலெழுதி, அவ்வோலையை ஒரு தூதனிடம் கொடுத்து அனுப்பினான்.

இச்செய்தியைக் கேள்வியுற்ற சாருவன், மிகுந்த ஸந்தோஷம் அடைந்தான். தன்னிடத்தில் சிறந்தவஜ்ரமாவது வேறு ரத்னமாவது ஒன்றுமில்லையே யென்பது அவனுக்கு நெடுநாளாக இருந்தமனக்குறை. முன்னரசன்கையிலிருந்த ரத்ன மோதிரம் தனக்கு வேண்டுமென அவன் கொண்ட ஆசையும், அது நிறைவேறாது போனதும், படிப்போர்க்கு ஞாபகமிருக்கலாம். ஒரு சிறந்த வைரக்கல் அரசனிடம் இருந்தால், அவனுடைய ஆட்சி லக்ஷ்மீகடாக்ஷம்பெற்று விளங்குமென்று நம்மவர்கள் எண்ணுவதுண்டு. மாட்சிமை தங்கிய விக்டோரியா மஹாராணியாரின் ஆட்சி சிறந்து விளங்கியதற்கு, அவரிடத்திலிருந்த 'கோஹினூர்' என்னும் உயர்தர வைரமணியே காரணம் எனப் பலரும் நம்பினர். இவ்வாறே, சாருவனும், வஜ்ரகருவூரில் அகப்பட்ட வைரக்கல் நிமித்தமாகப் பத்மினி தனக்கு வசப்படலாமென்றும், இனி ஒரு குறைவும் தனக்கு இராதென்றும் எண்ணினான்.

அங்ஙனம் எண்ணிய சாருவன், அபலனை அழைத்து வஜ்ரகருவூர் முழுவதற்கும் மூன்றுவருஷம் நிலவரியொன்றும் வேண்டாமென்றும், அவ் வைரக்கல்லைக் கண்டெடுத்தவன் அவ்வூரிலேயே பத்து ஏகர் நிலம் மான்யமாகப் பெற்று அந்நிலத்தைபரம்பரை பரம்பரையாக வாய்தாவரியொன்றுமின்றி ஸர்வ ஸ்வதந்த்ரத்தோடும் ஸூர்யசந்த்ரர்கள் உள்ளவளவும் அனுபவித்து வரலாமென்றும் இரண்டு சாஸனம் ஏற்படுத்தி, அவற்றில் தன் முத்ரையுமிட்டு, அவற்றை அபலன்கையிற்கொடுத்து, கருவூர்க்குப்போய் வைரத்தை வாங்கிவரும்படியும், முடியுமானால் அதை அங்கேயே கடைசற்பிடித்து வரும்படியும் கட்டளையிட்டான். பிறகு

தன் போர்வீரருள் இருபதுபேரைப் பொறுக்கி, அவர்களையும் அபலனுக்குத் துணையாகக் கருவூர் செல்லுமாறு ஏவினன்.

சாருவனது கட்டளையின்படியே அபலனும் கருவூர் சென்று அவ்வைரக்கல்லை முறைப்படி பெற்றுக் கொண்டான். உடனே அபலனுத்திரவின்படி, அவ்வூர்ப் பொற்கொல்லர்களில் சிறந்த ஒருவன் அக்கல்லைத் தக்கபடி செதுக்கிக் கடைசற் பிடிக்க ஆரம்பித்தான்: அவனும் ஒருமாஸ காலமாக அதே வேலையைச் செய்து தன்னுலியன்ற அளவு அதை சுத்தமாகச் செதுக்கிக் கொடுத்தான். அவ்வேலைப் பாட்டினுல் அதன் பருமன் குறைந்தது; ஒளியோ பன்மடங்கு அதிகப்பட்டது.

ஆயிரக்கணக்கான வருஷங்களாக பூமியிற் புதைபட்டுக்கிடந்த அவ்வைரக்கல்லும், இப்போது வெளிப்பட்டு மனிதர் மனத்தில் அவரவர் இயற்கைக்கேற்ப, பொறாமை, காதல், மகிழ்ச்சி முதலிய பற்பல உணர்ச்சிகளை யெழுப்பி, பல அரிய திருவிளையாடல்களைச் செய்யத் தயாராயிருந்தது. இவ்வாறு இயற்கை யழகுடன், செதுக்கப்பட்டுச் செயற்கை யழகும் வாய்ந்த அவ் வைரத்தை அபலன் முதலியோர் ஒரு சுபதினத்தில் எடுத்துக்கொண்டு, அவ்வூரினின்றும் புறப்பட்டு சந்த்ரகிரியை நோக்கிச் செல்வாராயினர்.

அத்யாயம் 7: எஜமான்நாயக்கன் என்னும் சிற்றரசன்.

விஜயநகர ராஜாங்கத்துக் குட்பட்டு அதில் ஆங்காங்குச் சிற்சிலபாகங்களை ஆண்டுவந்த சிற்றரசர் சிலர் இருந்தனர். இவர்கள் வருஷந்தோறும் சந்த்ரகிரியரசனுக்குத்

திறை செலுத்துவது வழக்கம். இப்படிப்பட்ட சிற்றரசர்களில் எஜமான்நாய்க்கன் என்பவனும் ஒருவன். அவன் எதற்கும் அஞ்சாத நெஞ்சம் படைத்தவன்; சாளுவனுக்குமுன் சந்த்ரகிரி யரசனாயிருந்த வேங்கடராய அரசனிடத்தில் மிக்க விச்வாஸம் கொண்டவன். சாளுவன் அரசனைச் சிறைப்படுத்தியதையும், பிறகு அரசனைக் கொன்று தானே அரசனானதையும் நினைத்து நினைத்து, இவன் பன்முறை கோபமும் துக்கமும் கொண்டதுண்டு இவன் ஒருமுறை சில சிற்றரசர்களைச் சேர்த்துக்கொண்டு சாளுவனை எதிர்க்கவும் முயன்றான். ஆனால் இப்படிப்பட்ட முயற்சிகளெல்லாம் சாளுவனுடைய முன்ஜாக்ரதையினால் பயனற்றுப்போயினவென்றும் சிற்றரசர் சாளுவனது ஸேனைக்கு அஞ்சி அடங்கியிருந்தனரென்றும், முன்னே சொல்லியிருக்கிறோம். என்றாலும் எஜமான் நாய்க்கன் ஒருவன் மாத்திரம் சாளுவனது அரசாட்சியை ஒப்புக்கொள்ளாதது மன்றி, அவனுக்குத் தான்செலுத்த வேண்டிய கப்பத்தொகையையும் செலுத்தாதொழிந்தனன். தவிரவும், அத்தொகைக்குச் சாளுவன் ஆள்விடும் போதெல்லாம், அவன், சாளுவனைப் பலவாறு தூஷித்து, தான் அவனை ஒரு பொருளாக மதிக்கவில்லையென்று சொல்லியனுப்பி வந்தான்; ஒரு சமயம் அரசன் சிறையிலிருந்தபோது, அவனைச் சிறையினின்றும் மீட்பதற்காக பூமியின் கீழ் பட்டணத்தின் வெளியிலிருந்து சிறைச்சாலை வரை ஒரு சுரங்கத் தோண்டும்படி ஏற்பாடுசெய்து, அம், முயற்சியில் கண்ணும் கருத்துமாயிருந்து, அதனை மிகுந்த சாதுர்யத்துடன் மேற்பார்த்துவந்தான். ஆயினும் அவ் விஷயம் அரசனுக்கு அநுகூலமாய் முடியவில்லை. சுரங்க வேலையெல்லாம் செவ்வையாய்த்தான் முடிந்திருந்தது.

அரசனையும் அரசவம்சத்தாரையும் சிறையினின்றும் அச் சுரங்கத்தின்வழியே அழைத்துவரச் சென்றவர்களும் தம் வேலையைத் திருத்த முறவே செய்தார்கள். அரசன் முதலியோர் தாங்கள் பலநாளாக ஸ்வாசியாத நற்காற்றை ஸ்வாசித்துக் களிப்படைய இருக்கும் ஸமயத்தில், ஊர்க் காவலாளர்களில் ஒருவன் கால்கழுவிவர வெளியேபோய்த் திரும்பி வருகையில் தூக்கக் கலக்கத்தில் கால்தடுமாறி அச்சுரங்கக்குழியில் விழுந்தனன். விழுந்தவன் எழுந்து கூக்குரலெழுப்ப, கையும் விளக்குமாய்க் காவலாளர் பலர் கதுமென வந்துசேர்ந்தனர். இங்ஙனம், அரசனுக்கு, சிறை மீட்சி, 'கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற்' போயிற்று. இந்நன்முயற்சி கைகூடாதுபோனது ஏற்பாடு செய்தவர்களுடைய கவனக்குறைவினாலன்று; காவற்காரர் தம் ஸாமர்த்தியத்தினாலும் அன்று; அரசன் தலைவிதியாலே தான் அப்படிப்போயிற்றுப் போலும். அதற்குப்பிறகு அரசனை முன்னினும் கொடுமையாக நடத்தினார்கள். அப்புறம் நடந்ததெல்லாம் முன்னரே கூறியிருக்கிறோம்.

அரசன் தன் கடைசிநாளில் தனக்கு மரணம் நேர இருப்பதையும், தனதிளங்குமாரனைத் தான் வண்ணான், மூட்டையிற் சேர்த்து வெளிப்படுத்தியதையும் எஜமான் நாய்க்கனுக்குத் தெரிவிக்க ஏற்பாடு செய்திருந்தானென்றும் ஜனங்கள் சொல்லிக்கொண்டனர். நாய்க்கனும் கடவுளருளால் சாளுவனாட்சி தொலைந்து உண்மையில் அரசுக்குரிய ராஜகுமாரன் சிங்காதனம் அமருங்காலம் எப்போதாவது வருமென்றே நிச்சயமாய் நம்பியிருந்தான்.

இப்படிப்பட்ட எஜமான்நாய்க்கனும், வஜ்ரகருவூரிலே வைரக்கல் அகப்பட்டதையும், அதன் பருமன் நீரோட்டம் ஒளி கடைசல் வேலைப்பாடு முதலியவற்றின் சிறப்பையும்

பற்றிக் கேள்விப்பட்டான்; அதைச் சந்த்ரகிரிக்கு எடுத்துச் செல்வதற்குக் குறிக்கப்பட்ட நாள் என்றைக்கென்றும் அவன் விசாரித்தறிந்துகொண்டான்; அவ்வைரமணி முறைப்படி அரசனுக்குரியதாதலின், அது ராஜத்ரோஹியாகிய கொடிய சாளுவனிடம் சேரக்கூடாதென்றும், அதனைத் தான் எப்படியாவது வழிமறித்துப் பறித்துக்கொள்ள வேண்டுமென்றும் தனக்குள் திட்டம் செய்துகொண்டு, அப்படியே, தனது போர்வீரர்களிற் பொறுக்குவீரருடன் கருஹூர்க்கருகே வட்டமிட்டுக்கொண்டிருந்தான்.

அந்நாட்களில் ஓரிடமிருந்து மற்றோரிடம் போவது மிகவும் கஷ்டமாய் இருக்கும். அக்காலத்தில் வழிப்பறியும் கொலையும் நாடெங்கும் மலிந்துகிடந்தன. திருடர்களுக்குத் தலைவன் சில ஸமயங்களில் சிற்றரசனாய்விடுவதும் வழக்கம். கள்ளர்கள் பலர் சேர்ந்து ஊரூராகக் கொள்ளையடித்தல், ஊரில் நெருப்புவைத்தல் முதலிய கொடிய செய்கைகள் செய்து போவதுண்டு. ஆதலின், கருஹூரினின்றும் சாளுவனுடைய வீரர்கள் குறித்த தினத்தில் வைரக்கல்லுடன் மாட்டுவண்டியில் ஏறிக்கொண்டு மிக்க ஜாக்ரதையாகப்புறப்பட்டார்கள். நம்நாட்டில் இன்றைக்கும் இரட்டை மாட்டுவண்டி ப்ரயாணம் இரவிலேயே நடந்துவருகிறது. பகலில் ஸூர்ய வெப்பத்தைத்தாங்க மனிதனுக்கும் ஆகாது; மாட்டிற்கும் ஆகாது. இப்படி இரவில் ப்ரயாணம் போகும்போதெல்லாம், பலவண்டிகள் ஒன்றுசேர்ந்து புறப்படும்வரை, கள்ளர்பயத்தால், வண்டிக்காரர்கள் காத்திருப்பார்கள். சிலஸமயம் நூற்றுக்கணக்கான வண்டிகள் ஒரேசாரியாகத் தொடர்ந்துபோவதும் உண்டு.

இப்படியே, வைரமணியுடன் கருஹூரினின்றும் வந்த வீரர்களும் பல வேறு வண்டிகளுடன் இரவில் வந்து

கொண்டிருக்கையில், எஜமான்நாய்க்கன், தன் பொறுக்கு வீரர்களுடன் சற்றே தூரத்தில் அவர்களைத் தொடர்ந்து சென்றனன். வண்டிகள் ஊரிலிருந்து நெடுந்தூரம் வந்து விட்டதையும் நேரமும் நடுராத்ரியாய் விட்டதையுங்கண்டு, நாய்க்கன் தன் வேலையைச்செய்யத்தொடங்கினான். முதல் முதல், அவன் ஆட்களில் சுறுசுறுப்புள்ள இருவர், சிறிதும் சந்தடியின்றி, மெல்லமெல்லத் தாம் குறித்திருக்கும் வண்டியை யணுகி, அங்கிருக்கும் நிலைமையை நோக்கினார்கள். சாளுவனது வீரர்கள், தங்களுக்கு இடையூறு நேர இருப்பதைக் கனவிலும் கருதாதவர்களாய், அயர்ந்து துயின்று கொண்டிருந்தனர். அவர்களுக்குத் தலைவனாய் வந்த அபலனும், தனது தலைக்குட்டைக்குள் வைரத்தை முடிந்து வைத்துக்கொண்டு நன்குதுயிலமர்ந்தனன். வண்டிகளோ மெல்ல ஊர்ந்து சென்றுகொண்டிருந்தன. ஓட்டுபவர்களும் அரைவிழியும் தூக்கமுமாய் இருந்தார்கள். இவற்றையெல்லாம் கண்ட அவ்விருவரும் நாய்க்கன்முகம் நோக்க, அவனும் ஏதோ சைகைகாட்டினன். உடனே அவ்விருவரும், அபலனிருக்கும் வண்டியின் முன் வந்து, நுகத்தடியைத் தங்கள் கைகளில் தாங்கிக்கொண்டு, எருதுகளை மெல்லத் தெறித்து ஓட்டிவிட்டு, பிறகு தாமே அவ் வண்டியைச் சிறிதுதூரம் இழுத்துச் சென்றனர். இவர்கள் இப்படிச்செல்லும்போது, மற்றை வண்டிகளின் மேல் 'சடசட' வெனக் கவண்கற்கள் வந்து தாக்கின. திடீரென்று விழித்தெழுந்த வண்டிக்காரர்களும் வண்டியிலுள்ளவர்களும் மிக்க மனக்குழப்பமடைந்து, இன்னது செய்வதென்பது தெரியாது ஏக்கமுற்றனர். அந்நள்ளிருளில் வண்டிக்காரர்களுக்கு உண்டான மனக்குழப்பத்தை ஒருவராலும் அளவிட்டுமுடியாது. அவர்களில் ஒவ்வொருவனும்,

தன்னையும் தன் ஸொத்துக்களையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடனே, தன் வண்டியை ஒதுக்கி மிக விரைவாக ஓட்டினான்.

இதுவே எஜமான் நாய்க்கன் எதிர்பார்த்தது. அவர்கள் ஒன்றுசேர்ந்து எதிர்த்திருந்தால் நாய்க்கன் வேலை நடக்காமற் போய்விடும். அவர்கள் தனித்தனி நழுவிப் போகவே, நாய்க்கனும் அவன் ஆட்களும் அபலன் முதலியவர்கள் இருந்த இடத்துக்கருகே நெருங்கினார்கள். நெருங்கி நோக்கவே, அங்குள்ள வீரர்கள் வஜ்ரத்தைப் பறிகொடாமலிருக்கும்வண்ணம் மிக்க எச்சரிக்கையுடன் போர்க்கோலம் பூண்டு தங்களை எதிர்க்கத் தயாரா யிருப்பதை நாய்க்கன் கண்டான். எனினும், அவனும் அவன் ஆட்களும் சிறிதும் மலைக்கவில்லை. இருதிறத்தாரும் ஒருவரை யொருவர் நெருங்கிக் கொடிய போர் புரிந்தனர். இரண்டு பக்கத்திலும் காயம் அதிகம். அபலனைச் சார்ந்தவர்கள் மிக்க வீரங்காட்டினார்களெனினும், நாயக்கன் வீரரிடத்தில் அவர்கள் வீரம் பலிக்கவில்லை. அபலன் ஒருவனே, தன்பக்கத்தில் நேரே சண்டையிற் கைகலக்காததனால், காயம்படாதிருந்தான். சண்டை முடிந்தவுடன் நாய்க்கன் ஆட்கள் வைரக்கல்லைத்தேடத் தொடங்கினார்கள். ஆனால் அது அகப்படவில்லை. அபலனை அதைக்குறித்துக் கேட்டதற்கு, அவன் ஒன்றும் பேசாமலிருந்தனன். நாயக்கனுக்கு யாது செய்வதெனத் தோற்றவில்லை. இவ்வாறு தங்கள் முயற்சியெல்லாம் வீணாகப்போகும்போல் தோன்றியபோது, அபலன்பக்கம் நின்ற நாய்க்கனுடைய ஆட்களுள் ஒருவன், 'முண்டாசு ஒன்றுதான் குறை இந்த முண்டைக்கு' என்றுகூறி, யாதொரு உத்தேசமுமின்றி, விளையாட்டுக்காக அபலனது

தலைக்குட்டையைத் தன்கையால் தட்டிவீழ்த்தினன். வீழ்த்தவே, அதனுள் முடிந்துவைத்திருந்த வைரக்கல்லும், அந்நள்ளிரவில், ஒரு நக்ஷத்ரம்போல், இருளைக்கிழித்துக்கொண்டு, பூமியின்மீது விழுந்தது. வைரமணி கீழே விழுதலும், அதனை வீழ்த்தியவீரனும் அதைத்தரையினின்று எடுப்பதற்கு மிக்க ஆவலுடன் குனிந்தனன். எத்தனையோ பாடுபட்டுத் தான் மிக அருமையாய்ப் பாதுகாத்துவந்ததும், தனக்கு இனி எவ்வளவோ நன்மைகளைச் செய்யக்கூடியதுமான அவ்வைரத்தை, அம்மனிதன் எடுக்கப்போவதைப் பார்த்த அபலனும், சட்டெனை, தன் கைவாள் அடிப்பிடியை அம்மனிதனுடலுள் அழுந்துமாறு அழுத்தமாகக் குத்திவிட்டு, உடனே அவ்வைரத்தைப் பூமியினின்றும் பொறுக்கி, பொட்டெனத் தன் வாய்க்குள் போட்டுக்கொண்டான். இவற்றையெல்லாம் கண்ணுற்ற எஜமான்நாயக்கன், ஆரம்பமுதல் அபலனைக் கொல்ல வேண்டாமென்று கருதியிருந்தனனேனும், உடனே தனது கைவாளை உருவிக்கொண்டு, "இவ்வைரத்தை விழுங்கின் உன்னுடலை இப்போதே இவ்வாளினுற் பிளந்து அதை எடுத்துக்கொள்வேன்" என்னலும், அவன் முகத்திற்காணப்பட்ட கோபக்குறியைக் கண்ட அபலன், அப்போதே தன்வாயினின்று அதைக்கீழே துப்பினன். நாய்க்கனும், அதை எடுத்துக்கொண்டு, அபலனைச் சிறைப்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டனன். எனினும், முன் அபலனுல் குத்திவீழ்த்தப்பட்ட வீரனுடைய ஸஹோதரன், 'நான் எஜமான் கட்டளையை மீறிநடப்பதாயினும் ஆகட்டும்; என்னுடன் பிறந்தான் என் கண்முன் இவன் கைவாளால் உயிர்துறக்கப்பார்த்தும், நான் அதற்குப்பழி வாங்கேனுனல், எனக்கும் ஒரு பேதைப் பேடிக்கும் என்ன வித்யாஸம்?' என்று

சொல்லிக்கொண்டே அபலன் தலையை அறுத்துவீழ்த்தி னன். நாய்க்கனும் அவ்வீரனது அப்போதைய மன நிலைமையை நன்குணர்ந்துகொண்டு, 'நீ நல்லது செய்தாய்; உன் ஸ்வேறாதர வாஞ்சையை மிகவும் மெச்சுகின்றேன்' என்று சாதுர்யமாகச் சொல்லிவிட்டு, சாளுவனுக்கு இனிக் கேடுவருமென்றெண்ணி மகிழ்ந்துகொண்டே தன் ஊர்போய்ச் சேர்ந்தான்.

சிலநாட்களுக்குப் பிறகு, செய்தியெல்லாம் சாளுவ னுக்கெட்டவே, சாளுவனும், தனது ஸபையிலுள் ளோரைநோக்கி, "எனது ராஜ்யத்தில் இந்தத் தலைக் கிறுக்குள்ள நாய்க்கனை அடக்க வீரர்களில்லையா? இவன் செய்கை மற்றைத் திருடர்களுக்கும் ஒரு தூண்டு தலாகுமே. இவன் எனக்குத் திறைகொடாததை நான் ஒரு பொருளாக எண்ணவில்லை. நமது சந்த்ரகிரியரண் மனையிற் பொக்ஷத்தில் பொன்னும் மணியும் குவியல் குவியல்களாகக் குவிந்துகிடக்கின்றன. நான் மிக்க ஆவ லுடன் எதிர்பார்த்ததும், எனக்கு எல்லாநன்மைக்கும் காரணமாகுமெனக் கருதியதுமான வைரமணியை, அவன் வழிப்பறி செய்ததுமன்றி எனது வலக்கை போன்ற அப லனையும் அவனுடன்சென்ற சிலவீரர்களையும் கொலைசெய் தானே! இந்த நாய்க்கப்பயலுடைய கொழுப்பை அடக்கு வதற்கு, எனது உப்பைத்தின்று உயிர்வாழும் வீரர்க ளில் ஒருவனுக்கும் வல்லமையில்லாமற்போயிற்று?" என் றிவ்வாறு மதிமயங்கி, செய்வதின்னதெனத் தெரியாது கூறினன். அப்போது பிரபுக்களும் வீரர்களும் நிறைந் திருந்த அந்த தர்பார்மண்டபத்தில் ஒருவரேனும் வாய் திறக்கத் துணியவில்லை. சாளுவன் முகத்தில் வியர்வைத் துளிகளும் கண்ணீர்த்துளிகளும் காணப்பட்டன. அவன்

அப்போது, பைத்யம் பிடித்தவன்போல் தோன்றினன். அந்த வஜ்ரத்தின் உதவியால், அவன் பத்மினியைப் பாணிக்ரஹணம் பண்ணிக்கொள்ளலாம் என்று மனோ ராஜ்யம் செய்துவந்திருந்தானன்றோ?

இப்படிச் சாளுவன் கூறிய பின்னர் சற்றுநேரத்துக்கெல்லாம், ஸபையிலுள்ள யாவரும் ஆச்சர்யமுறும்படி, சென்னப்பன் என்னும் ஓரிளம் வாலிபன் எழுந்து நின்று, "எஜமான்நாய்க்கனிடமிருந்து, அவ்வைரக்கல்லை இன்றைக்கு மூன்றாம்நாள் நான் இங்கு கொண்டுவந்து சேர்க்கிறேன். மிகச்சிறந்த குதிரைவீரரிற் பதின்மரை என்னுடன் வரும்படி கட்டளையிட்டருளுங்கள்" என்று கூறினன்.

அத்யாயம் 8: சென்னப்பனது செயற்கருஞ்செய்கை.

சென்னப்பன் சிறுவனாயிருந்தபோது ஒரு க்ராமத்தில் வளர்ந்து வந்தான். சிலவருஷங்களுக்கு முன், சாளுவன், தனது ஸைன்யபலத்தை அதிகப்படுத்திக் கொள்வதற்காக, ஊரூராக உத்யோகஸ்தர்களை அனுப்பி, நல்ல பலிஷ்டர்களான வாலிபர்களைத் தனது ராணுவத்திற் சேர்த்துவந்தானென்று முன்னே சொல்லியிருக்கிறோம். அப்படி ஒருமுறை ஒரு உத்யோகஸ்தன் ஒரு சிறு க்ராமத்துக்குச் சென்றிருந்தபோது, சென்னப்பனென்னும் அச்சிறுவனது உடலமைப்பையும் முகத்தெளிவையும் உற்றுநோக்கி, அவனை, அரண்மனைவீரர்களுள் ஒருவனுக்குதற்குச் சேர்த்துக்கொண்டான். சென்னப்பனைச் சேர்ந்தவர்கள், முதலில் சிறிது தயங்கினரேனும், அரண்மனை உத்தியோகமென்பதைக் கனவிலும் கருதியிராதவர்களாதலின், மிக்க ஸந்தோஷத்துடன் அதற்கு ஸம்மதித்தார்கள். சிறுவனும் சந்த்ரகிரி வந்துசேர்ந்து,

அங்கே, வில்வித்தை வாள்வித்தை மற்போர் முதலிய வெல்லாம் விரைவிற் கற்று, அவற்றிற் பலவருஷம் பழகினவர்களைக்காட்டிலும் மிகுந்த தேர்ச்சியடைந்தனன். இவற்றையெல்லாம் பார்த்துவந்த சாளுவனும், சிறுவனிடம் மிக்க அன்புபாராட்டலானான். சாளுவன் வேட்டைக்குப் போகும்போதெல்லாம், தன்னுடன் சென்னப்பனை அழைத்துப்போவது வழக்கம். அப்படிப்போகும்போது, சென்னப்பன், ஒவ்வொருமுறையும் தனது ஸாமர்த்யத்தால் சாளுவனுக்குத்ருப்தியை உண்டுபண்ணுவான். நாளடைவில் சென்னப்பன், ராஜ ஸபையில் எப்போதும் சாளுவன் பக்கத்திலிருந்துகொண்டு அவன் வலக்கைபோல் அவனுக்கு உதவிபுரியலானான்.

இப்படிப்பட்ட சிறப்புவாய்ந்த சென்னப்பன், வைரக்கல்லை மீட்டுக்கொண்டு வருவதாகிய அவ்வரிய தொழிலைச் செய்து முடிப்பதாகக் கூறியவுடன், சாளுவன் மனத்தில் சற்றுஸந்தோஷமுண்டாயிற்று. சிறுவன் விரும்பியவாறே சாளுவன், சிறந்த பத்துக்குதிரைவீரர்களை அவனுடன் செல்லுமாறு ஏவினன். அப்படியேசென்னப்பனும் அந்த வீரரோடு, மிக்கவேகத்துடன் ஸவாரிசெய்து, அடுத்தநாள் காலை எஜமான்நாய்க்கனது அரண்மனை சேர்ந்து, அங்கு. "நாய்க்கரவர்களைக்காணவேண்டு" மென்றுவாயில் காப்போருக்கு உரைத்தனன். சென்னப்பனுக்கு அப்போது வயது பதினெட்டே. அவனதிளமையையும், முகத்தெளிவையும், நெடுந்தூரம் வெகுவேகத்துடன் அவன் ஸவாரிசெய்துவந்திருக்கிறானென்பதையும் உணர்ந்துகொண்டு, வாயில்காப்போர் நாய்க்கனுக்குச்செய்திதெரிவிக்க, அவனும், "சென்னப்பனையும் அவனுடனிருப்பாரையும உள்ளே வரவிடுங்கள்" என்றனன். உடனே, சென்னப்பனும், இருவரை

வெளியிலேயே இருக்கச்செய்து, மற்றவர்களோடு உட்புகுந்து, இரண்டு மெய்க்காப்பாளர் பக்கத்தில் நிற்கவும் ஒரு ஸேவகன் விசிறிவீசவும், ஆஸனத்தில் வீற்றிருந்த எஜமான் நாய்க்கன் முன் வந்துசேர்ந்தான்; இங்கு வருவதற்கு முன்னமே, தன்னுடன்வந்த மற்றை எட்டு வீரரையும் நோக்கி, "நீங்கள் இங்கேயே எச்சரிக்கையுடன் இருங்கள்; நான் சைகைகாட்டும் ஸமயத்தில் சரேலென என்முன் தோன்றுங்கள்" என்றுசொல்லி, பக்கத்து வாயிற்கருகே அவர்களை நிறுத்தியிருந்தான். இப்படித்தனியாகச் சென்னப்பன் நாயக்கன் முன்சென்று வணங்கி தான் வைரக்கல்லை மீட்டுப்போக வந்திருப்பதாகத் தெரிவித்தான்.

இதனைக்கேட்ட நாய்க்கன் இன்னும் தன் முன்னே வணங்கியநிலையிலேயே இருந்த சென்னப்பனை நோக்கி, "ஏ! தூதா! நீ போய் உன் எஜமானனிடம், இந்த வஜ்ரம் உண்மையரசனுக்கே உரியதென்றும், தனக்குஉரியதென்று அவன் மீண்டும் கூறின், நான் அவனைப் போரில் எதிர்க்க ஸித்தனயிருக்கிறேன் என்றும், இதுவரை உயிருக்கும் அவனுக்குக் கொடுத்துவராத நான் இவ்வைரக்கல்லைக் கொடுப்பேனா என்றும், சண்டையில் தோற்பித்தால் வைரக்கல்லன்று, என் ஸொத்தெல்லாம் அவனதாகும் என்றும் நான் சொன்னதாக நீ சொல்லு" என்றனன்.

இம்மொழிகளைக் கேள்வியுற்ற சென்னப்பன், இதுகாறும் பணிந்து நின்ற நிலையிலேயே இருந்தவன், எஜமான் நாய்க்கன்மீது புலிக்குட்டிபோற் பொருக்கெனப் பாய்ந்து, ஒருகையை அவன் கழுத்திற்கொடுத்து, அவனை மல்லாந்து விழச்செய்து, மற்றொருகையில் தன் இடையிலிருந்துருவிய கத்தியை ஓங்கிக்கொண்டு, தன் போர்வீரர்களுக்குச் சைகைகாட்ட, கதவுக்கு வெளியே நின்ற எட்டுக் குதிரை

வீரரும், 'திமி திமி' என்று வந்து சூழ்ந்துகொண்டனர். அதற்கு அஞ்சாது நாய்க்கன் மெய்காப்பாளர் இருவரும் பற்களை நெரித்துக்கொண்டு தம்வாட்களை உறையினின்றும் கழற்றி எடுக்கும் ஸமயத்தில் சென்னப்பன், 'கணீர்' என்ற குரலுடன், அவர்களை நோக்கி, "நீங்களிருவரும் நிற்கும் நிலையிலேயே அசையாதிருக்கவேண்டும்; உங்களில் யாரேனும் விரலையசைத்தாலும் சரி, முதலில் உங்கள் எஜமான் நாய்க்கனையும், பிறகு உங்களையும் கண்டதுண்டம் செய்திடுவோம். பிறகு உங்கள் கூக்குரலால், மற்றுஞ் சிலர் வந்து எங்களை எதிர்க்கலாம். நாங்கள் சுத்தவீரராதலால், எங்கள் உயிர் எங்களுக்கு ஒரு பொருட்டன்று, முதலில் இந்த நாய்க்கரும், அப்பால் நீங்களும் இறந்த பின்னர்தான் நாங்கள் இறக்கநேரிடும். ஒருவேளை, எங்கள் குதிரைகளின் வேகத்தால் நாங்கள் தப்பிப்போதலும் கூடும். ஆதலின், இவற்றையெல்லாம் நன்றாய் யோசித்து; நீங்கள், நிற்கும் நிலையிலேயே தானே நில்லுங்கள்" என்று, ஸேனைத்தலைவன் போர்க்களத்தில் தன் படையை ஏவுமாறு, தனது பெருமிதம்தோன்றப் பேசினன். அவர்கள் அவன் சொல்லியவையெல்லாம் முழுதும் உண்மையாயிருந்ததனால், சித்ரப் பதுமைபோல் செயலற்று நின்று விட்டனர். பிறகு, சென்னப்பன் நாய்க்கனை நோக்கி, "நாய்க்கரே! வீணே காலம் போக்கவேண்டாம். வைரக்கல் வந்துசேர ஏற்பாடு செய்யவேண்டும். நானே அதற்கு ஒரு யோசனைசொல்லுகிறேன்: உமதுகையிலிருக்கும் முத்திரைமோதிரத்தைக்கழற்றி, இதோநிற்கும் உமது ஸேவகனிடத்திற் கொடுத்து, அவனை உமது பொக்ஷதாரனிடம் அனுப்பி, அவனிடம் அம்மோதிரத்தை அடையாளமாகக் காட்டி அவ்வைரக்கல்லைவாங்கி வரும்படி, நீர் என்முன்பாக இந்தக்ஷணமே கட்டளையிடவேண்டும். இதைத்தவிர

வேறொன்றும் எண்ணுவதற்கில்லை. வைரக்கல் வாராத பக்ஷத்தில், நான் உம்தலையையேனும் சாளுவமகாராஜரிடம் சேர்த்து அவருக்கு த்ருப்தி யுண்டுபண்ணவேண்டும் என நிச்சயித்திருக்கிறேன்'' என்றனன்.

இதைக்கேட்ட எஜமான்நாய்க்கனும், வேறொருவழியும் தோன்றாது சற்றுத்திகைத்து, பிறகு, சிறுவனுக்கு நீதி உபதேசித்துப்பார்க்கலாமென்றெண்ணி, "ஏ வீரர்திலகமே உன்னிடத்தில் இளமையும் வீரமும் இனிது விளங்குகின்றனவே! ஏன் ந்யாயம்மாத்ரம் இல்லை? சாளுவன் மகாபாதகன் என்பதையும், அவன் உண்மையரசனைக்கொன்று அந்யாயமாக அரசுகவர்ந்துகொண்டான் என்பதையும் நீ அறியாயோ? நான் அவ்வைரத்தை என்னுடைய ஸொந்த உபயோகத்துக்கு எடுத்துக்கொண்டேனென்று நீ எண்ணுகிறாய்? இறைவனருளால் பழைய அரசகுலத்தார் மீண்டும் சந்த்ரகிரியில் அரசுபுரிவார்கள்; அப்போது அதை அவர்க்குக் கொடுத்துவிடுவேன். நீ சாளுவனுக்கு ஊழியஞ்செய்தல் மிக்க இழிதொழிலாகும். உனது தைர்யத்தை நான் மிகப்பாராட்டுகிறேன்; ஆதலின், நான் இவற்றைச் சொன்னேன்'' என்றான்.

அதற்குச் சிறுவனும், "இவற்றையெல்லாம் கவனிக்க இப்பொழுது அவகாசமில்லை. நான் உண்ணுவது சாளுவ மஹாராஜா இடும்சோறு; ஆதலால் நான் அவருக்கு த்ரோஹம்செய்யேன்'' என்று, கர்ணன் துர்யோதனனைப்பற்றிச் சொன்னதுபோற் * சொல்லி, இனித் தாமஸம்கூடாது.

* "மடந்தைபொற் றிருமே கலைமணியுகவே,
மாசறத் திகழும்வ காந்த
இடந்தனிற் புரிந்தே யானயர்ந் திருப்ப,
'எடுக்கவோ கோக்கவோ' வென்றான்;

நான் சொன்னபடி செய்யும்'' என்று சொல்லிக்கொண்டே வாளைச் சுழற்றினன். போம்வழியாதொன்றும் தோன்று மல், நாய்க்கனும், 'விதியை யாரால் வெல்லலாம்? எங்கும் புகழ்பெற்ற சுத்தவீரராகிய நாம், இன்று, நமதரண்மனை யிலேயே, இன்னும் மீசையரும்பாத இவ்விளஞ்சிறுவன் சொற்படி கேட்க நேரிட்டது' என்று தனக்குள்ளே எண் ணிக்கொண்டு, சென்னப்பன் செப்பியவாறே செய்தனன். சில விநாடிக்குள் வைரமணியும் வந்து சேர்ந்தது. அதனை எடுத்துக்கொண்டு சென்னப்பன் தன் வீரர்களுடன், வாயுவேக மனோவேகமாய்த் தன் குதிரைமீது ஸவாரி செய்து, குறித்ததவணைக்குள் சாளுவன் ஸபையையணுகி அவன்கையில் அவ்வைரக்கல்லைக் கொடுத்தான். சாளுவ னும் ஸந்தோஷ பரவசனானன்.

இவ்வரியசெயலைக் கேட்டோரெல்லாரும் ஆச்சர்ய மடைந்தார்கள். சென்னப்பன் புகழைப் பாணர்கள்பலர் யாழிற்சேர்த்துப் பாடினர். அவன் வெளியேவரும்போது அவனுடைய உருவத்தைக் காணவேண்டி, பலர், ஜன்னல்

திடம்படுத் திடவே இராஜராஜனுக்குச்
    செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக்
கடன்கழிப் பதுவே எனக்கினிப் புகழுங்
    கருமமுந் தருமமு மென்றான்.

வில்லி பாரதம், கிருஷ்ணன் தூதுஸர்க்கம், 255

(மடந்தை — துர்யோதனன்மனைவி. உசவே—சிந்துதலும். செரு— போர்.) கர்ணனும் துரியோதனன் மனைவியும் ஒரு தனித்த இடத்தில் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கையில், அங்குத் துரியோதனன் வந்து, சட்டென்று எழுந்திருந்த தன் மனைவியுடைய மேகலாபரணத்திலிருந்து சிந்திய முத்துக்களைப் பார்த்து, அவர்களைச் சிறிதும் கண்டிக்காமல், "இந்த முத்துக்களை நான் கோக்கவோ? பொறுக்கவோ"? என்று கேட்டானென்பது இங்கு அறியத்தக்கது.

வாயில் முதலிய இடங்களைச் சார்ந்து நின்றனர். சாளுவன் இங்ஙனம் சென்னப்பனுக்குத் திடீரென்றுண்டான புகழைச் சிறிதும் சிந்தித்தானில்லை. வைரக்கல் கிடைத்த அத்ருஷ்டத்தைக் குறித்து அவன் அகமகிழ்ந்திருந்தான்.

அத்யாயம் 9: வஜ்ரத்தைப்பற்றிய ஜ்யோதிஷம்.

வைரம் கிடைத்தவுடனே, சாளுவன், அரண்மனை ஜ்யோதிஷரை அழைத்து, அவ்வைரத்தினையுடையவருக்கு வருங்காலத்தில் நிகழ இருக்கும் விஷயங்களைக்குறித்து ஜ்யோதிஷ சாஸ்த்ரமுறைப்படி ஆராய்ந்து சொல்ல வேண்டுமென, அவரை வேண்டிக்கொண்டனன். இந்த ஜ்யோதிஷரிடத்தில் சாளுவனுக்கு மிக்க நம்பிக்கையுண்டு. முன்னொருமுறை, இவர் சோதிடத்தைச் சோதிக்க வெண்ணி, தான் எந்தக் கோபுரவாயிலின் வழியாக வெளியே போகக்கூடும் என்பதைக் குறித்து முன்னரே ஒரு ஓலைத் துண்டில் இவரை எழுதித்தரும்படி செய்து, பின் தான் வெளியே சென்றபிறகு, அவ்வோலையைச் சோதித்துப் பார்க்க, அதில் அவன்போன வாயிலே குறித்திருந்தது. இவ்வாறு எட்டுக்கோட்டைவாயில்களுள் தனக்குத்தோன்றிய யாதொன்றின் வழியாகச்சாளுவன் போயினும், அந்த வழியே ஓலையிலும் குறிக்கப்பட்டிருந்தது. ஒருநாள் கோட்டை மதிலில் ஒருபக்கத்தை இடித்து அவ்வழியாகவெளியேசென்று, பின்பு அரண்மனைவந்து ஓலையைப் பார்க்கையில் அதில், 'புதியவழியாக' என்றெழுதியிருந்தது. அப்போது முதல் அவனுக்கு ஜ்யோதிஷத்தில் பூர்ண நம்பிக்கை ஏற்பட்டது. அதிலும், அரண்மனைச் சோதிடர் சொல்லிவிட்டார் என்றால் அதை அவன் வேதவாக்காகக் கொள்வான். இப்படிப்பட்ட சோதிடரைக் கொண்டே,

இவ்வைரக்கல் கிடைத்ததனால் தன் வாழ்நாள் எவ்வாறு மாறுதலடையும் என்று சாளுவன் அறிய விரும்பினான்.

ஜ்யோதிஷரும், இவ்வளவு சிறந்தவைரமணி தெய்வத் தன்மை பொருந்தியதாதலால், மிக்க கவனத்துடன் தம் புஸ்தகங்களையெல்லாம் புரட்டிப்புரட்டிப்பார்த்து, அவ் வைரத்தினது இனி நிகழும் சரித்ரத்தை மஞ்சள் பூசிய ஓலையில் எழுதி, குங்குமத்தால் அவ்வோலையினை அலங் கரித்து, ராஜஸபையில் பின் வருமாறு படிக்கலானார்.

"இவ்வஜ்ரக்கல், ஒப்புயர்வற்ற நிறமும் அழகும் உடை யது. இதன் ஒளியை வர்ணிக்க மனிதர்களால் இயலாது வைரம், கற்களில் புருஷ ஜாதியைச் சேர்ந்தது. ரத்னம் ஸ்திரீ ஜாதியைச் சேர்ந்தது. இந்த அரசவைரத்துக்கு இணையான ரத்னம் நம்ராஜாங்கத்தில் முன்னிருந்ததைத் தவிர வேறு ஒன்றும் உலகத்தில் இல்லை. சீக்ரமே இந்த ராஜவஜ்ரம் ஒரு ஸ்வர்ணாஸனத்திலேறி, நக்ஷத்ரங்களிடை யே சந்த்ரன் விளங்குமாறு பல நன்முத்துக்களின் மத்தி யில் நடு நாயகமாக விளங்கும். இதற்குரியவருடைய லாப கஷ்டங்களெல்லாம், அவருடைய குணத்திற்கும் மனத் திற்கும் தகுந்தபடி யிருக்கும். அதாவது,— இதன் அழகு க்கு ஸமானமான நற்குணம் இல்லாதவனிடம் இது சேர்ந் தால், அவன், மிகவும் தாழ்ந்த நிலைமையையடைந்து, தன் வேலைக்காரனுக்கும் வேலைக்காரனுய்க் கடைசியில் இழி வான மரணம் அடைவான். அன்றி, ஒரு நல்ல குணசாலி யினிடம் இது சேர்ந்தால், அவன் ஏழையாயிருப்பினும், சீக்ரத்தில் சிறந்த ஐச்வரியவானுவான். அவன், தனது நற்குணநற்செய்கைகளால் உலகில் என்றும் அழியாப்புக ழும் அடைவான். இம்மட்டோ? இணையில்லாத கட்டழகு மிக்க கன்னிகையொருத்தி அவன்மீது காதலுற்று அவ

லைக் கடிமணம் செய்துகொள்வன். ஒரு பெண்ணிடத்தி லே இது சேருமானல், தெய்வத்தன்மை வாய்ந்த காத லென்னும் உணர்ச்சி, அதுவரை அவள் மனத்தில் என்று மில்லாதது, அப்போது புதிதாகத் தோன்றலாகும். அப் படித்தோன்றும் காதலானது நாளடைவில் மிக்குவள ரவே, அவள், தானகவே தன் தலைவனிடம் அதை ஒப்புக் கொள்வாள். இதற்குமேல் மற்ற விவரங்கள் எனக்குத் தெளிவாகப் புலப்படவில்லை. எனினும், இது கொஞ்ச காலத்தில் தன் ஜன்மபூமியாகிய இந்த தேசத்தைவிட்டு நெடுந் தூரத்தில் ஒரு மூலையிலுள்ள நாட்டிற்குச் சென்று விடுமென்றும், அந்நாட்டார் தங்கள் ஸ்வதந்த்ர உரிமைக் காகப் பெரிதும் பாடுபட்டு, தாம் அதைத் தலைமுறை தலை முறையாக அனுபவித்துவருவதுமன்றி, இந்த வைரக்கல் லின் ஜன்மபூமியாகிய நம்நாட்டிற்கும் அந்த ஸ்வதந்த்ரங் களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்து நாடெங்கும் இன்பமும் அமைதியும் பரவும்படி செய்வார்களென்றும் எண்ணுவதற்கு இடமிருக்கிறது" என்றிப்படி ஜ்யோதி ஷரும் வஜ்ரக்கல்லின் பலனைச் சொல்லிமுடித்தார்.

இதையெல்லாம் கவனத்துடன் கேட்டு வந்த ஸபையா ரெல்லாரும், சாருவன் கெட்ட குணமுள்ளவனதலின் அவனுக்கு இவ்வைரத்தினுல் தீங்கேவருமென்று எண்ணி னர்கள். ஆனல் அவ்வைரமணி தன்னையுடையவனுக்கு அழகிற்சிறந்த பெண்ணொருத்தியை மணம் புரிவிக்கும் என் றதும், அது ஒரு கன்னியின்மனத்தில் காதலைப் புதிதாகத் தோற்றுவிக்கும் என்றதுமே சாருவன் மனத்தில் தங்கி நின்றன, ஆதலால், தனதெண்ணங்களெல்லாம் அனுகூல மாகவே நிறைவேறுமென்று அவன் மனோராஜ்யம் செய்து கொண்டான்; உடனே வேலைநயந்தெரிந்த தட்டாரொரு

வனை அழைத்து, அவ்வைரமணியைத் தங்கத்துட்பதித்து ஒரு உயர்ந்த முத்துமாலைக்கு நடுநாயகமணியாகச் சேர்க்கும்படி அவனுக்குக் கட்டளையிட்டான். தட்டான் அவ் வேலையை, இரவும்பகலும் ஓயாமல் மிக்க பொறுப்புடன் செய்து வந்தான் ஒருமுறை, தட்டான் வேலை எம்மட்டில் நடந்திருந்ததென்பதை அறியவேண்டி, சாளுவன், தட்டான் வேலைசெய்யும் அறைக்குள் தன்னந்தனியே சிறிதும் சந்தடி செய்யாது நுழைந்தான். அப்போது தட்டான் தனது வரவையும் கவனியாது வேலையில் ஊக்கம் செலுத்தியதைக்கண்டு சாளுவன் மகிழ்ந்து, வேலைக்கு இடையூறு செய்யாது அவன்பின் நின்றான். தட்டானும் வேலைக்கிடையே வெற்றிலை போட்டுக்கொள்ள விரும்பி கருத்தெல்லாம் வேலைமேலிருக்க, தன் கையைமட்டும், தன்னிடம் வேலைபழகிவரும் பையன் இருக்கும் பக்கத்தில் நீட்டினான். அப்போது அந்தப் பையன் ஏதோ காரியமாக வெளியே போயிருந்தபடியால், சாளுவன் தட்டான் கவனம் வேலையிலிருந்து திரும்பாதிருக்கவேண்டி, தன் கையிலிருந்த வெற்றிலை முதலியவற்றை, அடைப்பக்காரன் போலத் தட்டானுடைய கையிலுதவினான். தட்டான் அப்போது சாளுவன் வரவைக் கவனிக்கவில்லை. பிறகு அவ் வெற்றிலையை மென்றவுடன், அதன் இன் சுவையினால் மனங்கவரப்பட்டவனாய்த் தட்டான் திரும்பிப் பார்த்தான். பார்த்தவன், நடந்ததையுணர்ந்து, சாளுவன் காலில் விழுந்து, தன்னை மன்னிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். சாளுவனோ, அவனது வேலைத்திறத்தையும் அவ்வேலை விஷயத்தில் அவன்காட்டிவந்த பேரூக்கத்தையும் வியந்துகூறிவிட்டு, மிக்க மனமகிழ்ச்சியுடன் அரண்மனைக்கு வந்து சேர்ந்தான்.

தட்டான் வேலைசெய்யுமிடத்துக்குத் தான் போனதையும், அங்கு நிகழ்ந்ததையும், சாளுவன் முற்றிலும் மறந்துவிட்டு, பத்மினியின் உள்ளத்தில் விரைவில் காதலை விளைக்கவேண்டி, அம்முத்துமாலையை அவளுக்கு ஒரு பரிசாக அனுப்பினான். தட்டானுக்குத் தாம்பூலம் உதவிய போதே, வைரக்கல்லுக்குடையவனாகிய தான் தனது வேலையாட்கு வேலைக்காரனானதனால், சோதிடத்தின் ஒரு பாகம் தன்னிடத்தில் உண்மையாயிற்று என்பதைச் சாளுவன் சற்றும் உணரவில்லை. மனிதர்களியல்பே, தமக்கு அநுகூலமாக விஷயங்களைக் கருதுவதுதானே. தனக்குப் பிரதிகூலமாக ஏற்படுபவைகளையெல்லாம் எதிர் பார்த்து, அவற்றுக்குத் தகுந்தபடி நடந்துகொள்ள ஸித்தமாயிருப்பவன் ஒருமஹான் அன்றோ?

இது நிற்க. இவ்வாறு சாளுவனால் அனுப்பப்பட்ட அருமையான அந்த முத்துமாலையைப் பத்மினியும் ஏற்றுக் கொண்டாள்; ஏனெனில், அவ்வைரக்கல் தெய்வத்தன்மை பொருந்தியதாதலின், அதனை வாங்காது மறுப்பது முறையன்றென்று அவளுக்குத் தோன்றியது. அதன் சிறப்பும் அவள் காதில் பல நாளாகப்பட்டிருந்ததனால், அதை மறுக்க அவளுக்கு மனம் வரவில்லை. க்ராமத்திலிருந்த போது தான் அனுப்பிய நகைகளை வெறுத்தவள் இப்பொழுது இம்மாலையைப் பெற்றுக் கொண்டதைக் குறித்து சாளுவன் மிகுந்தமகிழ்ச்சியுற்றான். பத்மினி தன்மனைவி யாவாளென்னும் விஷயத்தில் இனி அவனுக்குச் சிறிதும் ஸந்தேஹமில்லை.

சாளுவன் இங்ஙனம் ஸந்தோஷித்திருக்க, பத்மினியோ, சென்னப்பன்புகழ் நாடெங்கும் பாடப்படுவதையும், அவன் வீரமும் இளமையும் அழகும் வாய்ந்து அப்

புகழ்க்கெல்லாம் உரியவனாக இருப்பதையும் அடிக்கடி நினைத்து வந்தாள். அப்படி நினைத்துவரவே அவள் மனத்தில், சென்னப்பன்மீது அவளையறியாமலே அன்பு வளர்ந்துகொண்டு வந்தது. சென்னப்பனும் தன்னைப் போலவே ஓர் ஏழைக்குலத்தில் தோன்றினனென்பது அக்காதலை இன்னும் அதிகப்படுத்தியது. வைரக்கல்லைக் குறித்துச் சோதிடர் கூறியது, இவ்வாறு, பத்மினி விஷயத்திலும் உண்மையாகவே முடிந்தது.

அத்யாயம் 10: பத்மினியின்காதல் பஹிரங்கமானது.

இந்தியாவில் மல்யுத்தம் (குஸ்திபயில்வது) என்பது நெடுநாளாக வழங்கி வந்திருக்கிறது. தேகப்பயிற்சிக்கேற்ற பலவகை அப்யாஸங்களிலும் இது சிறந்ததென இந்திய அரசர்களால் கருதப்பட்டுவந்தது. இம்மல்யுத்தத்தில் இரண்டு வீரர்கள் இன்ன இன்னவாறு போர் செய்யவேண்டுமென்றும் இன்ன இன்னவாறு செய்யக்கூடாதென்றும் சட்டதிட்டங்கள் ஏற்பட்டிருந்தன. இப்படிப் பட்டவிதிவிலக்கு நியாயங்கள், நாட்டிலுள்ளோர் பலர்க்கும் நன்கு தெரிந்திருந்தன. இம் மல்யுத்தத்தில் வெற்றிபெற்றவனுக்கு, தன்னுட்டரசர் மாத்திரம் அல்லர், பிற நாட்டரசர்களும், விலையுயர்ந்த வெகுமானங் கொடுப்பார்கள். ஒரு சிறந்த மல்யுத்தம் நடக்கும்போது, அதைப் பார்ப்பதற்கு ஆயிரக்கணக்காக ஜனங்கள் திரண்டுபோவதுமன்றி, அரசர்களும், சிற்சிலசமயங்களில் அரசியரும் சென்று தமக்கென்று வேருக அமைத்திருக்கும் ஆஸனங்களில் அமர்ந்திருப்பார்கள்.

ஒருநாள், சந்த்ரகிரியரண்மனைக்கு, வட நாட்டிலிருந்து ஒருபேர்பெற்ற 'பயில்வான்'. வந்து, சாளுவனைநோக்கி,

"மஹாராஜ்! தாங்கள் வீரர்களைக் கௌரவப்படுத்தும் விசேஷகுணமுள்ளவர்களென்று, நான் தூரதேசங்களிலும் தங்களைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். தங்களுடைய நாட்டின் சிறப்பைப்பற்றியும் பலர்புகழ நான் கேட்டிருக்கிறேன். ஆகையால் நான் தங்கள் நாட்டிலுள்ள வீரர்களி லெல்லாம் எவன் சிறந்தவனோ, அவனுடன் குஸ்திசெய்வ தற்கு இங்கு வந்திருக்கிறேன். கெம்பு வைரம் பச்சை முதலியவைகள் வைத்து இழைக்கப்பெற்ற இந்தத்தோ டாக்களெல்லாம், நான் பற்பல இடங்களிற் பரிசாகப் பெற்றவை. நான் சென்றவிடங்களிலெல்லாம் ஜயமடைந் தேனேயன்றி, இதுவரையில் ஓரிடத்திலும் தோல்வியுற வில்லை. தங்கள் ஸபையில் தோற்றுவிட்டால், இவையெல் லாம் இழந்துவிடுகிறேன். ஜயித்தால் எனக்குத் தக்கவாறு ஸம்மானம் செய்வீர்களாக" என்று கூறினான்.

அதற்கு ஸம்மதிக்கச் சாளுவனுடைய வீரர்களில் ஒருவனுக்கும் தைரியமில்லை; அவர்களெல்லாரும் இந்தவீர னுடைய கீர்த்தியைப்பற்றி முன்னமே கேள்விப்பட்டவர் கள். இப்படி ஒருவரும் வடநாட்டு வீரனுடன் மல்யுத்தம் செய்வதற்கு இணங்காததனால், சாளுவன், மனம் வருந்திய வனாய் தான் சிலகாலமாகத் தைர்யம் வீரம்முதலியவற்றிற் சிறந்தவனெனக் கருதிவரும் சென்னப்பனை நோக்கி, 'நீ இவனோடு குஸ்திசெய்வதற்கு ஒப்புக்கொள்வாயா'? என்று கேட்டான். சென்னப்பனுடைய ராஜவிச்வாஸம், நம்கதை யைப் படிப்பவர்க்கெல்லாம் தெரிந்துள்ள விஷயமே. அவ னும், அரசனது ஆணையைச் சிரஸின் மேல் ஏற்று, 'அப் படியே ஆகுக' என்றான். உடனே, இந்த மல்யுத்தத்தைக் குறித்து நாடுமுழுவதும் விளம்பரம் செய்யப்பட்டது. குறித்த இடத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து

கூடினார்கள். தூரதேசங்களிலிருந்தும், இந்தப்பந்தயச் சண்டையைப்பார்த்தற்குப் பலர் வந்திருந்தனர். வடநாட்டு வீரனே, குஸ்தி செய்வதில் மிகவும் கை தேர்ந்தவன். சென்னப்பனே சந்த்ரகிரியிலுள்ளவர்களால் மிகவும் நன்கு மதிக்கப்பட்டவன். இவ்விருவரும் குஸ்தி செய்வதைப் பார்க்க வேண்டுமென்று, வந்திருந்த ஜனங்களெல்லாம் மிக்க ஆவல்கொண்டிருந்தனர். அங்கே அரசனும் வந்திருந்தான். அம்பிகையென்னும் அரசியும், தன்னுடைய பரிவாரத்தோடு வந்திருந்தாள்; அம்பிகையின் பணிப் பெண்ணாகிய பத்மினியும் அங்கிருந்தாள்.

குறித்த நேரத்தில், வடநாட்டுவீரன் ஸபைநடுவில் திறந்தவெளியாயிருந்த இடத்திற்கு வந்துசேர்ந்தான். அவனுடைய சிஷ்யர்கள், அவன் மேலணிந்திருந்த சிறந்த காச்மீரப்போர்வைகள், விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் முதலியவற்றை ஒவ்வொன்றாக கழற்றிவைத்தார்கள். இவைகள் கழற்றிவைக்கப்பட்டவுடன், அவ் வீரனுடைய உடலமைப்பைப் பார்த்தவரெல்லாம், அதன் சிறப்பைக் குறித்து வியந்து பேசினர். அவனுருவம், மல்யுத்தஞ் செய்வதற்கே ஸ்ருஷ்டிக்கப்பட்டதுபோற் காணப்பட்டது. முழு உருவத்தின் சிறப்பு ஒருபுறமிருக்க, ஒவ்வொரு உறுப்பும், தனதமைப்பினால், பார்ப்பவர் மனத்தைக் கவர்ந்தது. அவனுடைய பருத்த உடல் உரம்பெற்றிருந்தது மன்றி, ஒவ்வொரு உறுப்பும், அவ்வுருவத்திற்குத் தகக அளவும் அமைப்பும் பெற்றிருந்தது. ஆனால் நமது சிறுவன் சென்னப்பனே, 'ஒற்றைநாடி' யானஉடம்புள்ளவன். அவனுடல் பருத்திராவிட்டாலும், உறுதிப்பாடு அமைந் திருந்தது. அவனுடைய முகமும் தோற்றமும், 'குஸ்தி' செய்பவர்க்குள்ள ஒருவித வன்மை அமையப்பெறாது,

மென்மையும் அழகும் வாய்ந்திருந்தன. அக்காலத்தில் அரசர்களும் பிரபுக்களுங்கூட மல்யுத்தம் செய்வதற்கு முன்வந்தனர். 'பயில்வான்' எதிர்நின்று மல்யுத்தஞ்செய்வது தமக்குத்தகாதசெயலென்று அவர்கள் எண்ணவேயில்லை.

இவ்விருவீரரும் ஸபைநடுவே வந்து நிற்கவே, அங்கேயிருந்த யாவரும், வடநாட்டானே வெற்றி பெறுவன் என்றும், சென்னப்பன் தோல்வியுறுவன் என்றும் தம் மனத்தில் முடிவுசெய்துகொண்டனர். அங்கு வந்திருந்த மாதர்களெல்லாம், சென்னப்பனது இளமையையும் அழகையுங் குறித்து வியந்தனரேனும், அவனுக்குத் தோல்வியோ மரணமோ நேருமேயென்று மிகவும் மனமிரங்கினர்.

குறித்தநேரமும் ஆயிற்று. மல்யுத்தம் தொடங்கலாமென்று அரசனும் உத்திரவளித்தனன். உடனே இருவீரரும், ஸபையோர்க்கு 'ஸலாம்' செய்து, தொடைதட்டிப் பின் கைகலந்தனர். ஒருவரையொருவர், வாயுவேகமனோவேகமாகக் 'கர கர' வென்று சுற்றிவந்தனர். அங்ஙனம் சுற்றிவரும்போது, சென்னப்பன் மெல்லிய உடம்பு, வடநாட்டானது உடம்பிற்குள் மறைந்துமறைந்து காணப்பட்டது. சிற்சில சமயத்தில் சென்னப்பன் இருக்குமிடங்கூட சபையோர் கண்ணுக்குப் புலனாகாதபடி, அவ்வளவு வேகமாக இருவரும் சுற்றிவந்து யுத்தம் செய்தனர். பிறகு சற்றுநேரம் இருவரும் மரம்போல் அசையாது நின்றனர். அப்படி அவர்கள் நின்றனரேனும், ஒருவரையொருவர் பலமாகப் பிடித்துக்கொண்ட வண்ணமே நின்றனர். அப்போது அவ்விருவர் மனத்திலும் இருந்த எண்ணம் ஒருவன் மற்றவனை எந்த உபாயத்தினால் கீழேவீழ்த்துவது என்பதே. இப்படித் தமக்குத் தெரிந்துள்ள பல

வகைப்பட்ட குஸ்தி ரஹஸ்யங்களை யெல்லாங் குறித்துத் தம் மனத்தில் யோசனை செய்துகொண்டே, அவர்கள் சிறிதுநேரம் இளைப்பாறி நின்றனர். ஸபையோர்களும், பேச்சுமூச்சுவிடாது, முடிவு யாதாகுமோ என்று மிகுந்த ஆவலுடனே உற்றுநோக்கியிருந்தனர். அங்குள்ளவர்களில் ஒரு ஸ்திரீமாத்ரம் சென்னப்பனுக்கு ஒரு சிறிதும் ஊறுநோரா திருத்தற்காக, தனக்குள் கடவுளை த்யானமபண்ணின வண்ணமாகவே இருந்தாள்.

இப்படி இருவீரர்களும் இருக்கும்போது, வடநாட்டான், தான்கற்றுள்ள பல 'பிடி' களையும் சென்னப்பன் மீது காட்டுவதற்கு முயன்றுகொண்டிருக்கையில், சென்னப்பன், ஓரிமைப்பொழுதில் ஏதோ ஒருவித முயற்சி செய்து, மற்றவனைத் தரையில்விழும்படி செய்திட்டனன். சென்னப்பன் யாது செய்தான் என்பது சபையோர்க்குத் தெரியாது; 'தொப்'பென்று மற்றவன் கீழே விழுந்ததுமட்டும் அவர்கள் காதிற்பட்டது; அவ்வளவு சீக்ரமாகச் சென்னப்பன் அவ்வடநாட்டானைப் பூமியின்மீது முதுகுகாட்டச் செய்தனன். சென்னப்பன் செய்கை, ஸபையோருக்கு, ஒருதேர்ந்த சொப்பிடி வித்தைக்காரன், கைஜாலம் போலவே தோன்றியது.

உடனே ஸபையோரெல்லாம் கைதட்டி ஆரவாரம் செய்தனர். சென்னப்பன் ஜயித்துவிட்டதனால், அங்கிருந்தவரனைவரும் மிக்க மகிழ்ச்சி எய்தினர். சென்னப்பனைச் சூழ்ந்துகொண்டு, அவனுக்கு, பலர், விசிறிவீசுதல் பனிநீர் தெளித்தல் முதலிய உபசாரங்கள் செய்தனர். மாதர்கள் நிறைந்திருந்த இடத்திலிருந்து சென்னப்பன் மீது, புஷ்பங்களும், சால்வை ஆபரணம் முதலியவைகளும் வந்து விழுந்தன. ஆபரணங்களுள் விலைமதிக்கவொண்.

ளூத ஒரு முத்துமாலையும் சென்னப்பன்மேல் வந்துவிழுந்தது. அதைப் பார்த்தவுடனே, அது, சாளுவனால் பத்மினிக்குச் செய்தளிக்கப்பட்ட சிறந்த மாலையென்று எல்லாரும் எளிதில் அறிந்துகொண்டனர்.

பத்மினிக்குச் சென்னப்பனிடத்தில் பற்று ஏற்பட்டிருந்ததென்று முன்னரே கூறியிருக்கிறோமன்றோ? அவள் இதுவரை அவனைப்பற்றிக் கேள்விப்பட்டுமாத்ரம் இருந்தாள். அவனைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் நெடுநாளாக அவளுக்கிருந்தது. மல்யுத்தம்செய்ய அவன் வந்ததுமுதல் அவனுக்கு, வெற்றியுண்டாகுமோ, அன்றித் தோல்வியே நேருமோ என்பதைக்குறித்து, அவள் மிகவும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தாள். அவன் இப்படி ஸபையோர் அனைவரும் அதிசயிக்கும்படி சட்டென்று அவ் வடநாட்டு வீரனைத் தோல்வியுறச்செய்தலைக் கண்டவுடன், அவள்மனம் எல்லையில்லாத இன்பத்தை அடைந்தது. ஸந்தோஷத்தினால் அவள் உள்ளம்பூரித்துப் பரவச முற்றவள்போலானாள். அப்படி அவள் இருக்கையில் சென்னப்பன்மீது பலஸ்திரீகள் புஷ்பம் முதலியவற்றை வீசுவதைக் கண்டாள்: தானும் தன் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றி அவன்மேல் வீசினள்.

இப்படிச்செய்தவள் ஏதோ ஆனந்தத்தினால் மெய்ம்மறந்திருந்த நிலையில் தன்னையறியாது செய்துவிட்டனள் என்பதற்குமில்லை; ஏனென்றால், பத்மினி நல்ல விவேகமுள்ள சிறுமியென்று முன்னர்க் கூறியிருக்கிறோம். ஆய்ந்து நோக்காமல், இவ்வளவுபெரிய ஒரு கார்யத்தை இந்தப் பெரிய ஸபைக்குமுன் அவள் செய்யமாட்டாள். ஆதலால் அவள், சாளுவன்மேல் தனக்குச்சிறிதும் விருப்பமில்லை யென்பதையும், தான் அவ்வுயர்குணம் நிறைந்த

உத்தமச் சிறுவனையே காதலிப்பதையும் பலரும் வெளிப்படையாக அறிந்துகொள்ளுவதற்கே இப்படிச் செய்தாள் போலும்.

முத்துமாலை சென்னப்பன்மேல் விழுவதைப்பார்த்த சாளுவனது மனம் என்னபாடு பட்டிருக்குமோ, நீங்களே யோசித்துப்பாருங்கள். பத்மினியைக் கொண்டுவருதற்கு அவன் செய்த முயற்சியும், அம்முத்துமாலையில் நடுநாயக மணியாகச் சேர்த்திருந்த வைரக்கல் விஷயமாக அவன் பட்ட ச்ரமமும் இவ்வளவவ்வளவென்று எடுத்துரைக்க முடியுமா? இதுவரையிலும் பத்மினி தன்னை விரும்பவில்லையென்று மாத்ரமே அவன் எண்ணி யிருந்தான். ஆயினும், முத்துமாலையினுடைய மஹிமையினால் அவள் உள்ளத்தில் காதல் உண்டாகுமென்று ஒவ்வொருநாளும் அவன் எண்ணமிட்டுக்கொண்டு வந்தான். இப்போதோ, அவள் தன்னை வெறுப்பது மாத்ரமன்றி, மற்றொருவனை விரும்புவதையும் வெளிப்படையாக அறிந்துகொண்டான். தன்னை அலக்ஷயஞ்செய்து அவள் மற்றொருவன்மீது தான் அளித்த முத்துமாலையை ஸபையோர்க்கு முன் பஹிரங்கமாக வீசியதைக்கண்ட அவன் மனம் மிகவும் புழுங்கியது. சற்றுநேரம் அவன் ஒன்றுந் தோன்றாது அறிவுகலங்கினான். பிறகு அவன் சட்டென்று ஆஸனத்தினின்றும் எழுந்து, துக்கத்தாலும் வெட்கத்தாலும், தலைநிமிர்க்க அஞ்சினவனாய், அரண்மனை போய்ச்சேர்ந்தான். இப்படித் தன்னை அவமானப்படுத்திய பத்மினியின்மீதும், அவள் அன்புக்குப் பாத்ரனாய்விட்ட சென்னப்பன்மீதும் தான் பழிவாங்கவேண்டுமென்ற எண்ணமே இப்போது அவன் மனத்தில் முதலாக இருந்தது. வடநாட்டு வீரனை மற்போரில் வென்றான் சென்னப்பன் என்பதைக் குறித்து,

சாளுவனை ஸந்தோஷமுறவேண்டியவனெனினும், தன்னால் வளர்க்கப்பட்டு மிகுந்த ஏழை ஸ்திதியிலிருந்து நல்ல நிலைமைக்குக் கொண்டுவரப்பட்ட சிறுவன், தான் ஆருக்காதல் கொண்டுள்ள கன்னிகையின் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டதுகண்டு, அவன்மீது பெரியதோர் பொறாமை கொண்டான். பத்மினியைப்பற்றியோ எனறால், சாளுவன், அவள் மேல் முன் வைத்திருந்த அளவில்லாத அன்பையெல்லாம் ஓரிமைப்பொழுதில் வெறுப்பாகமாற்றி விட்டான்: முன அவளை எவ்வளவுக்கெவ்வளவு அவன் விரும்பினானோ, இப்போது அவ்வளவுக்கவ்வளவு அவளை வெறுக்கலானான்.

ஜனங்களுக்குச் சாளுவன் ஸ்வபாவம் நன்றாய்த் தெரிந்ததே. அவன் முன்கோபமும் படபடப்பும் உள்ளவனென்பது, பாணச்சிறுவனைக் கைவேலால் குத்தியதனாலும், உண்மையரசனை ஒருவருமறியாது மாயமாக ஒழித்து விட்டதனாலும் யாவரும் நன்றாய் அறிந்திருந்ததே. ஆதலால் பாவி சாளுவன, பத்மினியையும் சென்னப்பனையும் யாது செய்வானோ என்று ஜனங்கள் அஞ்சினர். இவர்களைக் குறித்துச் சாளுவன் ஏதாவது கொடிய உத்தரவு பிறப்பிப்பான் என்று ஜனங்கள் ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்திருந்தனர்.

பத்மினியும் சென்னப்பனும் சாளுவனது குணத்தை அறியாதவரல்லர். பத்மினி, அன்றிரவே அரண்மனையினின்றும், ஒருவரும் அறியாவண்ணம், வெளியே புறப்பட்டுப்போயினள். சென்னப்பனோ, பத்மினி அரண்மனையைவிட்டு எங்கேயோ போய்விட்டனள் என்று கேள்விப்பட்டபோது, மிகவும் மனம் கலங்கினான். அம்பிகையென்னும் அரசியின் பணிப்பெண்ணாக அவள் அரண்

மனைக்கு வந்திருந்த வரலாறெல்லாம், அவன் முன்னமே கேள்விப்பட்டிருந்தான். ஆனால், அவன் அவளை ஒருதரங் கூட நேரிற் பார்த்ததில்லை என்றாலும், மிக்க கட்டழகி யென்றும் அறிவாளி யென்றும் தான் கேள்விப்பட்டிருந்த கன்னிகை, வெளிப்படையாகத் தன்மீது காதல் கொண் டுள்ளதைத் தெரியப்படுத்தியதைக் குறித்து, சென்னப்பன், மிக்க த்ருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்தான். அவள் ஊரைவிட்டுப் போய்விட்டாள் என்பதையும், பொறாமை காரணமாகச் சாருவன் தனக்கு ஏதேனும் கடுந்தண்டனை விதிக்கக்கூடுமென்று நாடெங்கும் ஜனங்கள் பேசிக்கொள் வதையும் கேட்ட சென்னப்பன், சாருவன் தனக்குச் செய்திருக்கும் நன்மைகளுக்காக அவனிடத்தில் நன்றி யறிவுள்ளவனாயினும், அப்போதிருக்கும் நிலைமையில் ஊரைவிட்டோடிப்போவதே நன்றென முடிவுசெய்து, அப்படியே விரைவில் அவ்வூரினின்றும் வெளியேறி மறைந்துவிட்டனன்.

அத்யாயம் 11. செங்கல்பட்டு ஸ்வாமியார்.

இந்தியாவைப்போல வேறெந்தநாட்டிலும், தெய்வ பக்தியும் மதப்பற்றும் அவ்வளவு சிறந்துகாண்பது அரிது. இந்தியர்களுடைய ஒவ்வொரு செயலிலும், அவர்க ளுடைய மதாபிமானம் வெளிப்படையாய்த் தெரியவரும். இந்தியதேச சரித்ரத்திற் காணப்படும் அருஞ்செயல்கள் எவையாயினும், அவற்றால் விளக்கப்படும் வீரம் பெர்றுமை அன்பு முதலிய உயர்குணங்களெல்லாம், இந்தியர்களுக்கு இயல்பான ஆஸ்திக மனஸிலிருந்து உதித்தவைகளே. தெய்வபக்தியினால், எவ்வளவு அரசர்கள் பெரியராஜ்யங் களை ஜயித்திருக்கிறார்கள்! எவ்வளவு பெரிய கட்டிடங்கள்,

காண்போர் மனத்தைக் கவரும்படி, மிக அழகாகவும் உறுதியாகவும் கட்டப்பட்டிருக்கின்றன!! வேறு எவ்வித முயற்சியாலும் செய்தற்கருமையான பெருங்காரியங்கள், மதாபிமானத்தால் இனிது முடிந்திருக்கின்றன. உலகவாழ்க்கையில் நிகழும் பற்பல துன்பங்களால் மனங் கலங்கி வருந்தியவர்கள், வேறு எவ்விதத்தாலும் மன அமைதி அடையப்பெறாது, தெய்வபக்தியால், தம்மனக் கவலை நீங்கி ஸுகமாக வாழ்ந்திருக்கிறார்கள். அரசர்கள், தம் மணிமுடி துறந்து, நாடு நகரம் செல்வம் முதலியவற்றை விட்டு, காடுசென்று கடவுளை த்யானித்துக் காலங் கழித்திருக்கிறார்கள். ராஜ கன்னிகைகள், தம்முடைய செல்வத்தையும் கௌரவத்தையும் பாராட்டாது பக்தியிற் சிறந்தவர் பரம ஏழையாயிருப்பினும், அவரை விரும்பி, அவருக்கே மணமாலை சூட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட செயல்கள் எத்தனையோ இந்துதேச சரித்ரத்தில் மலிந்து கிடக்கின்றன. உயர்ந்தகுலத்தில் மிக்க செல்வநிலையிற் பிறந்து வளர்ந்தவர்கள், செல்வத்தினையும் அதனால் வரும் சிற்றின்பத்தினையும் துறந்து, தம் வாழ்நாள் முழுவதும் பிறர்க்கு நன்மை செய்வதிலேயே செலவிட்டு, தமக்கும், அதனால் என்றுமழிவில்லாத பேரின்ப நிலையைத் தேடிக் கொள்ளவில்லையா?

மதாபிமானத்தினால் இவ்வளவெல்லாம் நம் நாட்டில் நடந்திருக்கின்றன என்பது உண்மையெனினும் வெளி வேஷத்தில் ஆஸ்திகர்போல் நடித்து, அதனால் தமக்கு மாத்ரம் நன்மையை நாடிக்கொள்ளும் வஞ்சகர்களும் நம் நாட்டிலிருக்கிறார்கள். வயிற்றுப் பிழைப்புக்காக காவி வஸ்த்ரம் கட்டிக்கொள்ளும் துறவிகள் எவ்வளவுபேர் இப்போது நம் நாட்டிலிருக்கிறார்கள்! தாம் செய்துவரும் தீச்

செயல்களும் தமது தீக்குணமும் பிறராறியாமலிருப்பதற்காகவென்றே, எத்தனைபேர், மதப்பற்றுள்ளவர் போலும் தர்மிஷ்டர்கள் போலவும் காட்டிக்கொள்ளுகிறார்கள்!! இதனால் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும், திருக்குறளில் (277, 278)

"புறங்குன்றி கண்டனைய ரேனும், அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து" —என்றும்,
"மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்" —என்றுங்கூறினார்.

இவற்றையெல்லாம் ஆராய்ந்து நோக்கில் நம் நாட்டிற்கு தெய்வபக்தியினால் விளைந்துள்ள நன்மைகளைப் போலவும், போலிப்பக்தியினால் மூண்டுள்ள தீமைகளைப் போலவும், வேறெங்கும் நன்மை தீமைகள் ஏற்படவில்லை யென்பது தெரியவரும்.

மதோபதேசம் செய்பவர்களுக்கு நம் நாட்டில் எப்போதும் விசேஷ கௌரவம் உண்டு. சிறந்த ஓர் குருவினதருள்பெற்று அவருபதேசப்படி நடந்து வந்தால் தான் ஒருவனுக்குக் கடவுள் காட்சியளிப்பாரென்பது, ஹிந்து மதக் கொள்கையில் ஒன்று. ஆதலால், இந்நாட்டில் உலகவாழ்க்கையைத் துறந்து ஜனங்களுக்கு மதோபதேசஞ் செய்வதையே தம் தொழிலாகவுடைய துறவிகளை எங்குங் காணலாம். ஊருக்கூர், தவறாமல் கோவில் எப்படியிருக்கிறதோ, அப்படியே, பெரிய ஊர்தோறும் துறவிகள் மடமும் உண்டு. அங்குள்ள ஸந்யாசிகள், எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எந்த மனிதனுக்காயினும் தம்மாலியலுமளவு உதவி செய்ய ஸித்தமா யிருப்பார்கள். ஜனங்களும் அவர்களைத் தெய்வமெனக் கருதி வணங்கி யுபசரிப்பார்கள்.

இப்படிப்பட்ட துறவிகளில் ஒருவர், செங்கல்பட்டில் இருந்துவந்தார். செங்கல்பட்டு, இப்போது ஒரு பட்டணமா யிருக்கிறதெனினும், நம் கதை நிகழுங் காலத்தில், ஒரு சிறிய க்ராமமாகவே இருந்தது. அங்கிருந்த 'ஸ்வாமியார்' ஒரு மெய்த் துறவியாதலால், ஜனங்களுக்கு அவரிடத்தில் மிக்க அன்பும் மதிப்பும் இருந்தன. அவர் சிறு பிள்ளையா யிருந்த போதே, தேச சஞ்சாரம் செய்து அங்கங்குள்ள விசேஷ ஸ்தலங்களைத் தரிசித்து புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நாநஞ் செய்துவர வேண்டுமென்னும் ஆவல் அவர்க்கு அதிகமாக இருந்தது. ஒருநாள் அவர், ஒருவருக்கும் சொல்லாமல் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு தேச ஸஞ்சாரம் செய்யப் போய்விட்டார். அப்படிச் சென்றவர், அங்கங்குள்ள ஸந்யாஸிகளுடன் அளவளாவி மகிழ்ந்து, ஊரூராய்ப்போய்க் கொண்டிருந்தனர். இப்படிச் சில வருஷங்கள் சென்றன. பிறகு இவர் ஊருக்குத் திரும்பிவந்தபோது, இவருடைய தாயும் தந்தையும், இவனுக்கு ஞானப்பைத்யம் பிடிக்கும் போலிருக்கிறது என்றெண்ணி, உலகவழியில் மனந்திரும்புவதற்காக, பணக்காரக்குடும்பத்திலிருந்து ஒரு அழகிய பெண்ணைத் தேர்ந்தெடுத்து, இவர்க்கு அவளை மணம்புரிவித்தனர். கல்யாணத்தினாலே இவர்மனம் மாறிவிடுமென்று இவருடைய பெற்றோர் நினைத்தது பிழையாயிற்று; ஏனெனில், கல்யாணமானபிறகும், இவர் முன்போலவே தேச ஸஞ்சாரம் செய்தற்குப்போய்விட்டனர். இம்முறை இவர், பற்பல தூரதேசங்களுக்குப் போய், அங்கங்குள்ள ஞானிகளிடத்தில் உபதேசம்பெற்று, மனத்தெளிவடைந்ததனால், தம்மூர்க்குத் திரும்பிப்போகாமலே இருந்துவிட்டனர். இங்ஙனம் உலகப்பற்றினை முற்றத்துறந்தவர்க

ளுக்கு, தாம் சென்ற ஊரெல்லாம் சொந்த ஊர்தான். நம் ஸ்வாமியாரும், ஊரூராகச் சென்று, பிறகு செங்கல்பட்டுக்குவந்து, அவ்வூரிலே சிலகாலமாகத் தங்கியிருந்தனர்.

இவருடைய மடம், ஊருக்கு வெளியே பாலாற்றங் கரையில் ஒரு பெரிய ஆலமரத்தின் அடியிற் கட்டப்பட்டிருந்தது. அது ஒரு சிறிய குடிசைதான் அவர், அநேகமாக எப்போதும், தம்மடத்துக்குமுன் சுத்தமாக மெழுகப்பட்டிருக்கும் மேடையின்மேல் இருப்பது வழக்கம். அவரைச்சுற்றி எப்போதும் ஜனங்கள் இருப்பார்கள். அவர்களுக்கு ஸ்வாமியார், மதவிஷயமாக ஏதேனும் உபதேசம் செய்துகொண்டேயிருப்பார். வைத்யத்திலும் நமது சுவாமியாருக்கு நல்ல பழக்கம் உண்டு. அவர், தேசஸஞ்சாரம் செய்தபோது, அங்கங்குள்ள பெரியோர்களிடமிருந்து, நோய்களின் இயல்பு இன்னதென்பதையும், அவற்றைத் தீர்ப்பதற்குத்தக்க மருந்துகள் இவை யென்பதையும், அம்மருந்து செய்தற்கு வேண்டிய பச்சிலை முதலியன இவ்விடங்களிற் கிடைக்குமென்பதையும், இவை போன்ற பிறவற்றையும் கேட்டறிந்து கொண்டனர். இவர்க்கு, வைத்யஞ் செய்வதில் நல்ல 'கைவாசி' யுமுண்டு, இப்படி ஜனங்களுக்கு வைத்யமும் மதோபதேசமும் பண்ணிவந்ததனுல், இவர்பேர் விரைவில் சுற்றுப்புறத்தூரெல்லாம் பரவிற்று.

இவருடைய உபதேசங்களெல்லாம் தமிழ்ப்பாட்டாகவே இருக்கும். தமிழ்ச் செய்யுட்களின் இசையும் இயக்கமும் வேறெந்த பாஷையிலும் காண்பதரிது. தமிழ்மொழியில் செய்யுள் நூல்களின் தொகையோ எண்ணில் அடங்காது. முதனூலாகிய ஸம்ஸ்கிருத 'வால்மீகி ராமாயணத்

தைப் போலவே அதன்வழிநூலாகிய 'கம்பராமாயண மும்' மிக உயர்ந்த சிறப்புடையதென அறிஞர்கள் கூறு கிறார்கள். சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்ற பஞ்சகாவ்யங்கள் தமிழிலிருக்கின்றன. புராணநூல்களோ என்றால், அவை கணக்கில. பக்திரஸம ததும்பிக் கேட்போருள்ளத்தைத் தம்வசமாக்கிக்கொள்ளும் ஸ்தோத்ரப்பாக்கள் எத்தனையோ, நமது அருந்தமிழ்மொழியில் மருந்திலும் இனியனவாய்க் காணப்படுகின்றன. எனினும் இவற்றையெல்லாம் விட ஏற்றம்வாய்ந்துள்ள பல அரிய நீதி நூல்கள், சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் உடையனவாய்த் தமிழ்மொழியில் விளங்குகின்றன. இவ்வளவு சிறப்புடைய தமிழ்மொழியில்தான் பாடல்கள் ரூபமாக, நம் செங்கல்பட்டு ஸ்வாமியாரும் ஜனங்களும் ஸர்வஸமய ஸமரஸக் கருத்துகள் அடங்கிய உபதேசங்களைச் செய்துவந்தனர். இவருடைய பாட்டுக்கள், உருக்கமும் பக்தியும் ஒருங்கு சேர்ந்து, கேட்போர் கல்மனத்தையும் கசியச்செய்யும்.

இவ்வாறு ஜனங்களுக்கு நன்மைபுரிவதையே தமது முதல்நோக்கமாகக் கொண்டிருந்த நம் ஸ்வாமிகளுடைய புகழ், விரைவில் நாடெங்கும் பரவியது. செங்கல்பட்டு ஸ்வாமிகளிடம் உபதேசங்கேட்கவென்றே, நெடுந்தூரத்திலிருந்து ஜனங்கள் வரத்தலைப்பட்டனர். புண்ணியஸ்தலங்களுக்கு யாத்ரைசெய்பவர்களெல்லாம், செங்கல்பட்டுக்கு வந்து, நம் ஸ்வாமியாரை தரிசித்துப்போகாவிட்டால், அதைத் தம்யாத்ரைக்கு ஒரு பெருங்குறையாகவே கருதி வந்தார்கள்.

ஒருநாள் அவரைக்காணுதற்கு வந்திருந்த ஜனங்களில், ஒரு ஸ்திரீ, சிறிதுநேரம் அவரைக் கவனித்துப்பார்த்தாள்.

உடனே, அவள் கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாகச் சொரிந்தது; ஏனெனில், இவள்தான், முன் நம் ஸ்வாமியாருக்குத் தம் பெற்றோர்களால் மணஞ்செய் விக்கப்பட்டவள். இவளை நம் ஸ்வாமிகள் பிரிந்து எத்தனை யோ வருஷங்களாயின. 'உலகத்துக்கெல்லாம் நன்மை புரிந் துவரும் உத்தமபுருஷராகிய இவரை வதுவைசெய்து கொண்டேனெனினும், எப்போதும் இவருடனிருந்து இவ ருக்குக் குற்றேவல் செய்வதற்கு எனக்கு அத்ருஷ்டம் இல் லாமற்போயிற்றே!' என்று அவள் மனம் வருந்தினாள். இவற்றையெல்லாம் உணர்ந்துகொண்ட நம் ஸ்வாமியார், அவளுக்கு ஆறுதல்கூறி, தனக்கும் அவட்கும் ஒருவிதப் பற்றுமில்லையென்றும், தன்னைப்பற்றிய எண்ணத்தை அவள் அறவே மறந்துவிடவேண்டுமென்றும் சொன்னார். அதுகேட்ட அக்கற்புக்கரசியும், அடிபற்றமரம்போலத் தரையில் விழுந்து, தன்கணவனுடைய கால்களைத் தன்கை களாற் பற்றிக்கொண்டு, "ஸ்வாமி! தாங்கள், ஜனங்கள் உள்ளத்தில் தெய்வபக்தியை உண்டாக்கி, அவர்களை நல் வழியில் திருப்பிவருகிறீர்கள். இப்படிப்பட்ட கார்யங் களைச் செய்துவரும் தங்களுக்கு நான் ஒரு இடையூறாக ஏற்பட்டேனெனினும், எனது வேண்டுகோளையும் சற்றுத் திருவுள்ளத்தில் அமைக்கவேண்டும். நாமிருவரும் ஒரு வரையொருவர் மணஞ்செய்து கொண்டாய்விட்டது. அது முறையாயினும் ஸரி; தவறாயினும் ஸரி; எனக்கு, தங்கள ருகிருந்து பணிவிடை செய்வதிலும் சிறந்ததொழில் வே றொன்றுமில்லை. தாங்கள் அடியேனை அலக்ஷ்யஞ்செய்து தள்ளிவிட்டால், எனக்கு வேறொருகதியுமில்லை. அன்றியும் உலகத்திலுள்ள ஜனங்கள் யாவராயினும், அவர்க்கெல்லாம் நன்மையையே நாடிச்செய்து வரும் தங்களுக்கு, நான்

மனைவியாகிய குற்றத்தினலா, என் மீது மாத்ரம் அன்பு குறைவது? தங்கள் வாழ்க்கைத்துணையாகிய நான் வருத்த முற்றிருத்தல் தகுதியுடையதாகுமா? தாங்கள் எங்கிருப்பி னும், அங்குத் தங்களுடனிருந்து, தங்களுக்குக் குற்றே வல்செய்ய வேண்டுவதே, என் ப்ரார்த்தனை. இதனைத் திரு வுள்ளம் பற்றல்வேண்டும் என்றனள்.

ஸ்வாமிகளும், அவளுடைய கற்புநிலையையும் மனத் தூய்மையையும் கண்டு வியந்து, அவள் விருப்பத்தின் படியே அவளைத் தன்னுடன் இருந்துவரும்படி சொல்லி னர். அன்று முதல் அவளும், ஸ்வாமிகள் மடத்தைப் பெருக்கி மெழுகிக் கோலமிட்டுச் சுத்தம் செய்வதிலும், அவர் பூஜைக்கு வேண்டிய புஷ்பம் முதலியவற்றைச் சேக ரிப்பதிலும் மிக்க கவனமுள்ளவளாயிருந்தாள். இவர்க ளிருவரும், இப்படி, புளியும் அதன் மேலோடும்போல, வெளிப்பார்வைக்குச் சேர்ந்திருந்தும், சிந்தையில் உலகப் பற்றுச் சிறிதும் இல்லாதவர்களாய், தம்தம் தொழில்களைச் செய்து வந்தனர்.

இவர்கள் இவ்வாறிருந்து வரும்போது, சாளுவன் யாது செய்துவிடுவனே என்று பயந்து சந்த்ரகிரியினின் றும் ஒருவருமறியாவண்ணம் புறப்பட்டுப்போன சென் னப்பன், பற்பல இடங்களிலும் அலைந்துதிரிந்து, பிறகு செங்கல்பட்டுக்கு அருகிலுள்ள ஸ்வாமிகள் மடத்திற்கு வந்துசேர்ந்தான். ஸ்வாமிகளும், அவன் உடல் சோர்ந் திருப்பதையும் மனங்கலங்கியிருப்பதையும் கவனித்தனர். ஸ்வாமிகளுக்கு இயல்பாகவே அவனிடத்தில் ஒருவித அபிமானம் ஏற்பட்டது. அவனது இளமையும், அழ கும், பெருந்தன்மைத் தோற்றமும் அவர் மனத்தைக் கவர்ந்தன. சென்னப்பனும், தன் வரலாற்றில் ஒன்றும் ஒளிக்காது, உள்ளன உள்ளவாறே அவர்க்கு உரைத்தான்.

அத்யாயம் 12. சென்னப்பனும் ஸ்வாமிகளும்.

சென்னப்பன் வரலாற்றைக் கேட்டுவந்த ஸ்வாமிகளுக்கு அவனது கள்ளங்கபடமில்லாத உள்ளத்தினியல்பு தெள்ளிதிற் புலப்பட்டது. 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்பதற்கிணங்க, சென்னப்பனைக் கண்ட போதே, அவன் குணவானென்று தெரியவந்தது. அவர், அவனைநோக்கி, "அப்பா! நீ மனங்கலங்கவேண்டாம். உலகத்தில், இவ்வாறு, நல்ல நிலைமையிலிருந்து திடீரென்று எத்தனைபேர் கஷ்டதசையடைந் திருக்கிறார்கள்; அவர்களுள் நீயும்ஒருவன். உலகவாழ்க்கை என்பது யாது? இதோ நமக்கெதிரிலிருக்கும் இந்தப் பெரிய 'ரஸ்தா'வைப் பார். அதில் எவ்வளவு பேர் ஒவ்வொரு நிமிஷமும் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருக்கிறார்கள். சிலர் இதன் வழியாக வடக்கே காசியிலிருந்து தெற்கே ராமேச்வரத்துக்குப் போகின்றனர். மற்றுஞ்சிலர், இவ்வழியாகவே இந்தஊரிலிருந்து அடுத்த ஊருக்குப் போகிறார்கள். போகும்வழியில், சிலர் மற்றவர்களுடன் சேர்ந்துபோகிறார்கள்; சிலர் தனித்துச் செல்லுகிறார்கள். வேறுவேறு இடங்களிலிருந்து வருபவர்கள், இந்த 'ரஸ்தா'வில் கொஞ்சதூரம் சேர்ந்து வருகிறார்கள்; பிறகு, தம்தம் ஊர் வந்துவிட்டால் பிரிந்துவிடுகிறார்கள். இதுபோலவேதான் இந்த ப்ரபஞ்ச வாழ்க்கையும். இதற்கு ஆரம்பமுமில்லை; முடிவுமில்லை. சிலர், உலகவாழ்க்கையில் விருப்புமில்லாதவராய் வெறுப்புமில்லாதவராய், தம்வாழ்நாளைக் கழிக்கின்றனர். மற்றுஞ்சிலர், தாய், தந்தை, மனைவி, மக்கள், சுற்றத்தார், நண்பர் முதலியவர்களிடத்தில் மிக்க அன்புள்ளவர்களாய், உலகின்கண் வாழ்ந்துவருகின்றனர். ப்ரதிதினமும் இந்த ப்ரபஞ்சத்திலே பலர் பிறக்கின்றனர்; பலர் இறக்கின்றனர்.

ஸூர்யன் ஒவ்வொருநாளும் காலையிற் புதிதாகப் புறப்படுகிறான்; மாலையில் மறைந்துவிடுகிறான். ருதுக்களும் தமக்குரியகாலங்களில் தோன்றுகின்றன; பின்னர் மாறிவிடுகின்றன. இவைகளெல்லாம் எங்கிருந்து வருகின்றன என்பதையும், எங்குப்போய் மறைந்துவிடுகின்றன என்பதையும் ஒருவரும் அறியார்.

"இப்படி விசித்ரமான உலகில் தோன்றும் மனிதனே, இதனினும் விசித்ரமானவன். உலகிற்பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும், அசேதனப்பொருள்களுக்கில்லாத விவேகம் என்பதொன்று இருக்கிறது. அதனால், மனிதன், 'இது கொள்ளற்பாலது, இது தள்ளற்பாலது' எனப் பகுத்தறிந்துகொள்ளும் ஆற்றலுடையவன். ஒவ்வொரு மனிதனுக்கும், தன்தன் நிலைமைக்கேற்பச் செய்யவேண்டிய கடமைகளுண்டு. அவற்றைச்செய்வதில், இந்தஉலகவாழ்க்கையென்னும் 'ரஸ்தாவிற் செல்லும் மனிதர்களிற் சிலர், கல்மேலும் முள்மேலும் நடக்கவேண்டிவரும். சிலர்க்கு, இந்தக் கற்களாலும் முட்களாலும், உண்டாகும் காயம் சீக்ரத்தில் ஆறிவிடும்; சிலர்க்கு ஒருபோதும் அது ஆறுமலேயிருக்கும். மற்றுஞ்சிலர்க்கு, வழியில் ஒருவித இடையூறும் ஏற்படுவதில்லை. எவனுக்குத் துன்பம் அதிகமாக ஏற்படுகிறதோ, அவனுக்குப்பொறுமை அதிகமாகவேண்டும். அவனால்தான் உலகத்துக்கு அதிகமான நன்மை விளையும். ஆதலால், நீ, உனக்கு நேர்ந்திருக்கும் கஷ்டங்களைக் குறித்து மனம்வருந்தாதே. உன்னுடைய மனோபலத்தைப் பரிசோதிப்பதற்குத் தகுந்த ஸமயம் நேர்ந்திருப்பதைக் குறித்து நீ ஸந்தோஷிக்கவேண்டும். இரண்டுபேர் ஒரு ஆற்றில் நீந்துகிறார்கள்; ஒருவன் நீந்துவதிற் கைவந்தவன் அவன் விரைவில் நீந்தி எதிர்க்கரை சேர்ந்துவிடுகிறான்.

மற்றவன் நீந்தத்தெரிந்தவனெனினும், ஆற்றுவெள்ளத்தின் வேகத்தினால் அலைக்கப்பட்டு, தத்தளித்துத் தடுமாறி, அக்கரை சேருகிறான். இவ்விருவர்களில் இரண்டாவனையே, கரையிலிருந்து காட்சி காண்பவர்கள் மிகவும் கவனிக்கின்றார்கள். மனிதனுக்குக் கஷ்டம் வந்துகொண்டுதான் இருக்கும்; வரத்தான்வேண்டும்; ஆனால், எதுவரினும் அவன் மனம் கலங்கக்கூடாது. * "மெய்த்திருவந்துற்றாலும் வெந்துயர்வந் துற்றாலும், ஒத்திருக்கும் உள்ளத் துரவோனே" கடவுளால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவற்றுளெல்லாம் மிக்க பெருமை வாய்ந்தவன்" என்று, மிக விரிவாகவும் தெளிவாகவும் கூறினார்.

இவற்றையெல்லாம் கவனித்துக்கேட்டுவந்த சென்னப்பன், மிக்க வினயத்துடன், "ஐயா! தாங்கள் இதுவரைச் சொல்லிவந்தவையெல்லாம் என்செவிக்கு அம்ருதம்போன்றிருந்தன. ஆனாலும், ஒருஸந்தேஹம்மாத்ரம் நெடுநாளாக என்மனத்தில் இருந்துகொண்டிருக்கிறது: அதாவது, உலகத்தில் நல்லோர் வருந்துவதும், அல்லோர்வாழ்வதும்நாம் கண்கூடாகக் கண்கின்றோமே; அது, துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனம் செய்யும் கடவுளின் திருவுள்ளத்துக்கு ஏற்றதாகுமோ? பாருங்கள்! சாணுவன் இருக்கிறான். அவன் அரசனைச் சிறைப்படுத்தியதுமன்றி, அச்செயல் அநீதியென்று எடுத்துக்காட்டிய பாணச்சிறுவனையும், பார்ப்பவருள்ளம் பதைக்கும்படி ராஜஸபையிற் கொன்று வீழ்த்தினன். பிறகு, அரசனைக் குலத்தோடும் குரூரமாகக் கொலைபுரிவித்தனன். இவ்வளவு பாதகச்செயல்களைச் செய்திருந்தாலும், அவன், இப்போது, கிருஷ்ணதேவ

---

* நளவெண்பா, ஸ்வயம்வரகாண்டம், 5-ஆம் பாட்டு. திரு— செல்வம்; உள்ளத்து உரவோன்— மனோபலமுள்ளவன்.

ராயர் * அரசுசெலுத்திய பெரிய ராஜ்ய முழுவதற்கும் தானே அரசனாய், எல்லாச்செல்வமும் நிறைந்து விளங்குகிறானே ! இது தருமா?" என்று கேட்டான்.

அதற்கு, அந்தப் பெரியவர், "சென்னப்பா! எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளின் திருவருட்செயல், சில் வாழ்க்கையும் பல்பிணியும் சிற்றறிவுமுடைய நம்மால் எளிதில் அறியலாகுமோ? இவ்வுலகில் மேனோக்காகப் பார்ப்பவர்க்கு, இயற்கைக்கு மாறுபட்டனபோல எத்துணையோ செயல்கள் காணப்படும். என்னுடைய அநுபவத்தில் நடந்திருப்பவற்றில் ஒன்று சொல்லுகிறேன். அதைக்கேள் : ஒருமுறை, என்னிடம் சிஷ்யனாயிருந்த ஒரு சிறுவனுடன் நான் தேசஸஞ்சாரம் செய்தேன். போகும் வழியில், ஒரு பணக்காரனுடைய வீட்டில் நாங்கள் முதலில் தங்கினோம்; அங்கு, எங்களுக்கு வெகு ஆசார உபசாரங்கள் நடந்தன. பொற்கிண்ணம் வெள்ளித்தட்டு முதலியவற்றில் எங்களுக்கு அவன் சிற்றுண்டி வழங்கினான். அன்று அங்குத்தங்கி, மறுநாள் வழக்கம்போல் வெளியே புறப்பட்டுச் சென்றோம். அப்படிச் செல்லும் போது, பெருமழை பெய்ய ஆரம்பித்தது; காற்றும் கதித்துவீசியது; அப்போது ஸாயங்கால ஸமயமாதலால், எங்கும் இருள் மூண்டுகொண்டது. இவற்றால் கஷ்டப்படும் எங்கள் கண்ணுக்கெதிரே, ஒரு பெரிய வீடொன்று தென்பட்டது. அவ்வீட்டு வாயிற்கதவு அந்திப்பொழுதிலும் அடைக்கப்பட்டிருந்தது. நாங்களிருவரும் அவ்வீட்டிற்கருகே சென்று, பலமுறை கதவை பலமாகத் தட்டினோம். நெடுநேரம் அதற்கு ஒருவரும் ஏனென்று கேட்கவில்லை. பிறகு வயதுமுதிர்ந்த ஒருவன், கையில்

* விஜயநகரராஜ்யத்தை ஆண்ட அரசர்களுள் மிகச்சிறந்தவர்.

ஒருசிறு தீபத்துடன் வந்து கதவைத் திறந்தான். அவன் முகக்குறியால், அவனுக்கு எங்கள் வரவில் வெறுப்புண்டாயிற்றென்று அறிந்துகொண்டோம்; எனினும் நாங்கள் அப்போதிருந்த நிலையில் வேறிடம் செல்வதற்கில்லை; ஆதலால், அந்தமனிதன் அரைமனத்தோடு அழைக்குமுன்னரே உள்ளேசென்றோம். அங்கு வீட்டுக்காரன் எங்களுக்குக் கொஞ்சம் மட்டையரிசிச் சோறு போட்டான்; சற்றுநேரத்துக் கெல்லாம் மழையுங் காற்றும் சிறிது குறையவே, 'நீங்கள் போகலாம், என்று எங்களுக்கு உத்தரவிட்டான். நாங்கள் அங்கிருந்து வெளியே புறப்படும்பொழுது, என்னுடனிருந்த சிஷ்யன், தான் மறைத்து வைத்திருந்த ஒரு பொற்கிண்ணத்தை அந்த வீட்டுக்காரனுக்கு வெகுமதியாக அளித்தான். இதைக் கண்டவுடன், அந்தப் பொற் கிண்ணத்தை, முதனாள். எங்களை மிகுந்த மரியாதையுடன் உபசரித்த பணக்காரனது வீட்டிலிருந்து பையன் திருடி யிருக்க வேண்டுமென்று, எனக்குத் தோன்றியது. அப்போது அவனிடம் ஒன்றுஞ் சொல்லாது, இல்லறத்தார் செய் கடனிற் சிறந்ததாகிய விருந்தோம்பலை என்றும் தவறாது செம்மையாகச் செய்துவரும் ஒருவனுக்கு இங்ஙனம் பொருள் நஷ்டமும், அந்த தர்மத்தைச் செய்வதில் அபிமானமில்லாத லோபியொருவனுக்கு விசேஷ லாபமும் உண்டாயிற்றே! இதுவா முறை? என்று ஸந்தேஹித்துக் கொண்டு சென்றேன். பையனும் வாய்திறவாது என்கூட வந்துகொண்டிருந்தான்.

"பிறகு நாங்களிருவரும் ஒரு க்ருஹஸ்தனுடைய வீட்டிற்குச் சென்றோம். அவன் எங்களை அன்போடழைத்து உபசரித்தனன். அவன் என்னுடன் பேசிக்

கொண்டிருந்தபோது, அவனுடைய தெய்வபக்தியும் நற்குணமும் என் மனத்தைக் கவர்ந்தன; நாங்கள் அன்றிரவு அங்கே தங்கினோம். மறுநாள் அங்கிருந்து புறப்படும் போது, சிஷ்யன், அந்த க்ருஹஸ்தனுடைய அருமைப் பிள்ளையாகிய இளங்குழந்தையை, அது தொட்டிலில் தூங்கிக்கொண்டிருக்கும்போது, கழுத்தை நெரித்துக் கொண்டிருந்தான். இந்தத் தீச்செயலைக் கண்ணுற் காணவும் அஞ்சி, நான் அவ்வீட்டினின்றும் சட்டென்று வெளியே ஓடினேன். என் பின்னர் அந்தப் பையனும் தொடர்ந்தோடி வந்தனன்; அவன் கண்ணிற்படாமல் மறைந்தோடவேண்டுமென்று நான் எவ்வளவு முயன்றும் அவன், என்னிலும் இளமையும் பலமுமுடையவனாதலால் விரைவில் என்பக்கம் வந்து சேர்ந்தான்.

"அதே ஸமயத்தில், அந்த க்ருஹஸ்தன் வீட்டு வேலைக்காரனொருவன் எங்களைப் போலவே வேகமாக எங்களருகே ஓடி வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்தவுடனே எனக்கு அச்சம் அதிகரித்தது. ஸரி! குழந்தை கொலையுண்டது தெரிந்து போயிற்று; பிடித்துச் செல்வதற்கே ஸேவகன் வருகிறான். இந்தப் பாதகன் செய்த கொலைக்கு நாமும் பழிசுமக்கவேண்டி வருமோ? என்றிவ்வண்ணம் எண்ணி ஏக்கமுற்றிருக்கையில், அந்த வேலைக்காரன் என்னை யணுகி, 'சாமி! நேற்று இவ்வெளி யெங்கும் பெருமழை பெய்ததனால், தங்களுக்கு வழி தெரிவது கஷ்டமாயிருக்கும்; அன்றியும், இங்கிருந்து கொஞ்சதூரத்தில் ஒரு காட்டாறு உண்டு. அதில் இப் போது வெள்ளம் பெருகிக்கொண்டிருக்கும். அதைக் கடந்து போவதற்கு ஒரே ஒரு குறுகிய சிறுபாலந்தான் இருக்கிறது. அது தங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ

என்று ஸந்தேஹப்பட்டு, 'என்னை, எங்கள் தலைவர், தங்களுக்கு வழி காட்ட அனுப்பினார்; அந்தப் பாலந்தாண்டிச் சென்றபின் நான் திரும்பிப்போகிறேன்' என்றுசொல்லி, எங்களுக்குமுன் வழிகாட்டிக்கொண்டு போனான்.

"சற்றுநேரத்தில் அந்தக்காட்டாறு குறுக்கிட்டது. அதன்மேல் போடப்பட்டிருந்த பாலமோ, மரத்தினாலாகிய ஒற்றையடிப் பாலம். அதுவும், மழைபெய்திருந்ததனால், வழுக்கல் வாய்ந்திருந்தது. அதன்மேல் நாங்கள் மெல்ல மெல்ல நடந்து சென்று மறுகரை சேர்ந்தோம். ஸேவகனும் எங்களிடம் விடைபெற்றுக் கொண்டு, திரும்பி, அந்தப் பாலத்தின்மேல் பையப்பைய நடக்கலானான். அப்போது நடந்ததை என்னவென்று சொல்வேன்! என்னுடனிருந்த பழிகாரப் பையல், அவன் பின்னே சென்று, சட்டென்று, அவனைக் கழுத்தைப் பிடித்துக் காட்டாற்றில் தள்ளிவிட்டான். ஸேவகனும் ஆற்று வேகத்தால் எற்றுண்டு, நீரில் முழுகி இறந்தான். இச்சிறுவன் தீச்செயல்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பார்த்துவந்த எனக்கு, அவன்மேல் பெருங்கோபம் மூண்டது. 'அடே! சண்டாளப்பாவி!!' என நான் அவனைவைவதற்கு ஆரம்பிக்கையில், அவன், வேறொருதிசை நோக்கி ஓடிவிட்டான். சனி தொலைந்ததென்று நான் சிறிது ஆறுதலடைந்தேனெனினும், என் கண்முன் நிகழ்ந்தசெயல்களை யெண்ணியெண்ணி, 'இவையெல்லாம் விபரீதமாயிருக்கின்றனவே! *" அறம் வெல்லும்; பாவந் தோற்கும்" என்னும் அறவுரை பொய்ப்பட்டதே. 'பெருங்கருணைத்தடங்கடல்' எனப் பெரியோர் கூறும் பரம்பொருளாகிய இறைவனொருவன் இருந்தால் இத்தகைய பொருந்தாச் செய்கைகள் உலகில்

* கம்பராமாயணம், சுந்தரகாண்டம், இலங்கணிவதைப்படலம், 35.

ஏன் நடக்கின்றன ?, என்றிங்ஙனம் சிந்தனைசெய்துகொண்டிருக்கையில், என்னையறியாமலே சற்றுத் தூங்கினேன்.

" அப்படித் தூங்குகையில் நான் ஒருகனவுகண்டேன். அக்கனவில் யாரோ ஒருபெரியவர் என்முன்வந்து, ' நீ மனக்கவலை நீக்குக. முழுமுதற்கடவுள் ஆட்சியில் உலகத்தில் யாதொருமுறைகேடும் ஏற்படாது. இதுகாறும் நீ ஸந்தேஹமுற்றவற்றிற்கெல்லாம் ஸமாதானஞ் சொல்லுகிறேன்; கேள்: முதல் முதல் பையன் பணக்காரன் வீட்டிலிருந்து பொற்கிண்ணந் திருடியது எதற்கோ என்றால், அந்தப் பணக்காரன் வீண் ஆடம்பரத்தில் விருப்புள்ளவன். அவன் வழிப்போக்கர்களுக்கு உதவி செய்கிறானெனினும் அவன் செய்வதெல்லாம் புகழைவிரும்பியேதான். இப்போது, பொற்கிண்ணம் பறிகொடுத்தபின், அவன் விலையுயர்ந்த வஸ்துக்களை வெளியில் எடுக்கமாட்டான்; அதனால் சிறிது சிறிதாக, அவன் மனத்திருந்த ஆடம்பரப்பிரியமும் அகன்றுவிடும். இந்த உத்தேசத்தோடுதான் அவனுடைய பொற்கிண்ணம் களவு செய்யப்பட்டது. பிறகு அந்தவட்டிலை லோபகுணமுள்ளவனிடத்தில் சிறுவன் சேர்ப்பித்தசெயலை நோக்குவோம்: அந்தக்கிழவன் பேராசைக்காரன்; அவன் ஒருவர்க்கும் ஒருகாசும் கொடானென்பது உங்களுக்குத்தெரிந்ததே. அன்றுதான் அவன் முதல்முதல்சிறிது அன்னதானம் செய்தான். தான்செய்த அச்சிறிய நன்மைக்குக் கைம்மாறாகக் கடவுள் பொற்கிண்ணம் அளித்தாரென அவன் கருதி, அன்றுமுதல் எப்போதும் தானதர்மம் செய்யவேண்டுமென்று உறுதிசெய்துகொண்டான். மற்று, அந்தப்பையன் மூன்றாம் வீட்டிற் குழந்தையைக் கொலைசெய்தானே, அது ஏனெனில், அம்மனிதன் இக்குழந்தைபிறக்கும் வரை, தெய்வபக்தி அடியார்பக்தி

யிற் சிறந்து விளங்கினான். இந்தக்குழந்தை, அவன் புத்தியையெல்லாம் இம்மை இன்பத்திலேயே இழுத்தது; மறுமைக்குரிய வழிதேடுவதை அவன் அறவேமறந்துவிடுவான் போல் இருந்தது; ஆதலால் தகப்பனுக்குப் பேரின்பம் நிலைப்பதற்காகப் பிள்ளையைக் கடவுள் எடுத்துக்கொண்டனர். இனி, அவ்வேலைக்காரன் ஆற்றுவெள்ளத்தில் தள்ளப்பட்டதும் ந்யாயமே; எப்படியெனில், பிள்ளையிறந்ததனால்பெருந்துயருற்றிருக்கும் பெற்றோர்களை, அவர்கள் அஜாக்கிரதையாயிருக்கும்போது, அன்றிரவில் கொலை செய்து, அவர்களுடைய செல்வத்தையெல்லாம் திருடிச் செல்ல வேண்டுமென்று அந்தச் சேவகன் எண்ணியிருந்தான். அப்படி அவன் செய்திருப்பானேல் எத்தனை தான தர்மங்களுக்கு இடையூறு வந்திருக்கும்' என்று கூறினர். இவற்றையெல்லாம் மிகுந்த ஆவலுடனும் ஆச்சர்யத்துடனும் கேட்டுவந்த நான், அந்தப்பெரியவரை நோக்கி, 'ஐயா, நான் அறிவில்லாத முழுமூடன்; இறைவன் திருவருட்செயலுக்கும் இழுக்குண்டோ? நான் எனது அறியாமையாலேயே இங்ஙனம் ஐயமுற்றிருந்தேன்' எனச் சொல்லி முடிக்குமுன் என் கனவும் முடிந்துவிட்டது. நானும் விழித்துக்கொண்டேன். ஏ! சென்னப்பா! என்னைப்போலவே உனக்கும் இந்தஸந்தேஹம் ஏற்பட்டது போலும். இனி, இவ்விஷயத்தில் எள்ளளவும் சம்சயம் வேண்டாம். உலகத்தில் தீமைகள்போலக் காணப்படுவனவும், எல்லாம்வல்ல எம்பெருமான் திருவருட்செயலே. அவற்றாலும் உலகுக்கு நன்மைகளே ஏற்படும். சாளுவனுடைய கொடிய செய்கைகளால், நம் நாட்டிற்கு நாம் எதிர்பாராத பெரிய நன்மை ஏன் ஏற்படக்கூடாது?" என்று சொல்லி முடித்தனர்.

இவைகளையெல்லாம் மிக்க கவனத்தோடு கேட்டுக் கொண்டுவந்த சென்னப்பன், 'அடிகாள்! தாங்கள் சொன்ன தெல்லாம், என்மனத்திற் பசுமரத்தாணிபோற் பதிந்து விட்டன. இப்போது எனக்கொரு யோசனை தோன்றுகிறது: அது, தங்களைப்போல் நானும் துறவியாகி, என்னால் இயலுமளவு ஜனங்களுக்கு நன்மைசெய்ய வேண்டுமென்பதே' என்றனன். அதற்கு ஸ்வாமிகளும், 'அப்பா! எதிலும் அவசரம் கூடாது; நீ வயதிற் சிறியவன்; உன் பெருமைக்கேற்ற நற்குணமுள்ள பெண்ணொருத்தியால் விரும்பப்பட்டிருக்கிறாய். உங்களிருவர் மனத்திலும் மெய்க்காதலிருக்குமேல், எப்படியாயினும் இறைவன் உங்களைக் கூட்டுவிப்பன். அதுவரை நீ இங்கேயே இருக்க விரும்பினால், யாதொரு தடையுமின்றி இருந்துகொண்டு வரலாம்' என்று சொன்னார். சென்னப்பனும், அப்படியே செய்கின்றேன், ஸ்வாமி!' என்றனன்.

அத்யாயம் 13. செங்கல்பட்டு பட்டணமானது.

சென்னப்பன் இவ்வாறு செங்கல்பட்டில் துறவியாருடன் இருந்துவருகையில், ஒருநாள் அவ்வூர்த்தலைவன் இறந்துபோனான். அவனுக்கு அப்போது ஒரே ஒரு ஆண் குழந்தை இருந்தது. ஆதலால் அக்குழந்தைக்குத் தக்க வயது வரும்வரை ஊருக்கு யார் தலைவனாகவிருப்பது என்பதே அவ்வூர்முழுதும் பேச்சாயிருந்தது. இறந்துபோன க்ராமாதிகாரியின் உறவினருள் ஒருவருக்கும், தலைமையை வஹித்து நடத்துவதற்குத் தகுந்த ஸாமர்த்யம் இல்லை.

இந்த ஸந்தர்ப்பத்தில், செங்கல்பட்டு ஜனங்களெல்லாரும் ஸ்வாமியாரிடம்சென்று, தங்கள் ஊரின் தற்கால நிலைமையைப்பற்றி அவருக்கு விரிவாகச் சொன்னார்கள்.

ஞானியாரும், அவர்கள் சொன்னவற்றையெல்லாம் நன்றாக ஆலோசித்துப்பார்த்து, "செங்கல்பட்டு வாசிகளே! இந்த ஸமயத்தில் நீங்கள் என்னசெய்யவேண்டியது என்பதைப் பற்றி, எனக்கு ஒரு எண்ணம் தோன்றுகிறது; இந்தக் குழந்தைக்குத்தக்க ப்ராயம்வரும்வரையில் இவ்வூர்த்தலைவனாக இருப்பதற்கு, அந்த வம்சத்திலே ஒருவருமில்லை. மற்றைப்படி செங்கல்பட்டு வாஸிகளில் ஸமர்த்தனுயுள்ள ஒருவனை நியமிப்போமென்றால், அதனால் மற்றவர்கள் அவன் மேல் பொறாமையுறுவார்கள்; சில ஸமயங்களில் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் ஸம்மதியார்கள்; அதுபற்றி, ஊரில் அடிக்கடி குழப்பம் உண்டாகும். இவற்றையெல்லாம் கருதின், இப்போது இங்கு என்னுடனிருக்கும் சென்னப்பனைச் செங்கல்பட்டுக்குத் தலைவனாகச்செய்ய நினைப்பது ஒரு சிறந்தயோசனையென்று தோன்றுகிறது. அவன், சந்த்ரகிரியரண்மனையில் தக்க கௌரவஸ்திதியில் இருந்தவன்; அவனுடைய தைர்யம், வீரம், பொறுமை முதலியவற்றைப் பற்றி நீங்களே கேள்வியுற்றிருக்கிறீர்கள். ஆதலால், இந்த ஸமயத்தில், நீங்கள் சென்னப்பனை உங்கள் க்ராமாதிகாரியாகச் செய்துகொள்வதுதான், செங்கல்பட்டின் க்ஷேமத்தைக் குறித்து நீங்கள் செய்யவேண்டிய காரியம். அவன் ஆண்டிற் சிறியவனெனினும், அறிவிற் பெரியவனென்பதை நீங்கள் அனுபவத்தில் அறிந்துகொள்வீர்கள்," என்று கூறினர்.

துறவியார் சொன்னவையெல்லாம், செங்கல்பட்டு வாஸிகளுக்கு முழுவதும் ஸரியெனத்தோன்றியது; ஆதலால் சென்னப்பன் அன்றுமுதல் செங்கல்பட்டுக்குத் தலைவனானன். அவன், சில நாட்களுக்குமுன் ஊரூராய்த்திரிந்து பின் செங்கல்பட்டுவந்து சேர்ந்தபோது, தான் அவ்வூருக்

குத் தலைவனாகக்கூடுமென்று கனவிலும் கருதவில்லை. சிறி தும் எதிர்பாராத இந்த அதிகாரம் வலியவந்து கிடைக்கவே, அவன் அதைக் கடவுளின் திருவருட் செயலெனவே கருதினான். தான் தலைவனானது செங்கல்பட்டின் க்ஷேமத் தைக்குறித்தென ஸ்வாமியார் கூறியது, அவன் மனத்தில் "கல்மேலெழுத்துப்போல்" பதிந்திருந்தது.

சென்னப்பன், தான் செங்கல்பட்டுக்குத் தலைவனா னதுமுதல், அவ்வூருக்குப் பகைவர்களாலும் கொள்ளைக் காரர்களாலும் துன்பம் வராமல் காப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். அந்தவூர், இயல்பாகவே மலை யரணும், நீரரணும், காட்டரணும் வாய்ந்திருந்தது. சென் னப்பன், ஊரில் ஒரு பெரியகோட்டை கட்டுவித்து, அதைச் சுற்றி அகழும் தோண்டுவித்தான். அந்தக்கோட்டை சற் றேறக்குறைய அரைமைல் நீளமும், அரைமைல் அகலமு முடையதாயிருந்தது. அதற்குள்தான், ஊரதிகாரிகள் வீடுகளும் கச்சேரியும் கஜானாவும் பிறவும் அமைந்திருந்தன.

ஊர்ஜனங்களெல்லாரும் தெய்வபக்தியுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்பது சென்னப்பனுடைய விருப்பம். அவனும் விசேஷதெய்வபக்தி யுள்ளவனாதலால், தான் அவ் வூர்க்குத்தலைவனான உடன், முதல்முதல் காத்தற்கடவுளா கிய மாவிஷ்ணுவுக்கு ஒரு கோவில் கட்டுவித்தான். அந் தக்கோவில், கருங்கற்களிற் சித்ரவேலை செய்யப்பட்ட கம் பங்களாலும், கமான் (வளைவு) களாலும்மிக அழகாக விளங் கியது.* அதன்பக்கத்தில், தோபோன்றதும் ஐந்தடுக்குக்

* இந்தக்கோவில், பின்னால், இந்நூலின் முதனூலாசிரியராகிய ஸ்ரீமான் ராவ் ஸாஹேப் தோ. இராமகிருஷ்ணபிள்ளையவர்க ளுடைய மூதாதையொருவரால், கோட்டைக்கு வெளிப்புறம், 'ஈஸ்ட் இந்தியா கம்பெனியா'ருடைய அனுமதியுடன் கட்டப்பட்டது.

களையுடையதுமான உயர்ந்த கட்டிடம் † ஒன்றும் கட்டப் பட்டது. அது, சற்றேறக்குறைய 16-ஆள்உயரம் உடைய தாக இருக்கும். அதனுச்சியிலிருந்து பார்ப்பவர்களுக்கு, இருபதுமைலுக்கப்பாலிருக்கும் காஞ்சீபுரத்துப் பெரிய கோவிலின் கோபுரங்கள் நன்றாகத் தெரியும். சென்னப் பன் இந்தத் தேர்போன்ற கட்டிடம் நிர்மாணஞ் செய்ததே, தான் ஒவ்வொருநாளும் அதன்மேலேறிக் காஞ்சீபுரத்தின் கோபுரதர்சனம் செய்வதற்காகத்தான். காஞ்சிவரதராஜப் பெருமாளுக்கு மாத்தியானிகபூஜை நடந்தவிஷயத்தைத் தெரிந்துகொண்ட பிறகு தான் சென்னப்பன் ப்ரதிதினமும் சாப்பிடுவதுவழக்கம். அதைவிரைவினில் தெரிந்துகொள்வ தற்காக, நான்குமைலுக்கொரு கட்டிடமாகச் செங்கல்பட் டுக்கும் காஞ்சிக்கும் இடையில் நான்குகட்டிடங்களைக்கட்டி அவற்றில் ஒவ்வொன்றிலும் சிலவாத்யக்காரர்களை இருக்கும் படி உத்திரவிட்டிருந்தான். காஞ்சியில் தேவாராதனைக்குரிய பேரிகை முழக்கம் கேட்டவுடனே, முதற்கட்டிடக்காரர்கள் தங்கள் வாத்யங்களைத் தாமஸம் சிறிதுமின்றி முழக்குவார் கள்; இவ்வொலிகேட்டு இரண்டாங்கட்டிடக்காரர்களும் அவர்களுக்குப்பின் மூன்றுங்கட்டிடத்தார்களும், கடைசி யாக நான்காங் கட்டிடத்தார்களும் அப்படியே செய்வார் கள். இந்த நான்காங்கட்டிடத்திலிருந்து வாத்திய ஒலி கா திற்பட்டால், காஞ்சீபுரத்தில் மாத்தியானிக திருவாராத னம் ஆய்விட்டதென்று அவன் அறிந்துகொள்வான்.

இப்படிக் கோவில் கோட்டை முதலியகட்டிடங்கள் ஏற்பட்ட-தனாலும், திருடர்பயம் இல்லாததனால், பக்கத் தூர்களிலிருந்து ஜனங்கள் செங்கல்பட்டுக்குவந்து குடி யேறத்தலைப்பட்டனர். நாளடைவில், செங்கல்பட்டில் ஜனத் தொகை அதிகரித்தது. சுற்றுப்புறத்தில் வெற்றுநிலமாக

† இக்கட்டிடம் இன்றும் அழியாமற் காக்கப்பட்டுவருகிறது.

இருந்தவிடமெல்லாம் வீடுகளாயின. அருகிலிருந்த காட்டுப் புன்செய்களெல்லாம் நாட்டுநன்செய்களாயின. எங்கும் செல்வ வளம் செழித்தோங்கிற்று. செங்கல்பட்டும், ஒரு க்ராமமாயிருந்தது, சீக்ரத்தில் ஒரு சிறியபட்டணமாயிற்று. அங்கே வ்யாபாரம் மேன்மேலும் வ்ருத்தியாக, நூற்றுக் கணக்கான வண்டிகள், பலவூர்ச் சரக்குக்களுடன் அவ் வூருக்குப் பிரதிதினமும் வருவதும்போவதுமாயிருந்தன. சென்னப்பனும், சிறிய க்ராமாதிகாரியாயிருந்தவன், இப் போது ஒரு சிற்றரசனாய்விட்டான்.

சென்னப்பன் இவ்வாறு செங்கல்பட்டை யாண்டுவரு கையில் சுற்றுப்புறத்து க்ராமங்களிற்பல, தாமாகவேவலிய வந்து அவனுடைய ஆட்சிக்கு உட்பட்டன. தன் குடி களின் நன்மையைக்கருதி, சென்னப்பன் எத்துணையோ முறை, தன்னுயிர்க்கே அபாயம்வரினும் அதைப்பாராட் டாது, பலஅரியசெய்கைகள் செய்துவந்தான். ஆடுமாடுகளை இரவில் அடித்துச்செல்லும் புலிமுதலிய காட்டுமிருகங் களிற்பல, சென்னப்பன்கையால் மரணமடைந்தன. கோட்டைக்கு ஒருமைல்தூரத்தில் ஓரிடத்தில் ஒரு கொடும் புலியை அவன் ஒருவனாகக் கொன்று வீழ்த்திய காரணம் பற்றி, அவ்விடம் இன்றைக்கும் 'புலிப்பாக்கம்' எனப்பேர் பெற்றுள்ளது. ஏழைகள், பலஹீனர்கள் அநாதைகள் முத லியவர்களைப் பாதுகாப்பது நிமித்தம் அவன், பலதடவை களிற் சிறந்த வீரச்செய்கைகள் செய்தனன். அவற்றில் ஒன்றையெடுத்து விரித்துரைப்பின், சென்னப்பன் செங்கல் பட்டை அரசாண்டுவந்த சிறப்பு எளிதில் அறியலாகும்.

ஒருநாள் ஒரு ஏழைஸ்திரீ, வெளியே வயலில் வேலை செய்துகொண்டிருந்த தன் புருஷனுக்குச் சாப்பாடு கொண்டுபோய்க்கொண்டிருந்தாள். அவள், தனலக்ஷ்மியால் அலக்ஷ்யம் செய்யப்பட்டிருப்பினும், ஸௌந்தர்யலக்ஷ்மி

யின் கடாக்ஷம் பெற்றிருந்தாள். அவள் போகும் வழியில் சென்னப்பனுக்கு, குஸ்தி கற்பித்தவனும் அரண்மனையில் அதிக செல்வாக்குள்ளவனுமான ஒருவன் அவளை எதிர்ப்பட்டு, அவளுடைய அழகினால் தன்மனம் மயங்கப்பெற்று, அந்த இடம் ஜனப்பழக்கமில்லாதிருந்ததனால், அவளைத் தன் இச்சைக்கிணங்கும்படி வேண்டினான். அதற்கு அவள் மறுக்கவே, அந்தமுரடன், தான் இன்னானென்பதையும், தனது செல்வாக்கு இவ்வளவென்பதையும் அவளுக்குத் தெரியப்படுத்தி, பிறகு, "பெண்ணே, இன்றிரவு நான் உன்வீட்டிற்கு வருவேன்; நீ அப்போதும் எனக்கு இணங்காவிட்டால், உன்கணவனை அங்கேயே கொன்றுபோட்டு, பலாத்காரமாக எனதெண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வேன். விஷயம் வெளிவந்தாலும் எனக்கு ஒரு பயமுமில்லை; அரசன் என் சிஷ்யனன்றோ? ஆதலால், இதைநன்றாக யோசித்து இன்றிரவு என்னை விரும்பியேற்றுக்கொள்" என்று சொல்லிப்போனான்.

அதுகேட்ட அந்த ஸ்திரீயும், மிக்க மனவருத்தமுற்று, செய்வதின்னதென்று தெரியாது மயங்கினாள். கழனிக்குப்போய் கணவனுக்குச் சோறுகொடுத்தனளேனும், அவனிடம், வழியில் நடந்ததைக்குறித்து அவள் ஒன்றும் சொல்லவில்லை. புருஷனும், வழக்கம்போல் ஸாயங்காலம் வீட்டுக்குவந்து, சாப்பாடானதும், நாள் முழுவதும் உழைத்து வேலைசெய்த ச்ரமத்தினால், உடனே நன்றாய்த் தூங்கிவிட்டான். ஆனால் அவன் மனைவியோ, இரவில் நேரம் ஆக ஆக மனோவிசாரம் அதிகரிக்கப்பெற்று, அழுதகண்ணுஞ் சிந்தியமூக்குமாக வீட்டுவாயிற்படியில் வந்து நின்றுகொண்டு, ஊர்காக்கும் காவற்காரர்களெவரேனும் அங்கு வருகிறார்களா என்று மிக்க ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அப்போது, அவனுடைய அத்ருஷ்டவசத்தினால், சென்னப்பனே காவற்காரவேஷம் பூண்டு அந்தத் தெருவிற்போய்க் கொண்டிருந்தான். சென்னப்பன், இப்படி,

*"பண்டை நாளில்நம் பார்த்திபர் வேற்றுருக்
கொண்டு மன்னுயிர்க் குற்றகு றைவெலாம்
கண்டுணர்ந்த"........

வாறுபோல, தானே மாறுவேஷம் தரித்து நகர்சோதனைக்காக இரவில் வெளியேபோவது வழக்கம். அன்றைக்கும் அப்படிப் போய்க்கொண்டிருந்த அவன் காதில் அந்த ஏழை ஸ்த்ரீயின் அழுகுரல் கேட்கவே, அவன் அவளையணுகி, அவளது துக்கத்தின் காரணத்தை அறிந்துகொண்டு, "அம்மா! நான் உன்கற்பைக் காப்பாற்றுகிறேன். நீ மனக்கவலையை நீக்கிவிடு" என்று கூறினான்.

அதற்கு அவள், "அப்பா! அது உன்னால் ஆகுமா? நீ ஒரு ஸாதாரணனானகாவற்காரன். அவனோ, நமதரசனுக்கு 'குஸ்தி' குரு" என்று மனவருத்தத்துடன் சொல்லினள்.

இதைக்கேட்ட சென்னப்பனும், "அம்மா! நான் ஒரு அற்பமான காவற்காரன் என்பதுண்மையே. எனினும், இந்தவிஷயத்தில், அரசனுடைய ஆசிரியனானாலும் ஸரி, அவனால் உனக்கு ஒருவிதத்தீங்கும் நிகழாவண்ணம் காக்கின்றேன். என்னுடைய கடமையை நான் செய்வதில், ந்யாயமொன்றையே பார்க்கவேண்டுமேயன்றி, குற்றவாளிகள் எப்படிப்பட்டவர், எவ்வளவு கௌரவமுடையவர்

---

* இது, இந்நூலாசிரியர், சென்னை கவர்னராயிருந்த ஸ்ரீமான் லார்ட் கார்மைகேல் அவர்கள் மீதியற்றி, மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் "செந்தமிழ்ப்" பத்திரிகையில் (விரோதிகிருதுவருஷம் பங்குனி மாதம்) வெளியிட்ட வாழ்த்துப்பாக்களில் ஒன்றிலிருந்து இங்கு எடுத்தாளப்பட்டிருக்கிறது.

என்பதைநான் கவனிக்கவேண்டியதில்லை. ஆதலால், நீ இனி மேல் பயப்படவேண்டாம்; நான் இங்கேயே இருக்கிறேன். ஆனால், நான் சொல்லியபடி இவ்விரவிற் கண்விழித்துக் கொண்டிருந்து, உனது கற்பையும் உன் கணவனுயிரையும் காப்பாற்றினால், நீ என்ன கொடுப்பாய்?" என்று கேட்டான்.

அதற்கு அவள், "அப்பா! நாங்கள் பரம ஏழைகள்; எங்கள் வீட்டில் நாளைச் சமையலுக்குக் கொஞ்சம் அரிசியிருக்கிறது. வேண்டுமானால் அதை உனக்குக்கொடுத்து விடுகிறேன். என் மானத்தை மாத்ரம் நீ காப்பாற்றவேண்டும்" என்றுசொல்லி, வீட்டுக்குள்ளேபோய், ஒரு மட்பானையில் இருந்த அரிசியை யெடுத்துவந்து, காவற்காரவேஷம் பூண்டிருந்த சென்னப்பனது மேலாடையிற் கொட்டினாள். அவனும், அதைக்கெட்டியாக முடிந்துகொண்டு, எதிர் வீட்டு வாயிலில் உட்கார்ந்திருந்தான்.

நடுராத்ரியிலே, அந்தமுரடனும் அவ்விடம் வந்துசேர்ந்தான். வந்தவன், தட்டியினாற் செய்திருந்த அவ்வீட்டுக் கதவைக் காலால் உதைத்துத்தள்ளிவிட்டு, வீட்டு ஸ்த்ரீயை நோக்கி, "இப்போது என்னசெய்தி?" என்று உரத்தகுரலுடன் கேட்டான். இதற்குள், எதிர்வீட்டுவாயிலிலிருந்த காவற்காரன், சட்டென அவன் முன்னேதோன்றி, "நீ என் வசப்பட்டாய். உன்னை நான் கையுங்களவுமாகப்பிடித்திருக்கின்றேன்" என்றனன்.

இதுகேட்ட 'பயில்வா'னும் மிக்க கோபங்கொண்டு "யாரடா! இப்படி மரியாதை தெரியாதவனாயிருக்கிறாய். நான் உன்னுடைய எஜமானனதுகுரு வென்பது உனக்குத் தெரியாதா? இப்போதே இங்கிருந்து நீ. ஓடினையானாற்

பிழைத்தாய். இல்லாவிட்டால், உன்னை ஒரு க்ஷணத்தில் கொன்று போடுவேன்" என்று அதட்டிப்பேசினன்.

காவற்காரன் இதுகேட்டு, "நீ யாராயிருந்தால் எனக்காவதென்ன? அரசனே உன் சிஷ்யனானால்தானென்ன? நான் எனது வேலையைத் தவறாமற்செய்யவேண்டும். ஆதலால், நான் உனக்குச் சொல்லுகிறேன்; இப்போதே இங்கிருந்து நீ ஓடினயானால் பிழைத்தாய். இல்லையேல், உனக்கு உயிர்ச்சேதம் வரும்" என்று மறுமொழி கூறினன்.

இதைக்கேட்டவுடன், பயில்வான், மிக்ககோபத்துடன் தன் கைத்தடியினல் காவற்காரனை அடிக்க ஆரம்பித்தனன். காவற்காரனும், கதாயுத்தத்திற் கைதேர்ந்தவனுதலாலும், தன்குருவினுடைய தண்டப்ரயோகமுறைகளை அறிந்தவனுதலாலும், அந்த அடிகள் தன்மேல்விழாமல், தன்கையிலிருந்த தடியினல் அவற்றை மூன்றுமுறை மறித்தனன்; ஏனெனில், ஆசிரியனுடன் போர்செய்ய நேரிடின், மாணாக்கன் முதலிற் போர்தொடங்கக்கூடாதென்பதும், குருவே தன்னை எதிர்த்தாலும் மூன்றுமுறை பொறுத்துவிட்டுப் பிறகுதான் சிஷ்யன்போர்செய்யவேண்டுமென்பதும் யுத்த தர்மமாதலால், பிறகு, நான்காந்தரம் தன்மேல் அவன் அடிக்கவந்தபோது, காவற்காரன், அந்த அடியைமறிப்பது போலக்காட்டி, தான் விசையுடன் அவன்மேல் ஒருபலத்த அடி அடித்தனன். அதைத் தாங்கமாட்டாது, அந்தப் பயில்வான், அடியற்றமரம்போல் 'தொப்'பென்று தரையில் விழுந்து, அப்போதே இறந்தொழிந்தனன். காவற்காரனும் உடனே தனதிருப்பிடம் போய்ச்சேர்ந்தான்.

மறுநாள்காலை, அரண்மனைப்பயில்வான் அடியுண்டு அநாதப்பிணமாய் கிடப்பதைக்கண்ட அவ்வூராரெல்லாம் ஆச்சரியமுற்றனர். சென்னப்பன், அவ்விஷயத்தை

விசாரிப்பவன்போல, பெருங்கூட்டமாகக் கூடியிருக்கும் ஜனங்களுக்குமுன் அந்த ஸ்த்ரீயை வரவழைத்து, நடந்தவற்றைச் சொல்லுமாறு ஏவினன். அவளும் தன் கற்பைக் காப்பதற்காக ஒருகாவற்காரன் அப்படிச்செய்தா னென்றாள். காவற்காரர்களிற், ஒருவனும், தான் அப்படிச்செய்ததாக ஒப்புக்கொள்ளவில்லை; பிறகு சென்னப்பன், அந்த ஏழைஸ்த்ரீ தனக்குக்கொடுத்த அரிசிமுடிச்சை ஜனங்களுக்குமுன் அவிழ்த்துக்காட்டி, தானே அங்ஙனம் செய்ததை அவர்களுக்குச்சொல்லி, தன் ஆட்சியில் ஸத்யமும் நீதியுமே தழைத்தோங்கவேண்டுமென்றும், தான் குடிகளின் நன்மைக்காக இருப்பதேயன்றிக் குடிகள் தனது நன்மைக்காக ஸ்ருஷ்டிக்கப்படவில்லையென்றும் கூறினன்.

சென்னப்பனுடைய இந்தச்செய்கையானது, அவனுடைய புகழைப் பலமடங்கு அதிகப்படுத்தியது. அவனது இளமை, வீரம், ஒழுக்கம், நல்லறிவு ஆகிய இவற்றைப்பற்றித்தான் எப்போதும் செங்கல்பட்டுமுழுதும் பேச்சாயிருந்தது. ஜனங்கள் அவனுடைய ஆட்சியில் மிகுந்த த்ருப்தியுடனும் ஸந்தோஷத்துடனும் வாழ்ந்துவந்தனர். செங்கல்பட்டும் நாளுக்குநாள் பலவிதத்தில் சிறப்புமிகுவதாயிற்று.

அத்யாயம். 14: செங்கி: ஒரு குறிசொல்லுங் குறத்தி.

சென்னப்பன் செங்கல்பட்டுக்குத் தலைவனானது முதலாக அவ்வூர் நாளுக்குநாள் அபிவ்ருத்தியடைந்துவந்ததென்றும், ஜனங்கள் த்ருப்தியுற்றிருந்தனரென்றும் முன்னே கூறினோம். ஆனால், சென்னப்பன் மாத்திரம், தனது பேர் எங்கும் பரவுவதையும், செங்கல்பட்டு வரவரப் பெரிதாவதையுங் குறித்துப் பெருங்கவலையடைந்தான். சாளுவனுடைய இயல்பு இப்படிப்பட்டதென அவனுக்கு நன்றாகத்தெரியும்; தான் அவனுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை

யெனினும், சாளுவனுக்குத் தன்மேல் பொறுமையுண்டா யிருக்குமென்பதும், தான் செங்கல்பட்டுக்கு அரசனாய்ச் செங்கோல் செலுத்திச் சிறப்படைந்து வருவதுபற்றிச் சாளுவனது மனத்தில் அழுக்காறு அதிகரிக்குமென்பதும், சென்னப்பனுக்கு உள்ளங்கைநெல்லிக்கனிபோல் தெள்ளி திற்புலப்பட்டன. ஆதலால் அவன், அரண்மனைக் கஜானா வில் மிகுதிப்படும் பணத்தையெல்லாம், தான் புதிதாகக் கட்டியகோட்டையைக் கெட்டிப்படுத்துவதிலேயே செலவு செய்துவந்தான். நாளடைவில், அந்தக்கோட்டையும், செஞ்சிக்கோட்டையைப் போல மிக்க உறுதியுடைய தாயும், பகைவரால் எளிதிற் கைப்பற்ற முடியாததாயும் விளங்கிற்று.

இந்தக்கோட்டையையடுத்துக் கிழக்குப் பக்கத்தில் பெரிய ஏரியொன்றுண்டு. அதன் சுற்றளவு ஏறக்குறைய ஆறுமைல் இருக்கும். அதில் நீர் நிறைந்திருக்கும்போது, அதன் அலைகள் கோட்டைமதில்மேல் தாக்கும் எனவே, அந்த ஏரியானது, கோட்டையின் கிழக்குப்புறத்தில் தானா கவே அமைந்துள்ள ஒரு பெரிய அகழ்போலாயிற்று. ஆனாலும் அது மிக அகன்றும், ஆழமில்லாமலும் இருந் தது. அதனால், கோட்டைக்கு பலம் வரவேண்டுமாயின் அது ஆழமுள்ளதாயும் எப்போதும் நீர் நிறைந்ததாயும் இருக்கவேண்டுமென்று சென்னப்பனுக்கு தோன்றியது. ஆதலால், அவன், அந்த ஏரியை ஆழமாக வெட்டுவித்தும், பக்கங்களிலுள்ள மலைகளிலிருந்து இழிந்தோடும் நீரில் ஒரு துளியும் வீண்போகாது எல்லாம் அதில் வந்துசேரு வதற்குவேண்டிய வேலைகளைச் செய்வித்தும் வந்தான்.

ஒருநாள் அந்தஏரியில் இப்படிப்பட்டவேலை நடக்கும் போது, சென்னப்பன் அங்கிருந்துகொண்டு அவ்வேலையை

மேற்பார்த்து வந்தான். அப்போது, அருகிலிருக்கும்மலைச் சாரலிலிருந்து, விநோதமாக வஸ்த்ர முடுத்த ஒருத்தி, ஆடிப் பாடிக் குதித்துக்கொண்டு அங்கே வந்து சேர்ந்தாள். அவளைப் பார்த்தவுடன், அங்கு வேலைசெய்பவர், தங்கள் வேலையைச் சற்றுநிறுத்திவிட்டு, ஒருவர்க்கொருவர் அவளைப்பற்றிப் பேசிக்கொள்ள ஆரம்பித்தனர். அவர்களுக்கெல்லாம் அவள் குறிசொல்லுங் குறத்தியாகிய செங்கியென்பது நன்றாய்த்தெரியும். பச்சைகுத்துதலிலும் அவளுக்கு நல்ல பழக்கமுண்டு. அவள் சொல்லுங் குறியெல்லாம் சரியாக இருக்குமென்று, அந்தப்பக்கங்களிற் பலருக்கு அனுபவத்தால் தெரிந்திருந்தது. அவள், கையைப் பார்த்து ஆரூடம் சொல்லுவதில் கைதேர்ந்தவளாதலால், பெரிய பணக்காரர்களெல்லாரும் தங்கள் வீட்டில் அவளை வரவழைத்துக் குறி கேட்பார்கள். அரண்மனையில் அந்தப்புரத்திலுள்ள ராஜ ஸ்திரீகளும், இந்தக்குறத்தி செங்கியை அன்புடன் வரவேற்று, "என் கையைப்பார்" "என் கையைப்பார்" என்று, தங்கள் கைகளை ஆவலோடு அவளுக்கு முன்னே நீட்டுவார்கள்.

இப்படிப்பட்ட செங்கியும், சென்னப்பனருகிற் பாடிக்கொண்டு வந்துசேர்ந்தாள். அக்குறத்தி, கால்விரலுக்கு உருட்டுக்களும், கைவிரலுக்கு மோதிரமும் கணக்கில்லாமற் போட்டிருந்தாள். அவள் ஆடிப்பாடும்போது, அவளுடைய கையிலடுக்கியிருந்த வளையல்கள் ஒன்றோடென்று தாக்கி 'கலீர்' 'கலீர்' என்று ஒலித்தன; அவளுடம்பு முழுதும், காற்றுலசையும் மூங்கில்போல அங்குமிங்கும் அசைந்து கொண்டிருந்தது. அவள் குறி சொல்வதெல்லாம் பாட்டாகவே யிருந்தது. அவள் பாடும்போதெல்லாம் தன்னை மறந்து பரவசப்பட்டவள்போற் காணப்பட்டாள்.

அவளுருவத்தைப் பார்த்த போது, சென்னப்பனுக்குத் தன்னையறியாமலே சிரிப்பு வந்தது. அவள் தன் பக்கத்தில் வந்துற்றபோது, சென்னப்பனும், அவள் சொல்லுவதென்னவென்று கவனமாய்க் கேட்கத் தொடங்கினான். அதுகண்ட செங்கியும், பின்வருமாறு பாடுவாளானாள் :—

ஆருக்கும் மேலான அதிகார முள்ளவனே!
ஊருக்கு மன்னவனே ! உனக்கோர் குறிசொல்வேன்.
அப்பா!--குறத்தி குறியென்று குறைவுசெய்ய லாகாது;
நான்-உரைத்தகுறியொன்றும் உண்மையின்றிப்போகாது
ஆதலால், உன்னுடைய அழகான கைகாட்டின்
சூதிலாக் கோமானே! சொல்லுகிறேன் ஆருடம்.

சென்னப்பன் அப்போது தன்கையை அவளுக்குக் காட்ட அதைப்பார்த்துக் குறத்தியும்,

இந்தக்கைக் கேற்றகுறி யெல்லாம்நான் சொல்லிடவே,
தொந்திக் கணபதியே! கந்தா ! கதிர்வேலா !
மங்கை ஸரஸ்வதியே! வந்துநீங்க ளெல்லோரும்
இங்கென் மனத்தில் எழுந்தருள வேண்டுகிறேன்.
மெய்யிதுவே நானும் விளம்புகிறேன்; ஐயாவே!
கையிதுவே தானுங் கனத்த அத்ருஷ்டக்கை;
செஙகோல் பிடிக்குங்கை; சீமையெல்லாம் ஆளுங்கை ;
மங்காப் புகழ்வளரும் மன்னவன்கை இந்தக்கை;
செங்கல்பட் டேயன்றிச் சீராயிந் நாடெல்லாம்
எங்குஞ் செழுத்திடவே இனியாளப் போகுங்கை.
அப்பா!-நல்லகா லம் உன்னை நாடிவருகிறது;
தொல்லைக ளெல்லாம் தொலைந்தோடிப் போகிறது;
உங்கள் குலப்பகைவன் ஒழிந்தழிவ திக்காலம்;
எங்கள் குலச்சாபம் * பலித்திடுவ திக்காலம்.

---

* சாபம்—பாணச்சிறுவன், சாளுவனுடைய கைவேலால் குத்துண்டு இறக்கும்போது, சாளுவனைக்குறித்துச் சபித்தது. பாணனுடைய சாபத்தை, 'எங்கள் குலச்சாபம்' என்றாள் செங்கி.

இன்னுமொன்று சொல்லுகிறேன் என்மகனே! நீகேளு:
உன்னுடைய உள்ளத்தில் ஓயாக் கவலையொன்று,
அல்லும் பகலும்முன்னை அலைத்து வருகிறது;
சொல்லின் அதுதானென் துரையே! பெருமானே!!
நாட்டுக் குறையுமன்று; நகரத்தைப் பற்றியன்று;
வீட்டுக் குறையுமன்று; விரோதிகளாலானதன்று;
காசுக் குறையுமன்று; கையிலிலாக் கஷ்டமன்று;
பேசுமிவை யொன்றாலும் பிறக்கவில்லை இக்கவலை.
உனக்குமனத்துக்கிசைந்த வொருமயில்மேல் மயக்கமுண்டு;
குணத்துக் கிசைந்தவொரு குயில்மேற் குறிப்புமுண்டு;
நீயும்-பருவத்துக் கேற்றவொரு பசுங்கிளியைத் தேடுகிறாய்;
உருவத்துக் கேற்றவொரு உத்தமியை நாடுகிறாய்.
'அவள்-தேடியெனைச் சேருவளோ? சிந்தைமிகச் சோரு
நாடியெனைக் கூடுவளோ? நாடாதுவாடுவளோ? [வளோ?
சின்னஞ் சிறுமிஎன்னைத் தேடுவது மெப்படியோ?'
என்னுங் கவலையுனக் கினிமேலே இல்லையப்பா.
* "வட்டமிட்டு வானதனில் வந்த கருடனைப்பார்?"
'சொட்டுச்சொட்' டெனச்சுவரிற் சொல்லுங் கவுளியைப்
வச்சிர மணிமாலை வலிய உனக்களித்த [பார்.
உச்சிதமா தோவுன்னை ஊரெல்லாந் தேடுகிறாள்;
தேடி வருபவளுஞ் சீக்கிரத்தில் உன்னோடு
கூடி மனமகிழ்வள். கோமகனே! உன்கையில்
பாங்கா யவள்பேரைப் பச்சைகுத்து வேறானால்
நீங்கள் இருவீரும் நீங்காமல் சேர்ந்தபின்னால்
கொஞ்சிக் குலாவிக்கை கோத்துவிளை யாடுங்கால்
இந்த-பஞ்சக் குறத்திதொழில் பார்த்து மகிழ்வீர்கள்.
என்று பாடினாள்.

இவற்றையெல்லாம் இதுவரை மிக்க ஆச்சர்யத்துடன் கேட்டுவந்த சென்னப்பனும், தன்னுயிர்க்காதலியாகியபத்மினியினது பெயரை என்றும் அழியாதபடி பச்சைகுத்திக்

* இந்த மேற்கோள்வரி, ஸ்ரீமான் அ. மாதவையா அவர்கள் இயற்றியுள்ள "திருமலைசேதுபதி" என்னும் நூலிற் கண்டது.

கொள்வதற்குத் தன்கையை நீட்டினான். உடனே செங்கியும், தான் ஒருநாணற்குழாவில் வைத்திருந்த ஒருவிதமான பச்சிலைச்சாற்றினால் முதலில் சென்னப்பன்கையில் பத்மினி என்னும் நான்கெழுத்துக்களை எழுதி, பிறகு அந்த எழுத்துக்களின்மேல் 'நறுக்' 'நறுக்' என்று, தன்னிடம் சிறியவும் பெரியவுமாயிருந்த ஊசிகளால் குத்தத்தொடங்கினாள். அப்படிக்குத்தும்போது சென்னப்பனுக்குக் குத்து வலிதோன்றாவண்ணம், அவனெண்ணத்தை வேறுவழியில் திருப்புவதற்காக, அவள் பின்வருமாறு பாடிக்கொண்டே பச்சை குத்தலானாள் :—

உன்னுடைய உள்ளத்தில் ஒருபோதும் நீங்காத
கன்னியினற் பேருன் கைதனிலே யெந்நாளும்
மின்னியுன கண்முன் மிகவிளங்கச் செய்திடுவேன்;
மன்னவனே ஊசிவலி மனத்திற் பொறுக்கவேணும்.

மங்கையுன்மே லாசையினால் வாடி மனம்வருந்தி
எங்கெங் கெலாமுன்னைத் தேடிமிக ஏங்குகிறாள்;
இங்கிவள்பேர்க் காகவேநீ இந்த வலிபொறுத்தல்
அங்கவளும் ஐயா ! அறியாள் அறியாளே.

சிந்தை கலங்கவேண்டாம் ; செங்கியென்கைச் செய்கை [யினால்
அந்தமயிலுமுன்னை ஆய்ந்தறிந்து சேர்ந்திடுவள்;
கந்த னருளாலே கருதியது கைகூடும்;
இந்திரனைப் போல்நீயும் இன்பமுடன் வாழ்வையப்பா.

இப்போது பச்சையும் குத்தி முடிந்தது. செங்கியும்,

அப்பா! குறத்தி குறியென்று குறைவுசெய்ய லாகாது;
நான்-உரைத்த குறியொன்றும் உண்மையின்றிப் போகாது

என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டுப் போயினள்.

குறத்தி அவ்விடம்விட்டுப்போனதும், சென்னப்பன், அவள் சொன்னகுறியைப் பற்றிச்சிந்திப்பானாயினான்: நான் அரசர்குலத்திற் பிறந்தவனென்பது இதுவரையில் இங்கே

வருக்கும் தெரியாது. அதை அறிந்துசொன்னதுமன்றி, இந்தக் குறத்தி, சாளுவனெங்கள் 'குலப்பகைவன்' என்றும் கூறினளே. இதெல்லாம் அவள் சொல்லியதைப் பார்த்தால், அவள் குறியில் ஏதோ விசேஷம் இருப்பதுபோலக் காணப்படுகிறது. அவள் ஏன் பொய்சொல்லவேண்டும்? என்னுடமிருந்து ப்ரதியுபகாரத்தை அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லையே. அதிருக்கட்டும்; எனக்குப் பத்மினிமேலுள்ள காதலைப்பற்றி ஒருவருமறியார்களே. அதையும் இவள் இவ்வளவு விரிவாக எடுத்துச்சொன்னளே. இந்தக் குறத்தி சொல்லியபடி பத்மினி என்னை வந்துகூடுவதெப்படி? நானே செங்கல்பட்டின் க்ஷேமத்தைக் கருதி இங்கேயே இருக்கவேண்டியதாயிருக்கிறது. அவளோ கேவலம் ஒரு ஸ்திரீ. அதிலும் மிக்க இளம்பிராயத்தவள். லோகானுபவம் அவளுக்கு அதிகமில்லை. அவள் எவ்வாறு தன்னந் தனியே ஊரூராய்ச்சென்று எனக்காகத் தேடி அலைதல் கூடும்? வழியில் அவளுக்கு எத்தனை ஆபத்துக்கள் நேர்ந்தனவோ? அவளைத் தேடுவதற்கு நான் ஆள்விடலாமென்றால் நான் அவளை ஒருதரங்கூடப் பார்த்திராதவனதலால் அவளுடைய அங்க அடையாளத்தைக் குறித்து எனக்கு ஒன்றுந் தெரியாது. அவளுக்குந்தான், என்னைக்கண்டால் நான் இன்னனென்று தெரிந்துகொள்ள முடியுமோ? முடியாதோ? அவள் என்னை, ராஜஸபையில் என்மேல் முத்துமாலையை யெறிந்த அந்த ஒருநாள் தான் பார்த்திருக்கிறள். இப்படியிருக்க நாங்களிருவரும் ஒருவரை ஒருவர் ஸந்திப்பதென்றால், அது தெய்வாதீனத்தால் ஆகவேண்டியதேயன்றி மனிதமுயற்சியாலாவதன்று. ஏதோ இந்தக்குறத்தி என்கையில் பத்மினியின் பேரைப் பச்சைகுத்தி, அந்த அடையாளத்தினல் பத்மினி என்னைக் கண்டுகொள்வளென்று பாடினளே. அப்படி ஏதாவது ஏற்பட்டால்

தான் இது ஸாத்யமாகும். எல்லாம் ஈசன் திருவுள்ளப் படியேதானுகும்.

சென்னப்பன் இவ்வாறு தன்மனதில் எண்ணமிட்டுக்கொண்டு, செய்வது யாதெனத்தெரியாது, செங்கல்பட்டு ஸ்வாமியாரிடம் சென்று, செங்கியைத் தான் கண்டதுமுதலாக, அவள் தன்னைவிட்டுப்போனதிருக, நடந்தவற்றையெல்லாம் அவரிடம் விரிவாகச் சொன்னுன். ஸ்வாமிகளும், சென்னப்பன் ஊர்த்தலைவனுனதுமுதல் அவனுடையசெய்கைகளையெல்லாம் நன்ருகக் கவனித்துவந்ததுமன்றி, அவனுடைய நற்குணத்தையும், குடிகளுக்கு அவன் செய்துவந்திருக்கும் நன்மையையும் மிகவும் நன்குமதித்து வந்தனர். அவன் மனத்தில் பத்மினியைப்பற்றிய கவலை பலநாள்களாயிருந்துவந்தது, ஸ்வாமியார் அறிந்த விஷயமே. ஆதலால் இந்தக் குறத்தி சொன்ன ஆரூடத்தைச் சென்னப்பன்சொல்லக்கேட்டபோது அவருக்கு மிகவும் திருப்தியுண்டாயிற்று. அப்பொழுது, அவர் அவனைநோக்கி, "அப்பா! இவ்வுலகில் முயற்சியாலாகாத செயல் ஒன்றுமில்லை. மார்க்கண்டன் விதியையும் தன்முயற்சியால் மாற்றிக்கொண்டானன்ருே? இந்தக்கருத்தையே, தமிழ் நீதிநூல்களில் தலைசிறந்ததாகிய திருக்குறளில், தெய்வப்புலவர் திருவள்ளுவநாயனுரும்,

* "ஊழையும் உப்பக்கம் காண்பர்; உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

எனத் திருவாய்மலர்ந்துள்ளார் ஆகையால், நீ இப்போது பத்மினியைத் தேடும்விஷயத்தில் உன்னுலாகும் முயற்சி செய்யவே வேண்டும். செங்கல்பட்டைப்பற்றி இப்போது ஒருவிதக்கவலையுமில்லை. ஜனங்களெல்லாம் ஸுகமாக வாழ்

* ஊழ்—விதி, உப்பக்கம் காண்பர்—தோற்கச்செய்வர்; உலைவு—கலங்குதல்; உஞற்றுவர்—செய்பவர்.

கிறார்கள். நீ கொஞ்சகாலம் இவ்வூரிலில்லாமல் வெளியி லிருந்தாலும், அதனால் இங்கொரு குறைவும் வராது. ஆத லால், நீயும், தாடிமீசைகளை வளர்த்துக்கொண்டும், காவி வஸ்த்ரத்தைக் கட்டிக்கொண்டும் ஒரு துறவிபோல் சந்த்ர கிரிக்குப் பக்கத்திலுள்ள ஊர்களிலெல்லாம் ஸஞ்சாரம் செய்வாயானால், தற்செயலாய்ப் பத்மினி உன்னை ஸந்தித்த லுங்கூடும். அங்குள்ளார் உன்னைச் சென்னப்பனென்று அறிந்துவிடுவார்களோ என நீ ஐயமுறவேண்டாம். நீ துற விபோல வேஷந்தரித்துக்கொண்டால், உன்னைச் சென் னப்பனென்று கண்டறிவது கஷ்டமாகும். இதோ என் னிடமிருக்கும் மருந்துகளிற் சில உனக்குக்கொடுக்கின் றேன்; அவற்றை உபயோகிக்கும் முறையும் நான் உனக் குச் சொல்லித்தருகிறேன். அவைகளால் அநேக ஜனங்கள் நோய் நீங்கி இன்பமடைவார்கள். உன்னால் இப்படி வைத் யம் செய்யப்படுபவரெல்லாம், பின்னால் உனக்குப் பெரிய உதவி செய்வார்கள். இவற்றையெல்லாம் நன்றாக யோசித் துப்பார்த்து, நீ விரைவில் இவ்வாறே செய்வாயாக" என்று புத்தி கூறினார்.

சென்னப்பனும், ஸ்வாமிகளுக்குத் தன்னிடமுள்ள அன்பினையும், அவர் ஸமயோசிதமாகச் சொல்லியருளிய உபாயத்தையும் எண்ணியெண்ணி வியந்து, "கருணைக் கடலே! அடியேன்மேல் அடிகளுக்குள்ள அன்பினுக்கு நான் எப்போதும் யோக்கியதையுள்ளவனாக இருக்கவேண் டும். இப்போதே, தாங்கள் கட்டளையிட்டவண்ணம், நான் சந்த்ரகிரிக்கருகே ஸஞ்சாரஞ்செய்யப் புறப்படுகின்றேன்" என்று சொல்லி, அவரை வணங்கிவிட்டு, அவர் கொடுத்த மருந்துகளுடன், செங்கல்பட்டிலிருந்து, திருப்பதிமலை யிருக்குந் திசைநோக்கிச் செல்வானாயினன்.

அத்யாயம் 15: திருக்கழுக்குன்றத் திருவிழா.

செங்கல்பட்டிற்குக் கிழக்கே ஒன்பதுமைல் தூரத்தில் திருக்கழுக்குன்றம் என்னும் ஒரு சிவஸ்தலம் இருக்கிறது. அது, நெடுங்காலமாகப் பேர்பெற்ற புண்ணியக்ஷேத்ரங்களி லொன்று. அவ்விடத்திலுள்ள வேதகிரி என்னும் மலையில் ஏறக்குறைய ஐந்நூறு அடி உயரத்துக்குமேலே உறுதியாகக் கட்டப்பட்டிருக்கும் ஒரு கோவிலுண்டு. கீழே மலையினது அடிப்பக்கத்தில், ஒரு பெரிய அழகிய கோவிலும், 'சங்கதீர்த்தம்' எனப்படும் ஒரு பெரிய தெப்பக்குளமும் உண்டு. ஸ்தலமூர்த்தியின் பெயர், வேதகிரீசரென்றும் பக்தவக்ஸல ரென்றும் முறையே இரண்டு கோவில்களிலும் வழங்குகின்றது. தேவியினுடைய திருப்பெயர் திரிபுரஸுந்தரியம்மையெனப்படும், இந்த க்ஷேத்ரத்தில் முன்னொருகாலத்தில் இந்த்ரனும் மார்க்கண்டேயனும் தவஞ்செய்தார்களென்றும், அப்படித்தவம்புரிந்த அவர்களுக்குச்சிவபெருமான் திருவருள் புரிந்தனரென்றும் ஜனங்கள் ஐதிஹ்யமாகச் சொல்லுகிறார்கள்.

மற்றும், இந்தஸ்தலம், சைவசமசஸ்தாபகாசார்யர்களான திருஞானஸம்பந்தஸ்வாமிகள், திருநாவுக்கரசுஸ்வாமிகள், சுந்தரமூர்த்திஸ்வாமிகள், மாணிக்கவாசகஸ்வாமிகள் என்னும் நால்வராலும், முறையே,

"வெள்ள மெல்லாம் விரிசடை மேலோர் விரிகொன்றை
கொள்ள வல்லான் குரைகழு*லேத்துஞ்சிறுத்தொண்டர்
உள்ள மெல்லாம் உள்கி † நின் றாங்கே யுடனாடுங்
கள்ளம் வல்லான் காதல்செய் கோயில் கழுக்குன்றே"

—தேவாரம்.

---

*குரை கழல்—ஒலிக்கின்ற வீரகண்டாமணி; இது இங்கே ஆகுபெயராய் இறைவன் திருவடியைக்குறிக்கும். † உள்கி—நினைத்து.

"மூவிலைவேற் கையானை மூர்த்தி தன்னை
முதுபிணக்கா டுடையானை முதலா னானை
ஆவினிலைந் * துகந்தானை அமரர் கோனை
ஆலால † முண்டுகந்த ஐயன் தன்னைப்
பூவினின்மேல் நான்முகனும் மாலும் போற்றப்
புணர்வரிய பெருமானைப் புனிதன் தன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே"
—தேவாரம்.

"நீள நின்று தொழுமின் நித்தலும் ‡ நீதியால்
ஆளும் நம்வினைகள் அல்கி § அழிந்திடத்
தோளும் எட்டும் உடைய மாமணிச் சோதியான்
காள கண்ட னுரையுந் தண்கழுக் குன்றமே"—தேவாரம்.

"பூணொணாததொர் அன்புபூண்டு பொருந்தி
நாள் தொறும் போற்றவும்
நாணொணாததொர் நாணமெய்தி நடுக்கட
லுள் அழுந்திநான்
பேணொணாத பெருந்துறைப் பெருந்தோணி
பற்றி யுகைத்தலும்
காணொணாத்திருக்கோலம் நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே."—திருவாசகம்.

என்று, தங்களுடைய அருமைத் திருவாக்கால் பாராட்டிப் பாடப்பெற்றுள்ள சிறப்புடையது.

இந்த திவ்யஸ்தலத்தில் ஒரு விசேஷமுண்டு: ஒவ்வொருநாளும் மத்தியான்ன ஸமயத்தில் இரண்டுகழுகுகள் மலையைவட்டமிட்டுக்கொண்டு மலையுச்சியிலுள்ள கற்பாறையினருகே மெல்லமெல்ல வந்து சேரும். அங்கேபண்டார

* ஆவினில் ஐந்து—'பஞ்ச கவ்யம்' எனப்படுபவை.

† ஆலாலம்—விஷம்.

‡ நித்தலும்—ஒவ்வொரு தினமும்.

§ அல்கி—குறைந்து, சுருங்கி.

மொருவன், சர்க்கரைப்பொங்கல், பால், நெய்முதலியவற்றைக் காட்டி, அப்பறவைகளை அருகேவரும்படி அழைப்பான். அப்பக்ஷிகள் கடவுளின் திருவருள் பெற்றவைகள் என்று கருதப்படுகின்றபடியால் அவைகள் பண்டாரத்தின் கையிலிருக்கும் உணவை உட்கொள்ளுவதைப் பார்ப்பதற்கு பல ஜனங்கள் அந்தநடுப்பகல்நேரத்தில் அங்கேவந்து கூடியிருப்பார்கள். பக்ஷிகளும் ஒவ்வொருநாளும், குறித்த நேரம் தவறாது முறைப்படி அங்கு வந்து ஜனங்களுக்கு தர்சனங்கொடுத்து, பண்டாரத்தின் கையிலுள்ள பால், நெய்பொங்கல் இவற்றையுண்டு, பின் தமதிருப்பிடத்திற்குத் திரும்பிப்போகின்றன. இவ்விசேஷம் பற்றியே இந்தஸ்தலத்துக்குத் திருக்கழுக்குன்றம் என்றும், பக்ஷிதீர்த்தம் என்றும் பேர் வந்திருக்கிறது. நம்தேசத்தில் ஸ்தலயாத்திரை செய்து புண்யந்தேடிக்கொள்ள விருப்பமுள்ளவர் ஒவ்வொருவரும், ஒருமுறையாவது இந்தஊருக்கு வந்து சங்கதீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணி, கோவிலில் ஸ்வாமிதர்சனஞ் செய்து போவர். இந்தத் திவ்யஸ்தலத்தினுடைய தூய்மையையும், இங்கு இறைவனது அருளைப் பெறுவதற்காக அநுதினமும் வந்து கூடும் ஆயிரக்கணக்கான அடியார்களுடைய தெய்வபக்தியையும், நேரில் ஒருவன் காண்பானாகில், அவன், அதுவரை அஸல் நாஸ்திகனாயிருந்திருப்பினும், அப்போது ஆஸ்திக புத்தியுடையவனாய், அகங்குழைந்து,

* அத்தனே! போற்றி! ஆன்ற † அருட்பெருங்கடலே போற்றி! ‡ நித்தனே! போற்றி! யெங்கும் நிறைந்துள உயிர்கட்கெல்லாம், கர்த்தனே போற்றி! சீரார் **கழுக்குன்றத்** தலத்து மேவும், **பக்தவத்** ஸலனே! நின்றன் § பதயுகம் போற்றி! போற்றி!!

---

* அத்தன—தலைவன்! †ஆன்ற—அகன்ற; ‡நித்தன்—எப்போதும் நிலைத்திருப்பவன்; §பதயுகம்—பாதம் இரண்டும்.

என்று, சிவபிரானைத் துதித்து வணங்குவானென்றால், இதன் சிறப்பை விரித்துரைப்பது மிகையேயாகும்.

இவ்வளவு மகிமைமிக்க திருக்கழுக்குன்ற ஸ்தலத்திலுள்ள சிவபெருமானுக்கு, வருஷத்துக் கொருமுறை பத்துநாள் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறும். நமது கதை நிகழுங்காலத்திலும் ஒருமுறை, வழக்கம்போல, அந்தப் பத்துநாளுத்ஸவம் வந்தது. அப்போது அங்குப் பல்லாயிரம் ஜனங்கள் வந்து கூடினார்கள். பெருங்கோவில்களிருக்கும் ஊர்களில் சிறந்த திருவிழாக்காலங்களிலே அங்கு ஸ்வாமி தர்சனத்துக்காக வந்து கூடியிருக்கும் ஹிந்து ஜனக்கூட்டத்தை கவனித்துப்பார்த்தால், ஹிந்துக்களுடைய நற்குணங்கள் இன்னவை இன்னவையென எளிதில் அறியலாகும். முக்கியமாக அவ்விடங்களில், அவர்களது தெய்வபக்தியும், பரோபகார சிந்தையும் மிக வெளிப்படையாகக் காணப்படும். ஜனங்கள் வெயிலால் களைத்து வருந்தாவண்ணம், ஆங்காங்குப் பந்தல் முதலிய போடப்பட்டிருக்கும். பல இடங்களில் வருபவர்க்கெல்லாம், சாப்பாடு போடுவார்கள். எங்கே பார்த்தாலும் தண்ணீர்ப்பந்தல் ஏற்பட்டிருக்கும்.

இப்படிப்பட்ட திருவிழாக்காலத்தில், சிலர் கூட்டங்கூட்டமாய்,தேவார திருவாசகங்களை உரத்தகுரலுடன் ஓதிச்செல்வார்கள். சிலர் அங்கு வந்துள்ள ஞானியாரில் எவரேனும் வேதாந்த விஷயமாகவோ ஸித்தாந்தவிஷயமாகவோ ப்ரசங்கம் செய்வதைக்கேட்டு மகிழ்வார்கள். மற்றுஞ்சிலர் அங்குள்ள பொம்மைக்கடை, பழக்கடை முதலியவற்றைக் சுற்றிப்பார்ப்பார்கள். வேறுசிலர், அங்கு அப்போது நடைபெற்றுவரும் ஜாலவித்தை முதலிய விநோத விளையாட்டுக் களைக்கண்டு களிகூர்வார்கள். இப்படி பல ஊரிலிருந்து பல

திறப்பட்ட ஜனங்கள் பற்பலவிதமாய்ப் பொழுது போக்கு வதைப் பார்த்தாலே, அதனால் ஒருவனுக்கு மிகச்சிறந்த லௌகிக அறிவுண்டாகு மென்பதில் ஐயமேயில்லை.

திருக்கழுக்குன்றத் திருவிழாவிலும், மேற்கூறிய வாறே திரளான ஜனங்கள் சேர்ந்திருந்தார்கள். அவர்களில், பக்கத்தூரிலிருந்து, அவ்வூரதிகாரியும், மிக்கசெல்வாக்கு உள்ளவனுமான ஒரு பணக்காரனும், தனதுசெல்வக்குமாரியோடு அங்கே திருநாளுக்காக வந்திருந்தான்; அவன், ஸ்வாமிதர்சனஞ் செய்தபிறகு, நெடுநாளாகத் தான் ஒருவித முடிவுக்கும் வரக்கூடாமலிருந்த தன் பெண் கல்யாண விஷயத்தைக் குறித்து, ஸ்வாமி ஸந்நிதானத்தில நிச்சயமாக ஒரு ஏற்பாடு செய்துவிட வேண்டுமென்னும் எண்ணத்துடன் அப்போது வந்திருந்தான்.

இந்த மனிதன் தக்க கௌரவக்குறைவில்லாமையில் இருந்ததனாலும், இவனுடையமகள் மிக்க அழகும் குணமும் அமைந்தவளாதலாலும், இவனுடைய சுற்றத்தாரும் பிறரும், 'எனக்குப் பெண்கொடுக்கவேண்டும்' 'எனக்குப் பெண் கொடுக்க வேண்டும்' என்று, சிலகாலமாக ஒருவரோடொருவர் போட்டிமேற் போட்டியாக இவனை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருந்தனர். இவர்களுள் எவனைத் தன் மருமகனாகச்செய்துகொள்வதென்பதைப்பற்றி அவனுக்குக் கவலை அதிகமாயிருந்தது. யாராவது ஒருவனைத் தேர்ந்தெடுத்தால், மற்றவர்களுக்குத் தங்களை இவன் அலக்ஷியம் செய்தானென்று இவன்மேலும், தங்களுக்குப் போட்டியாய் வந்தானென்று அம்மணமகன மேலும் முறையே மனஸ்தாபமும் பொறாமையும் விளையும். அதனால், ஒருகால் அவனுக்குத் தன் சுற்றத்தார் முதலானவருடன் சண்டைசச்சரவு எற்படினும் படலாம். ஆதலால், அந்த

நிலைமையில், செய்வது யாதெனத் தெரியாது. தகப்பன் மனங்கலங்கியிருந்தான். பெண்ணுக்கோ வயது மேல்மேலும் ஆய்க்கொண்டிருந்தது. மணப்பருவம் வாய்ந்த மகளுக்கு மணம் நிகழ்த்தாது காலந்தாழ்த்தல் முறையன்றாதலால் விரைவில் ஒரு முடிவான ஏற்பாடு செய்தே தீரவேண்டுமென அவன் நிச்சயித்தான்.

அந்த க்ராமாதிகாரியின் வீட்டில், நன்றாய்க் கொழுத்து வளர்ந்த காளைமாடுகள் பல இருந்தன. அவற்றுள் ஒன்று எல்லாவற்றிலும் மிக்க அழகும்பலமுமுள்ளதாய் இருந்தது. அது கன்றாயிருந்தபோது, அதைத் தாயுங்கன்றுமாகவே விட்டிருந்தார்கள். தாய்ப்பசுவின் பாலை ஒருவரும் கறப்பதேயில்லை. இந்தக்காளைக்கன்று, நினைத்தபோதெல்லாம் தாயின்பாலைக் குடித்துவளர்ந்ததனால், இரண்டு மூன்று வருஷத்திலேயே மிகவும் பருத்துக் கொழுத்து, ஒரு பெரிய மாடுபோலாய்விட்டது. அதன் எஜமானனும், அதற்கு மனிதரைமுட்டும் பழக்கத்தை நன்றாகக் கற்பித்திருந்தான்.

இப்போது, தன்மகளுக்கு மணமகனைத் தேர்ந்தெடுப்பதைக்குறித்து அவன் வருந்தமுற்றிருந்த நிலையில், அவன் மனத்தில் ஒரு எண்ணம் தோன்றியது ; அதாவது, தன் பெண்ணை மணஞ்செய்துகொள்ள விரும்பினவரில் எவனொருவன், இந்தப் 'பாய்ச்சற்காளை'யைத் தனியாகத் தழுவிப் பிடித்துத் தனது ஸாமர்த்யத்தால் அதை ஓடாமல் நிறுத்திவிடுகிறானோ, அவனுக்கு அவளை மணம் புரிவிப்பதென்பதே. இவ்வாறு, 'பாய்ச்சல்' காளையின்மேல் பாய்ந்து விழுந்து, அதனை இறுகத்தழுவி, அதன்கொழுப்பினை அடக்குங் குமரர்களுக்குப் பெண்களை வதுவை செய்விப்பதும் நம் நாட்டில் பண்டைக்காலம் நடந்துவந்த ஒரு வழக்கமாயிருந்தது. இது, பெரும்பாலும் ஆயர்களுக்குள் வழங்கிவந்தது. சங்கத்தமிழ்நூல்களுள் ஒன்றும், 'கற்றறிந்தாரேத்துங் கலி' எனப் புகழப்பட்டதுமாகிய கலித்தொகை நூலில்,

*"கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்"—என்றும்,
†"போரேற் றருந்தலை அஞ்சலும், ஆய்ச்சியர்
காரிகைத் தோள்கா முறுதலும், இவ்விரண்டும்
ஓராங்குச் சேறல் இல............."என்றும்
‡"கொல்லேறு கொண்டான் இவள்கேள்வன் என்
சொல்லுஞ்சொற் கேளா........" என்றும் [றாரார்
கூறியிருப்பதாலும், ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தி கோஸலதேசத்
தரசன் நக்நஜித்தென்பான்விடுத்த ஏழுவலியகாளைகளைக்
கட்டித்தழுவி அவற்றின் வலியை யொடுக்கினதற்காக
அவனுடைய புத்ரியாகிய § ஸத்யை யென்பவளை மணம்
புரிந்தாரென்பது பாகவதப்ரஸித்தமாதலாலும், இந்த
வழக்கம் நம் நாட்டில் இருந்ததென்பது நன்கு தெரியவரும்.

தன்னுடைய புதல்விக்கு மணமகளை நிச்சயிப்பதற்
காகத் தான்செய்துள்ள ஏற்பாட்டைக்குறித்து, அந்த
க்ராமத்தலைவன் சுற்றுப்புறத்தூர்களிலெங்கும் விளம்பரம்
செய்தான். அன்றியும், முறைப்படி அந்தக்காளையைக்
கைப்பற்றி அதனையடக்கினவன் இன்னுனென்று முடிவு
சொல்வதற்கும், அவ்விஷயமாக எவ்விதக்குழப்பமும் கல
ஹமும் இல்லாது எல்லாம் ஸரிவரநடப்பதற்கும், செங்கல்
பட்டின் தலைவனுகிய சென்னப்பனை அவன் மிக்கமரியா
தையுடன் அழைத்திருந்தான். சென்னப்பன் அதிகாரம்

*முல்லைக்கலி, 3. ஏறு—காளை; கோடு—கொம்பு; புல்லாள்—தழுவாள்.

† ஷை 6. காரிகை—அழகு; ஓராங்குச்சேறல்—ஒன்றுசச் செல்லுதல், ‡ ஷை 6. கேள்வன்—கணவன்; கேளா—கேட்டு.

§ இவளுக்கு, நப்பின்னையென்றும், நாக்நஜிதி யென்றும் பெயர்கள் உண்டு.

அப்போது செங்கல்பட்டில் மாத்திரமன்றி அதையடுத்துள்ள கிராமங்களிலும் சென்றிருந்தது.

அங்ஙனமே குறித்ததினத்தில், சென்னப்பனும், தன் பரிவாரத்துடனே அந்த இடத்துக்கு வந்து, தனக்காக அமைத்திருந்த ஒரு அழகிய ஆஸனத்தில் வீற்றிருந்தான். அவனுக்கு இரண்டு பக்கத்திலும், அயலூரிலிருந்து வந்திருந்த பணக்காரர்களும் பிரபுக்களும் நெருங்கி நிறைந்திருந்தனர். அங்கு அவர்களுக்கிடையில், மிஸ்டர் டே என்னும் ஒரு இங்லீஷ்காரனும் இருந்தான். அந்தச் சிறிய கிராமத்தில் அந்தக்காலத்தில் இங்லீஷ்காரனுடைய உருவத்தை முதல் முதல் கண்ட ஜனங்களுக்குண்டான ஆச்சர்யத்தை நீங்களே ஊஹித்துணர்ந்துகொள்ளலாம். இந்த டே என்பவனைப்பற்றியும், இவன் அப்போது அங்குச் சென்னப்பனுக்கருகில் இருந்ததைப்பற்றியும் அடுத்த அத்யாயத்தில் கூறுவோம். இப்படி இங்கே கூடியிருந்த இவர்களுக்கெதிரில், சற்றுத் தாழ்ந்து நீண்டு அகன்றதொரு மைதானம் இருந்தது. இதன் வழியாகத்தான் அந்தக் கொல்லேற்றை ஓடவிடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தது. குறித்தநேரம் ஸமீபித்தலும், அங்குக் கும்பல் கும்பலாக ஜனங்கள் வந்து கூடினர். அவர்களுள் அந்தப் பெண்ணை மணஞ்செய்ய விரும்பிய வாலிபர்களும், ஒருவர் முன்னொருவராக எருதின் வரவை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்து நின்றனர்.

இப்படி இவர்களெல்லாரும் இருக்கையில், மாட்டுத்தொழுவத்தினருகே 'படபட' வென்று பறையொலி கேட்டது. உடனே அங்கிருந்த எருதுகளெல்லாம் அவிழ்த்துவிடப்பட்டன. அவைகளெல்லாம், அந்த மைதானத்தினிடையே வெகு வேகமாய் ஓடிவந்தன. அவற்றுக்கிடையே அந்தக் குறித்த எருதும், தன் கொம்புகளின்மேல் கட்டியிருந்த

தங்கச்சங்கிலி 'தக தக' என்றுமின்ன, 'தட தட' வென்று அந்த மைதானத்திற் பாய்ந்துசென்றது. அப்போது, தங்கள் உயிரை ஒருபொருளெனமதியாது, வாலிபர்கள், அதன் கொம்போ கழுத்தோ முசுப்போ வாலோ, அகப்பட்டது எதுவோ அதைத்தங்கள் கைகளாற் கெட்டியாகப் பற்றினார்கள் எனினும், அந்தக்கொழுத்தகாளை இதற்கெல்லாம் அடங்கவில்லை; அது தன்னைப்பிடித்த ஒவ்வொருவனையும் அலக்ஷியமாகக் கீழேவிழுத்தி, அருகே மலைச்சாரலில் ஓடி மறைந்தது.

இவ்வாறு பெண்ணிற்கு மணமகன் தேர்ந்தெடுப்பதற்குத் தகப்பன்செய்த இந்த முயற்சிமுழுதும் வீணாயிற்று. அதுகண்டு அவன் பெருங்கவலையுற்று, யாதுசெய்வதெனச் சிந்தித்து, கடைசியாக, அருகிலுள்ள திருக்கழுக்குன்றத் திருப்பதியில் நடைபெறும் திருவிழாவுக்குப்போய், அங்கே ஸ்வாமி ஸந்நிதியில் தான் உத்தேசித்திருந்த மாப்பிள்ளை மார்களுடைய பேரையெல்லாம் எழுதி, சீட்டுப்போட்டுப் பார்த்து அதில் எந்த சீட்டை அந்தப் பெண் எடுக்கிறாளோ, அந்தச் சீட்டில் குறித்திருக்கும் பேரையுடையவனுக்கே அவளைக் கல்யாணம் செய்விப்பதென்று முடிவுசெய்தான். இந்த எண்ணத்தோடேதான் அவனும், அவன் குமாரியும் அங்குவந்திருந்தனர்.

அவர்கள் அந்தத் திருவிழாமுழுவதும் அங்குத் தங்கினார்கள், அப்போது ஒவ்வொருநாளும் அவர்கள், மலைமீதேறி, ஸ்வாமிதர்சனஞ்செய்து, கழுகுகளிரண்டும் பண்டாரத்தின்கையிலிருந்து இரைதின்பதையும் கண்டு பிறகு திரும்புவார்கள், திருவிழா முடியும்வரை இவர்கள் இப்படிக் காலங்கழித்துவந்தார்கள், கடைசிநாளில், தாங்கள் அங்குவந்த விஷயத்தைக்குறித்துத் தகப்பன் தன்மகளுக்கு

ஞாபகப்படுத்தினன். அதற்கு அந்தப்பெண், அவன் மனம் திடுக்கிடும்படி, "எனதருமைத் தந்தையே! நான் இவ்வூர்க்கு வந்தது முதல் என்மனம் ஏதோ ஒருவித மாறுதலடைந்திருக்கிறது: இந்தத்திவ்யஸ்தலத்தினையும், இங்குள்ள கோவில், குளம் தேர் திருநாள் இவைகளையும் பார்த்த எனக்கு, இவ்வளவென்றுசொல்ல முடியாத இன்பமுண்டாயிருக்கிறது; எனக்கு, கல்யாணஞ்செய்துகொள்ள வேண்டுமென்று இப்போது இஷ்டமில்லை. எப்போதும் ஈச்வரனைம் துதித்துக்கொண்டே என்காலத்தைக் கழிக்கவேண்டுமென்று எனக்குப் புதியதோர் விருப்பம் தோன்றியிருக்கிறது. எனக்கு வதுவைசெய்து வைக்கவேண்டுமென்று தாங்கள் இதுவரை எவ்வளவோ ச்ரமப்பட்டுவந்தீர்கள். நீங்கள் என்னை ஒருவனுக்குக் கல்யாணம் செய்வித்தாலும், நம் பந்துக்களிற் பலர்க்கு, தங்களுக்கு என்னைக் கொடுக்கவில்லையே யென்று உங்கள்மேல் கோபமும் மனஸ்தாபமும் உண்டாகும். ஒருவேளை இதனாலேயே நம் சுற்றத்தார்க்குள் கலஹமும் சண்டையும் விளையும். ஆதலால், எனக்குக் கல்யாணம்செய்யவேண்டுமென்னுங் கவலையை நீங்கள் இனி விட்டுவிடுங்கள்" என்று வேண்டிக்கொண்டாள்;

இதைக்கேட்ட அத்தகப்பன், தன் புத்ரியைநோக்கி. "எனது செல்வக்குழந்தாய்! என்ன நீ இப்படிச் சொல்லுகிறாய்! உன்னுடைய ப்ராயமென்ன! நீ செய்யவேண்டிய கார்யமென்ன! ஸ்தலதர்சனம் செய்ததனால் இப்படி இவற்றையெல்லாம் முற்றிலும்மறந்து விட்டு வேதாந்தம்பேசுகின்றாயே! இது தகுமோ? உன்னைப் பிஞ்சிலேபழுத்தவளென உலகமெல்லாம் பரிஹாஸஞ்செய்யாதா? என்னுடைய கௌரவமும் தானியாதாகும்? எனதருமைப் பெண்ணுக்கு ஒருதக்க வரனைத் தேடி மணஞ்செய்விக்க என்றால் இயல

வில்லையென்றால், நம்மைச்சேர்ந்தவரெல்லாம் என்னை ஏள னம் செய்யார்களா? நல்லவார்த்தை சொன்னாய்! எதற் கும் காலமும் பருவமுமுண்டு. ஆதலால் இப்போது நீ என் கருத்துக்கிசைந்து, ஸ்வாமி ஸந்நிதியில் இச்சீட்டுக்களில் ஒன்றை, கடவுளை வேண்டிக்கொண்டு எடு" என்றான்.

அதற்கு அந்தப்பெண், "அப்பா! நான் சொன்னது பரிஹாஸத்துக்கிடமாமென்று கூறி அதை மறுத்தீர்களே; தெய்வபக்தி யுள்ளவருக்கு உலகத்தார் தம்மைப் பரி ஹாஸம செய்தாலென்ன? அன்றிப் பலபடப் புகழ்ந்தா லென்ன? இரண்டும் அவர்களுக்கு ஒன்று போலத்தானே. எனதிளமையை நான் மணந்துகொள்வதற்கு ஒரு காரண மாகக் கூறினீர்களே. நேற்று நாம் மலைபுச்சியில், கழுகு களின் வரவுநோக்கிக் காத்துக்கொண்டிருக்கையில், நமதரு கில் நின்றுகொண்டிருந்த நாலைந்து ஸந்யாஸிகளைத் தாங்கள் கவனித்தீர்களே; அவர்களில், இளமையும் அழ கும் இனிது சேர்ந்திருந்த ஒரு பால்யஸந்யாஸியுடன், சற் றுநேரம் தாங்கள் பேசிக்கொண்டும் இருந்தீர்களே. அவர் எவ்வளவு இளம் ப்ராயத்தவர்! நீங்கள் இளமையில் துற வைப்பற்றி அவரை ஏதோ கேட்டதற்கு, அவர் எவ்வளவு சாதுர்யமாக மறுமொழி சொன்னார்! அவரைப்போல் நானும் லௌகிக சிந்தையில்லாதிருக்க விரும்புகிறேன். என்னை, கல்யாணஞ் செய்துகொள்ளும்படி கட்டாயப் படுத்தாதீர்கள்" என்று மிக்க வணக்கத்துடன் கூறிவிட்டு, தன் தந்தையார் யாது சொல்லுவாரோ என்று சஞ்சலப் பட்டுக்கொண்டிருந்த தன்னுடைய மனத்தின் குறிப்பு முகத்திலேதோன்ற அவர் முகத்தை அவள் பார்த்தாள். தந்தையும் ஒன்றும்பேசாமல் மகள் முகத்தை உற்றுப் பார்த்தான். அப்போது அவள் கண்களில் கண்ணீர் ததும்

பியது. அதைக்கண்ட தகப்பனும், சட்டென்று அந்தப் பேச்சை அம்மட்டோடு நிறுத்திவிட்டான்.

தன்மகள் அந்த வாலிபத்துறவியைப்பற்றிக் கூறிய போது, சரேலென்று அவன் மனத்தில் ஒரு புதிய எண்ணந் தோன்றிற்று: அதாவது, தன் குமாரத்திக்கு அந்தப்பால்ய ஸந்யாஸியின்மேல் காதலுண்டாயிருத்தல் கூடும் என்பதே. முதனாள் மலையின்மேல் அவள் அவனை (வாலிபனை) பல முறையும் உற்றுநோக்கியது இப்போது ஞாபகத்துக்கு வருதலும், அது அவன் (தகப்பன்) கொண்ட ஸந்தே ஹத்தை அதிகப்படுத்திற்று. ஆகலால், அவன், அந்த ஸந்யாஸியைப் பற்றிய விஷயங்களை யெல்லாம் விரிவாக அறிந்துவருமாறு தன் ஆட்களிற் சிலரை அனுப்பினான் இம்மனிதர்கள், அந்த காலைந்து துறவிகளிருந்தவிடத்தைத் தேடிப்பிடித்து, அங்குப்போய், அவர்களை, தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் பற்பல கேள்விகள் கேட்கவே, துறவிகளும், இவர்களால் தமக்கு அவ்வூரில் ஏதாவது இடையூறு ஏற்படுமென்று பயந்து அதிகாலையில் பொழுது விடிதற்கு முன் புறப்பட்டு, கிழக்கே ஒன்பதுமைல் தூரத்தி லிருக்கும் மஹாபலிபுரத்தை நோக்கிச் சென்றார்கள்.

அத்யாயம் 16. மிஸ்டர் டே என்னும் வெள்ளைக்காரன்.

பண்டைக்காலத்தில் நம் தமிழ்நாட்டில் வர்த்தகம் விசேஷித்திருந்தது. மேற்கு ப்ரதேசத்தில் பூர்வகாலத்தில் சிறப்பும் நாகரீகமும் சேரவிளங்கிய ஈஜிப்ட் க்ரீஸ் ரோம் இந்நாடுகளோடெல்லாம் சுமார் 2000-வருஷங்களுக்கு முன் நம்தேசம் நல்ல வ்யாபாரம் செய்துகொண்டுவந்தது. அங்கிருந்து அந்நாட்டார்கள், உலோகங்களால் மிக்கயுக்தி யுடன் செய்த ப்ரதிமைகளையும், யுத்தத்தில் உபயோகப்

படும் யந்த்ரங்களையும், குதிரை த்ராக்ஷாரஸம் முதலியவற்றையும் இங்குக் கொண்டுவந்துவிற்றதுமன்றி, இங்கிருந்து தந்தம் சந்தனம் முத்து மயில் முதலியவற்றைத் தங்கள் நாட்டுக்கு ஏற்றுமதி செய்தும் வந்தனர். இப்படி ஏறக் குறைய இரண்டாயிர வருஷத்துக்கு முன்னமே நம் நாட்டில் கப்பல் மூலமாக விசேஷ வர்த்தகம் நடந்த தென்பது, சிந்தாமணி மணிமேகலை பத்துப்பாட்டு முதலிய பண்டைத்தமிழ் நூல்களால் நன்கறியப்படும்.

ஆனால், சற்று முன்பின் கிறிஸ்து பிறந்த காலத்திற் கப்புறம் பதினைந்தாவது நூற்றாண்டுவரையில் இந்த வ்யாபாரம் குறைந்துபோயிற்று. அதற்கு, ஐரோப்பா இந்தியா என்னும் இரண்டிடத்திலும் முன்காலத்திற்போலாது ராஜாங்கமுறை முதலியவற்றில் அக்காலத்தில் ஏற்பட்டிருந்த குறைவுகளும் பிறவும் காரணம். எனினும், கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர் ஐரோப்ய நாடுகள் ஒவ்வொன்றிலிருந்தும் வர்த்தகர்கள் ஒருங்கு சேர்ந்து இந்தியாவில் கூட்டு வ்யாபாரம் செய்யலானார்கள். அப்படி நம் நாட்டுக்கு வந்தவர்களில் முதலானவர் போர்த்துகேசியர். அவர்களுக்கு வாணிபத்தில் அதிக லாபம் வருவதைப்பார்த்து ஒருவர்பின்னொருவராக ஹாலண்ட் தேசத்து டச்சுக்காரரும் இங்க்லெண்ட் தேசத்து இங்க்லீஷ்காரரும், ப்ரான்ஸ் தேசத்து ப்ரஞ்சுக்காரரும, டென்மார்க்கு தேசத்து டேன்ஸ்காரரும் இந்நாட்டிற்கு வருவாராயினர்.

இவ்வாறு வ்யாபார நோக்கத்தோடு முதல்முதல் வந்த இங்கிலீஷ் வர்த்தகர்களுக்கு 'ஈஸ்ட் இந்தியா கம்பெனி' யார் என்று பேர். இவர்கள், முதலில் டச்சுக்காரர்களாலும், பிறகு ப்ரஞ்சுக்காரர்களாலும் உபத்ரவிக்கப்பட்டார்கள். நாளடைவில் அத்ருஷ்டவசத்தால் இவர்களுடைய

கை ஏற்றமுற்றது. இவர்களுக்கு விரோதிகளாயிருந்த ஐரோப்ய வர்த்தகர்களெல்லாம் சிறிது சிறிதாக ஒடுங்கிப்போயினர். இங்க்லீஷ் கம்பெனியாரும், முதலில், தங்களைத் தம் பகைவர்களினின்றும் காத்துக்கொள்வதற்காகச் சிறிய சேனை வைத்திருந்தார்கள். பிறகு, நம்முடைய தேசம் அப்போதிருந்த நிலைமையினால், கம்பெனியார் செல்வாக்குக் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துவர, கடைசியில் இப்போது இந்தியாதேசமுழுதும் இங்க்லீஷ்காரருடைய ஏகசக்ராதிபத்யத்தின் கீழாய்விட்டதென்பது, இந்துதேச சரித்ரங்களில் விரிவாகக் கூறப்பட்டிருத்தலைக் காணலாம்.

நமது கதை நிகழும் காலத்தில் இக்கம்பெனியாருடைய அதிகாரம் ஆரம்பஸ்திதியிலிருந்தது. அப்போது இங்கே டச்சுக்காரர்களுக்கு நல்ல வ்யாபாரம் கிடைத்துவந்தது. இங்க்லீஷ் கம்பெனியார், இப்போது சென்னைமாநகரம் இருக்கும் இடத்திற்கு வடக்கே எறக்குறைய எழுபது மைல் தூரத்தில் 'ஆறுமுகம்' என்னும் துறைமுகத்தில் தங்கியிருந்தனர். அந்த இடம் அவர்களுக்கு வ்யாபாரத்துக் கேற்றதாகத் தோற்றவில்லை. அதற்கருகே புலிக்கட்டு என்னுமிடத்தில் டச்சுக்காரர்களுடைய வர்த்தகம் நன்றாக நடந்துவந்தது. ஆதலால் 'ஈஸ்ட் இந்தியா கம்பெனியார், மைலாப்பூருக்கருகே கடற்கரையில் கொஞ்சம் நிலம் வேண்டுமெனக்கருதி, அவ்விஷயமாக, அப்போது செங்கல்பட்டின் சிற்றரசனாய்ச் சிறப்புற்றிருந்த சென்னப்பனோடு பேசி வரும்படி, தம் தலைவனாகிய மிஸ்டர் டே என்பவனை அனுப்பினார்கள்.

அப்படியனுப்பப்பட்ட டே என்பவனும், மரக்கலத்தின் வழியாக மஹாபலிபுரம் வந்து சேர்ந்து, பிறகு அங்கே

தன் தகப்பனை நிறுத்திவிட்டு, தன்னுடன் வந்திருந்த வீரர் சிலருடன் செங்கல்பட்டுக்குச் சென்று, அங்குச் சென்னப் பனைக்கண்டு வணங்கி, தங்களுக்கு வ்யாபாரத்திற்கு அனு கூலமாகும்படி மேலேகுறித்த இடத்தைத் தரவேண்டு மென்றும், அதற்குப்பதிலாகத் தாங்கள் அந்த நிலத்துக்கு விலையாவது, அங்கு வ்யாபாரஞ் செய்வதற்கு வரியாவது தருவதற்கு ஸம்மதிப்பதாகவும் சொன்னான். மற்றும் தாங் கள் வ்யாபாரத்தைத் தவிர வேறு எவ்விதத் தொழிலும் செய்யப்போவதில்லை யென்றும், இந்தியர்கள் இங்க்லீஷ் காரர்கள் என்னும் இருதிறத்தார்க்கும் இதனால் நன்மையே விளையுமென்றும் அவன் விரித்துக் கூறினான்.

இவ்வாறு இவன் கூறியதைக் கேட்ட சென்னப்பன் சிறிதுபொழுதுயோசனை செய்தான், வெள்ளைக்காரர்களைப் பற்றி அப்போது நம்மவர்களுக்கு ஒன்றும் நன்றாய்த் தெ ரிந்திருக்கவில்லை. அவர்கள் வ்யாபாரத்திற் கண்ணுங் கருத் துமாயிருந்து நல்ல லாபம் ஸம்பாதித்துக் கொள்ளும் சக்தி யுடையவர் என்று மாத்ரமே நம் ஜனங்களுக்குத் தெரிந் திருந்தது. அவர்களுடைய அகன்றுயர்ந்த உருவமும், தேகபலமும், ஊக்கமும், அவர்களைப்பற்றி, இந் நாட்டினர் மனத்திலே, நல்ல அபிப்ராயத்தை உண்டாக்கி யிருந்தன. ஆதலால், இந்த இங்க்லீஷ்காரருக்கு அவர்கள் விரும்பிய வண்ணம் மயிலாப்பூர்க்கருகில் கொஞ்சம் இடங் கொடுக்க லாமென்றே சென்னப்பனுக்குத் தோன்றியது.

அதுவுமன்றி, தனது முன்னோர்களுள் ஒருவனாகிய விஜய நகர ராஜ்யத்தரசன் தலைக்கோட்டைப் படுகளத்தில் மஹமதியர்களால் கொலையுண்டபோது. அதுகேட்டு, தீப் பாய்ந்து மாய்ந்த ஒரு ராஜஸ்திரீ, அப்படித் தீப்பாய்வதற் குச் சற்றுமுன், அங்குக் கூடியிருந்த போர் வீரர் முதலிய

வர்களைப் பார்த்து, இந்தியாவின் எதிர்கால ஸம்பவத்தைக் குறித்துப் பின் வருமாறு ஆவேசமுற்றவள் போலச் சொன்னாளென்பதை, அவன் கர்ண பரம்பரையாய்க் கேள்விப் பட்டிருந்தான். அவள் அச்சமயம் சொன்னதாவது :—

“* நன்றிசேர் வீரர்காள்! நானில மாந்தர்காள்!!
இன்றோ டழிந்தது! இன்றோ டழிந்தது!!
செங்கோல் நிலையும் தீரமும் வீரமும
தங்கிய சீரும் தானமும் புகழும்
திருவும் மாந்தர் செய்தவப் பேறும்
மருவும் கவிஞர் வளர்நிதிக் குவியலும்
துன்றிய அன்பும் துலங்கிய அருளும்
இன்றோ டழிந்தது! இன்றோ டழிந்தது!!

* * * * *

ஆயினும் யாமும் அதனை நினைந்தே
நோயினை யடைந்து நுடங்க லாகாது.
‡‘பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையின்’ என்பர்
எல்லாம் வல்ல இறைவர், நம் ஆட்சியை
வல்ல பற்பல வகையினில் நிரப்புவர்—அவற்றுள்.
என்றும் நல்லதே இடையறா திருப்பின்,
ஒன்றும் அதன்கண் உயர்வு தோன்றாதால்—அதனால்,
நிழலின் அருமை வெய்யிலில் நின்றே
பழகி யறிதல் பான்மை யாகும்.”
இன்னும் ஒன்றுநான் இயம்புவேன் கேண்மின் :

* இந்தப்பாட்டில் மேற்கோள் குறியிடப்பட்ட பாகம், ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியார் எழுதிய ‘பிருதிவிராஜன்’ என்னும் நாடகத்தின் பின்னுரையிற் கண்டது.

‡ நன்னூல் 462.

இன்னல் மிகவும் எய்தி நம்மவர்
சின்னாட் காலமே சீர்குலைந் திருப்பர்;
முன்னாட் செய்தவ முதிர்ச்சியின் பயனாப்
பின்னர் நமது பெருவள நாட்டில்
* நன்னர் வாணிபம் நாடிய உளத்தராய்
மேற்புல மிருந்து வெள்ளை மேனியர்
நாற்புறங் கடல்சூழ் நாட்டினர் வருவர்.
அன்னவர் தமக்கே ஆண்டவ னருளால்
† துன்னும் இவ்வா சுரிமை. நம்முள்
பற்பல மதத்தாராய்ப் பற்பல்ஜா தியராய்ப்
பற்பல விதத்தராய்ப் பரவுமிந் தியரும்
விரிகடல் சேர்நதி வெள்ளமே போன்றும்
அருகினில் நேரும் அபாயங் கண்டுதாய்
விரிசிற கிற்குள் மேவுருஞ் செனவும்
அவரா சாட்சியில் அன்புடன் அமர்வர்.
"இவர்நா டாள்வதில் இனிநம் நாட்டில்
கொடுங்கோல் அரசர் குலைந்து நடுங்குவர் ;
இடங்கொள் கள்வர் இடமிலா தழிவர் ;
மாற்றலர் ஒழிவர் ; வருபிணி அழியும் ;
தோற்றும் பற்பல துன்பெலாம் ஓடும் ;
நாடு முழுதும் நன்மையே பெருகும் ;
நாடும் பொருளெலாம் நலக்கக் கிடைக்கும் ;
கல்வி ஓங்கும் ; காவலும் ஓங்கும் ;
நல்வி வேகம் நாளும் தழைக்கும் ;
இதுவரை யில்நாம் எதிர்பா ராத
புதுமையும் இன்பமும் பொருந்திட நேரும் ;
அவரவர் மதமும் அவரவர் மானமும்

* நன்னர்-நன்றாக. † துன்னும்-சேரும்.

அவரவர் கொள்கையும் அமைந்தினி திருக்கும் ;
அமைதியே எங்கும் ஆட்சி கொள்ளும் ;
இமையபவ ருலகமா இவ்வுல கிருக்கும ;
அரியநம் மக்களும் அவர் நம் மக்களும்
உரிய நலங்கொண் டுவந்துவாழ் குவரே.''

இவ்வாறு அந்த ராஜஸ்த்ரீ வருங்கால நிகழ்ச்சியைக் குறித்துச் சொன்னவிஷயம் சந்த்ரகிரியாண்மனையிலுள்ள புராதன சாஸனசாலையில் எழுதிவைக்கப்பட்டிருந்ததென்பதும் சென்னப்பனுக்கு அப்போது ஞாபகம் வந்தது. சென்னப்பன் இவற்றையெல்லாம் சிந்தித்து, தன் முன்னிருந்த இங்க்லீஷ்காரனை நோக்கி, "நீங்கள் வர்த்தகம்மாத்ரம் செய்வதானால் நீங்கள் கேட்டுக்கொண்ட இடத்தை உங்களுக்குக்கொடுப்பதில் எனக்கு ஆக்ஷேபம் ஒன்றும் தோன்றவில்லை ; எனினும். இதைப்பற்றி நான் நன்றாக யோசித்துப் பின்னால் அந்தநிலத்தின் விலை வ்யாபாரவரி முதலியவற்றைக் குறித்து விரிவாகச் சொல்லியனுப்புகிறேன். நீங்கள் போய் வரலாம்'' என்றான் அப்படியே டே என்பவனும் தன்வேலை நிறைவேறியதுபற்றி மிக்க மனமகிழ்ச்சியுடன் மஹாபலிபுரத்துக்குத் தன்னுடன் வந்த மெய்காப்பாளரோடும் புறப்பட்டான். அங்கே அவன் கப்பல் அவனுக்காகக் காத்துக்கொண்டிருந்தது.

இவை இப்படியிருக்க, திருக்கழுக்குன்றத்தில் தன் மகள் கல்யாணவிஷயமாக முடிவுசெய்வதற்கு வந்திருந்த அந்த க்ராமாதிபதி, அவ்வாலிப ஸந்யாஸியும் அவனுடனிருந்த மற்றைத்துறவிகளும் அவ்வூரைவிட்டுப் போயினர் என்பதைக் கேள்வியுற்று, எப்படியாவது அந்த பால்யஸந்யாஸியைத் திரும்பவும் அவ்வூர்க்குக் கொண்டுவரவேண்டுமென்று நிச்சயஞ்செய்துகொண்டான். இப்போது, அவ

னுக்கு. சிலகாரணங்களால், தன்புத்ரிக்கு அவனைத்தானே மணக்கவேண்டுமென்னும் விருப்பம் இருந்ததென்பது வெளிப்படையாகத் தெரியவந்தது. ஆதலால், உடனே மேற்கே செங்கல்பட்டுக்கும் கிழக்கே மஹாபலிபுரத்துக்கும் ஸேவகர்களையனுப்பி, அந்த வாலிபத்துறவியையும் அவச்யமானால் மற்றைத் துறவிகளையும், பலவந்தப்படுத்தியாவது திருக்கழுக்குன்றத்திற் சேர்பிக்கவேண்டுமென்று அவர்களுக்கு அவன் உத்தரவிட்டான்.

ஸேவகர்களுள் மஹாபலிபுரஞ்சென்றவர்கள், அந்த ஸந்யாஸிகளை அங்குக்கண்டு, "எங்கள் யஜமானன் உங்களை அழைத்துவரச்சொன்னான்" என அவர்களிடம் கூறினார்கள். துறவிகளும், 'ஏதடா! சனியன் இங்கும் தொடர்ந்து வந்தது!' என்றெண்ணிக்கொண்டு, யாது செய்வதெனத் தெரியாது தயங்கினர். அப்போது ஸேவகர்கள் தாங்கள் வந்த கார்யத்தைமீண்டும் வற்புறுத்திக் கூறினார்கள். அவர்கள் ஸந்யாஸிகளைப் பலவந்தப்படுத்துவார்கள்போலிருந்தது.

அதே ஸமயத்தில்தான், மேற்கூறியபடி டே என்பவனும் அங்குவந்துசேர்ந்தான். அவனையும் அவனுடன்வந்த போர்வீரர்களையும் பார்த்த இந்த ஸந்யாஸிகள், அவனருகிற்சென்று, "உலகவாழ்க்கையைத் துறந்து மறுமைப்பயனையே நாடும் எங்களை எந்தக்காரணம்பற்றியோ அந்த க்ராமாதிகாரி பலவந்தப்படுத்துகிறான். எங்களுக்கு அவ்விடம் செல்ல இஷ்டமில்லை. ஆதலால், எங்களை இப்போது நீயே அடைக்கலமாகக்கொண்டு எங்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்று மிகஉருக்கமாக வேண்டிக்கொண்டனர். அவர்களுடைய நிலைமையைப்பார்த்த அந்த வெள்ளைக்காரனுக்கு, அவர்கள்மீது இரக்கமுண்டாயிற்று.

உடனே, அவன் அந்த ஸேவகர்களை நோக்கி, 'இவர் ளுக்கிஷ்டமில்லாதிருக்கவும், நீங்கள் இவர்களை அங்குவா வண்டுமெனக் கட்டாயப்படுத்துவது தப்பன்றோ? அதி ம், இவர்கள் ஸ்வாமியார்கள்; இவர்களுக்குநீங்கள் வணங் க்கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமேயல்லாது, இப்படி இவர் ளுக்கு அபசாரம் செய்யலாமா?" என்றனன். அதற்கு பந்த ஸேவகர்கள், "ஐயா, உம்மை ஒருவரும் வழக்குத் ர்ப்பதற்கு இங்குக் கூப்பிடவில்லை. நீர் உம் வேலையைப் ார்த்துக்கொண்டுபோம். எங்கள் ஸ்வாமியார்களை நாங் ள் அழைத்துப்போவதா தப்பு? நீர் அவர்க்காகப்பரிந்து பேசுவதுதான் தப்பாகும்" என்றனர். இதைக்கேட்ட இங்கிலீஷ்காரனும், கோபங்கொண்டு, "ஏ! சேவகர்களே! இந்த ஸந்யாஸிகள் என்னிடம் அடைக்கலம் புகுந்திருக்கி றார்களாதலால் நான் இவர்களை ரக்ஷிக்கக் கடமைப்பட்டிரு க்கிறேன். இனி, உங்களில் எவரேனும் இவர்களை ஏதாவது துன்பப்படுத்துவீரானால், என் போர்வீரர்களோடு உங்களை நான் எதிர்க்க வேண்டிவரும்" என்று அதட்டிச் சொன் னன். ஸேவகர்களும் தாங்கள் ஒன்றுஞ்செய்வதற்கு இய லாமையால் வந்தவழியே திரும்பிச்சென்றனர். டோ என் பவனும், ஸந்யாஸிகளை அங்கு விட்டிருந்தாலும், அன்றித் திரும்பவும் திருக்கழுக்குன்றம் செல்லும் ரஸ்தாவில் போகும்படி சொன்னாலும், அவர்களுக்கு அபாயமே நேரிடுமென்றெண்ணி, அவர்களைத் தன்னுடன் கப்பலிலேற் றிச்சென்று மைலாப்பூரில் அவர்களை இறக்கிவிட்டு, தான் தங்கள் இருப்பிடத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

———:*:———

அத்தியாயம் 17: ஆச்சர்யகரமான உண்மைகள்.

சென்னப்பன் பத்மினியைத் தேடுவதற்காக மாறு வேஷம்பூண்டு, செங்கல்பட்டு ஸ்வாமியார் கொடுத்த ஔஷதங்களுடன் சந்த்ரகிரியின் பக்கத்தூர்களில் ஸஞ்சாரஞ் செய்யப்போனானென்று முன்னே சொன்னோமன்றோ? அப்படிச் சென்றவன், அவ்வூர்களில் ஜனங்களுக்கு மதோபதேசஞ்செய்வதும், வியாதியஸ்தருக்கு வைத்யஞ்செய்தும் வந்தான். அவனிடமிருந்த மருந்தின்குணம் மிகச்சிறந்தது. அதுபற்றி அவன், அந்த ஊர்களில் பிறமருத்துவர்களால் போக்கமுடியாத நோய்களையும் மிக எளிதிற் போக்கினான்.

இப்படி சென்னப்பனால் நோய் நீங்கப் பெற்றவரெல்லாம், தங்களுக்கு அவன்மேலுள்ள அன்பையும் நன்றியறிவையும் காட்டுதற்காக அவனுக்கு அடிக்கடி விசேஷ வெகுமானங்களை அளிக்கவந்தார்கள். அப்படி வருபவரை நோக்கி அவன், "இவற்றால் எனக்கு ஆவது ஒன்றுமில்லை. ஆனால், உங்களிடம் நான் வேண்டுவதொன்றுண்டு. நான் இந்த மலையடிவாரத்தில் ஒருநாள் ஒரு சிறப்பான குருபூஜை செய்யக் கருதியிருக்கிறேன். அதற்கு முன்னாள், வீடுகளில் விளக்கு வைக்கும் நேரத்தில், இம்மலையுச்சியில் ஒரு பெருந்தீ மூட்டுவிப்பேன். அதை அடையாளமாகக் கொண்டு நீங்களெல்லோரும் மறுநாட்காலை வந்துசேரவேண்டும்" என்று சொல்லிவந்தான். அப்போது அவன், 'வல்லபஸ்வாமி' யென்னும் பேர்வைத்துக் கொண்டிருந்தான். அதனால், எங்கும், வல்லபஸ்வாமியார் செய்யும் வைத்யமே வைத்யம்; அவர் மருத்துவத்தில் எவ்வளவு வல்லவர்! பொதுவாக எல்லாரிடத்தும் எவ்வளவு நல்லவர்!!' என்று சுற்றுப்புறத்தூர்களிலுள்ளவரெல்லாம் அவன் புகழைச்

சொல்லத் தொடங்கினார்கள். அவன் பேரும் மிக விரைவில் நெடுந்தூரம் பரவிற்று.

வல்லபஸ்வாமியார் இப்படி இருந்துவருகையில், மயிலாப்பூருக்கருகில் கப்பலிலிருந்து இறங்கின ஸந்யாஸிகள், பற்பல ஸ்தலங்களுக்குச்சென்று பிறகு ஒருநாள் சந்த்ரகிரிகுப் பக்கத்தில் வந்துசேர்ந்தார்கள். அங்கே ஜனங்களெல்லாம் ஒருவாய்ச்சொல்லாக அப்போது அடுத்த ஊரிலிருந்த வல்லபஸ்வாமிகளின் மஹிமைகளை மனமகிழ்வுடன் சொல்லக்கேட்டு, அவர்கள் அவரைக் காண்பதற்காக அவ்விடம் நாடிச்சென்றனர். அப்போது வல்லபஸ்வாமிகளும் வழக்கம்போல் வியாதியஸ்தருக்கு மருந்துகொடுத்துக் கொண்டிருந்தார். சற்று நேரத்துக்கெல்லாம் நடுப்பகற்பொழுதில் பக்கத்திலுள்ளவர்களெல்லாம் சிறிது கண்ணயர்ந்திருக்கும்போது, பால்ய ஸந்யாஸியும் வல்லபஸ்வாமியை யடுத்து, "ஸ்வாமிகளே! அடியேனை இன்னாரென்றறிவீர்களோ? எப்படி யறிந்துகொள்வீர்கள்? என்னை நேரில் ஒருமுறையும் பார்த்ததில்லையே. தங்களை நன்றாகச சந்த்ரகிரியரண்மனையிற் பார்த்திருக்கும் எனக்கே, இப்போது இம்மாறுவேஷத்தில், தங்களை இன்னாரென்று அறியக்கூடாமல் போயிற்றே. தங்கள் கையில் அடியேன், பெயர் பச்சைகுத்தி யிருத்தலைக் கண்டபிறகே எனக்குத் தாங்கள் இன்னாரென்று சட்டெனத் தெரியவந்தது. எளியேனுக்காகத் தாங்கள் இப்படி எத்தனைகாலம் சிரமப்பட்டீர்களோ? எல்லாம்வல்ல இறைவனுக்கு நம்மீது கருணை இருந்தவாறென்னே!" என்று மெல்லிய குரலுடன் சொல்லினன்.

இதைக்கேட்டுவந்த சென்னப்பன், இவ்வாறு சற்றும் எதிர்பாராதபடி பத்மினியைக் கண்ணுற்றபோது, சிறிது

நேரம் ஆநந்த பரவசனாகி மெய் மறந்திருந்தான். பிறகு அவளை நோக்கி, "எனதன்புக்குரிய அருமைப் பத்மினி! நான் உனக்காக தேசஸஞ்சாரம் செய்தது ஒரு ச்ரமமா! ஐயோ! என் பொருட்டு நீ, தெய்வமே துணையாகக் காற்றிலும் மழையிலும் வெய்யிலிலும் அலைந்து, உன் 'பஞ்சின் மெல்லடிகள் நோவக் கல் மேலும் முள்மேலும் நடந்து களைத்ததை நினைக்கவும் என்மனம் நடுங்குகின்றதே!" என்றனன்.

பிறகு பத்மினியும், தான் சென்னப்பன் செங்கல்பட்டுக்குத் தலைவனாயிருப்பதைக் குறத்தி யொருத்தி கூறக் கேட்டதையும், அவ்வூருக்கு வந்து சேருவதற்காக மிகுந்த ப்ரயாஸத்துடன் வழியெல்லாம் கடந்து திருக்கழுக்குன்றத்துக்கு வந்து சேர்ந்ததையும், அங்கே பால்ய ஸந்யாஸி வேஷத்துடனிருந்த தன்னை அந்த க்ராமபதியின் மகள் காமுற்றுக் கல்யாணஞ் செய்து கொள்ளும்படி கேட்டதன் பயனாகத் தான் செங்கல்பட்டுக்கு அத்தனை ஸமீபம் வந்தும் அத்ருஷ்டஹீனத்தால் அவனை அப்போது அடைய முடியாமல் வேறொரு திசையில் மஹாபலிபுரஞ் செல்ல நேரிட்டதையும், அங்கு இங்க்லீஷ்காரனுதவியால் மேற்படி க்ராமாதிகாரியின் ஸேவகர்களுக்குத் தப்பி மயிலாப்பூர்க்குப் போனதையும், அப்புறம் அங்கு வந்து அவனைக் கண்டதையும் எல்லாவற்றையும் விரிவாக எடுத்துச் சொல்லினள்.

சென்னப்பனும், தான் செங்கல்பட்டுக்குத் தலைவனானது முதலாக, செஞ்சி யென்னுங் குறத்தி சொன்னகுறி கேட்டதன் பிறகு சந்த்ரகிரிக்குப் பக்கத்தூர்களில் ஸ்வாமியார் வேஷத்துடன் வந்திருந்துகொண்டு அன்று அவளை எதிர்ப்பட்டதுவரை நடந்தவற்றையெல்லாம் கூறித் தன் நாயகியை மகிழ்வித்தான்.

அன்றைத்தினமே அந்திப் பொழுதில் அருகிலிருந்த குன்றின்மேல் ஒரு பெருந்தீ மூட்டப்பட்டது. அதைக் கண்ட சுற்றுப்புறத்து க்ராமத்தாரெல்லாரும், வல்லப ஸ்வாமிகள் சொல்லியிருந்தவண்ணமே, மறுநாட்காலை மலையடிவாரத்தில் வந்து சேர்ந்தனர். அங்கு அப்போது ஆயிரக் கணக்கான ஜனங்கள் தங்கள் தங்கள் சக்திக்குத் தக்கவாறு காணிக்கையுங் கொண்டு வந்திருந்தனர். அவர்களை நோக்கி வல்லப ஸ்வாமி வேஷத்துடனிருந்த சென்னப்பன், "மஹாஜனங்களே! நான் இப்போது உங்களுக்கு மிகவும் ஆச்சர்யகரமான சில விஷயங்களைச் சொல்லப்போகிறேன். கவனமாகக் கேட்டுக்கொண்டு வாருங்கள். நீங்கள் சாளுவ அரசன் சபையிலிருந்த சென்னப்பனென்னும் சிறுவனை அறிவீர்களே. அவன் எவ்வளவு கஷ்டப்பட்டு எஜமான் நாய்க்கனிடமிருந்து அந்த அருமையான வஜ்ரக்கல்லை மீட்டுக் கொண்டு வந்தான்! பின்னர் அந்த வடநாட்டு 'பயில்வானை' அவன் குஸ்தியில் தோல்வியுறச் செய்தபோது, அம்பிகையாசியின் பணிப்பெண்ணான அழகிற்சிறந்த பத்மினி, யென்பவள் தனக்குச் சாளுவன் அளித்திருந்த முத்துமாலையை யஹிரங்கமாக அந்தச் சென்னப்பன் கழுத்தில் விசிறிப் போட்டதையும் நீங்கள் அறிவீர்கள். பிறகு சாளுவராஜனுக்கு அஞ்சிச் சென்னப்பனும்பத்மினியும் சந்த்ரகிரியை விட்டுத் தனித்தனியே எங்கேயோ போய் விட்டார்களே. இவையெல்லாம் உங்களுக்கு நன்றாய் ஞாபகமிருக்கின்றன வல்லவா? இதோ பாருங்கள்: அந்தச் சென்னப்பன் தான் இதுவரை உங்கள்முன் வல்லபஸ்வாமியாய் இருந்தவன்" என்று சொல்லி, தான் மேலணிந்த காவி வஸ்திரத்தைக் கழற்றிக் கீழே வைத்தான். எல்லாரும், "இப்போது இவ்வளவு ஸாதாரணமாகச் சென்னப்பனெனத் தெரிவது, முன் தெரியவில்லையே!" என்றதிசயித்தனர்.

சென்னப்பன் மீண்டும் அவர்களை நோக்கி, "எனது இஷ்டஜனங்களே! இன்னுமொன்று கேளுங்கள்: இங்கு நேற்றையதினம்வந்த இந்த பால்யஸந்யாஸியை நீங்கள் யாரென நினைக்கிறீர்கள்? பத்மினியே அந்தவேஷம் பூண்டிருக்கிறாள்", என்று சொல்லி, பின் தனக்கும், பத்மினிக்கும் தனித் தனியே சந்த்ரகிரியைவிட்டுப்போன பிறகு ஏற்பட்ட நன்மை தீமைகளையெல்லாம் அவர்களுக்கு விளக்கமுறக் கூறினான். அதற்குள் பத்மினி தன் வேஷத்தைநீக்கி, அங்குள்ளார்களுக்குமுன், அழகிற்சிறந்த பருவ மங்கையாக விளங்கினாள். அனைவரும் அடக்கவொண்ணாத ஆச்சர்யமடைந்து இதென்னமாயம்! ஈச்வரன்செயல் எப்படியெப்படியெல்லாம் இருக்கின்றது!! என்றெண்ணி மகிழ்ந்தனர்.

மறுபடியும், சென்னப்பன் அவர்களைப்பார்த்து "மஹா ஜனங்களே! இப்படி உங்கள் முன் நிற்கும் சென்னப்பனும் என்னைத்தான் யாரெனக் கருதுகிறீர்கள்? ஐயோ! அது உங்களுக்குத் தெரியவில்லை, ஆமாம், ஒன்பது வருஷத்துக்கு மேலாய்விட்ட ஒருவிஷயம் உங்களுக்கு எப்படி ஞாபகமிருக்கும்? நல்லது. உங்கள் பழைய அரசரகிய வேங்கடராய ராஜாவைக்குறித்து உங்களுக்கு ஞாபகம் வருகிறதா? அவருடைய இரண்டாங்குமாரன் ஸ்ரீரங்கராயனே இப்போதுசென்னப்பனாய் நிற்கும் நான்" என்று சொன்னபோது, அங்கிருந்தவருடைய உள்ளத்திலிருந்து தம்மையறியாமலே ஹா! என்று ஒரு ஆச்சர்யக் குறிப்பொலி எழுந்தது. அவர்களுக்கு அப்போது தங்களைத்தாமே நம்பமுடியவில்லை; சாளுவனால் அரசகுலம் முழுவதும் அழிக்கப்பட்டதென்று அவர்கள் இதுவரையில் எண்ணியிருந்தார்களன்றோ?

இப்படி அவர்கள் ஆச்சர்யமுற்றிருக்கையில், ஸ்ரீரங்க ராயனும், தன்கையிற் கட்டப்பட்டிருந்த பட்டுக்குட் டையை அவிழ்த்து, அதனுள்ளிருந்த பனையோலையையும் ரத்ன மோதிரத்தையும் அவர்கள் முன்னே நீட்டினான். அதில்,

"இவன், என் இரண்டாம் புத்ரனாகிய ஸ்ரீரங்கராயன் என் பவனே. இவன் கையில் வைத்திருக்கும் ரத்னமோதிரம், எனது முன்னோர்கள அணிந்து வந்த மிகச்சிறப்புள்ள கணை யாழியாகும். இவனுக்கு அத்ருஷ்டகாலங் கைகூடிவரும் போது, இவனைப்பற்றியாவது இவனுடைய மோதிரத்தைப் பற்றியாவது ஒருவரும் ஐயப்படவேண்டாம். இது என் கையினாலேயே எழுதியது. இந்தப்படி வேங்கடராயராஜன்" என்றெழுதியிருந்தது.

அதைக்கண்ட ஜனங்கள் ஆச்சர்யமுற்றனர். சாளு வனுடைய அரசாட்சி தொலைந்து பரம்பரையரசன் ஆட்சி செய்யுங்காலம் வந்ததுபற்றி எல்லாரும் இன்பவெள்ளத் தில் ஆழ்ந்து ஆரவாரித்தனர். அன்றைக்கு அவ்விடத்தில் மிகச் சிறப்பாக ஒரு விருந்து நடைபெற்றது. அதன் பிறகு அங்கு வந்திருந்தாரெல்லாரும் ஸ்ரீரங்கராயனைச் சந்த்ரகிரிக்கு அழைத்துச்சென்றனர், சாளுவனையெதிர்த்து வெருட்டித் துரத்தியடித்து, ஸ்ரீரங்கராயனைச் சிங்காதனத் தில் உடனே ஏற்றவேண்டுமென்னும் ஆவலே அப்போது அனைவர்க்கும் இருந்தது.

இங்கு இவையெல்லாம் நடக்கக்கேட்ட சாளுவனோ, தனக்குக் கேடுகாலம் வந்ததை அறிந்து, தானாகவே எங் கேயோ ஓடி மறைந்தனன். அவன் எந்தப்பக்கம்போனா னென்று கூட யாரும் விசாரிக்கவில்லை. திருப்பதியில் சில

வருஷங்களுக்குப்பின் அவன் அநாதப்ரேதமாய்க் கிடந்தானும்.

சாளுவவம்சகதி இவ்வாறாக, ஸ்ரீரங்கராயன் பத்மினியுடன் சந்த்ரகிரிக்குவந்துபோது. அவ்வூரார்எல்லாரும் கார்காலத்தில் மழையைக்கண்டு களிப்புடன் ஆடும் மயிலைப்போலவும், கண்ணொளியைப்பெற்ற குருடனுடைய முகத்தைப்போலவும், நீர் நிறையப்பெற்று விளங்கும் பசும்பயிர் நிலத்தைப் போலவும், முகமலர்ச்சியுடன், அவனை எதிர்சென்றழைத்து வந்து ஸிங்காதனத்தில் அமர்த்தினர். பின்னர் மிகச்சிறப்பாகப் பட்டாபிஷேகம் திருக்கல்யாணம் முதலிய மஹோத்ஸவங்கள் நடைபெற்றன. செங்கல்பட்டைச் செவ்வையாக ஆண்டு வருவதற்குத் தகுந்த ஏற்பாடும் செய்யப்பட்டது. பத்மினிக்கு மஹாபலிபுரத்தில் உதவிசெய்த டே என்னும் இங்க்லீஷ்காரனுக்கு, அந்த நன்றிக்கு வெகுமதியாக, பத்மினியினுடைய முத்துமாலையைக் கொடுத்ததுடன், ஸ்ரீரங்கராய அரசன், தான் பட்டத்துக்கு வந்தவுடன் முதற்செய்கையாக, கி. பி. 1639-ஆம் வருஷம் மார்ச்சுமாஸம் முதல்தேதியில், அந்த டே என்பவன் செங்கல்பட்டில் தன்னைக்கேட்டுக் கொண்டபடி, 'ஈஸ்ட் இந்தியா கம்பெனியா'ருக்கு வ்யாபாரத்துக்கனுகூலமாக மயிலாப்பூருக்குச் சற்றுவடக்கே கொஞ்சம்நிலத்தைக் கொடுத்துதவினான். அந்த நிலத்தின் மேல்தான் அவர்கள், இப்போதுள்ள 'போர்ட் ஸெயிண்ட் ஜ்யார்ஜ்' என்னும் கோட்டையைக் கட்டிக்கொண்டனர். நாளடைவில் அந்தக்கோட்டையைச் சுற்றித் திரளான ஜனங்கள் வந்து குடியேறினார்கள். அப்படியேற்பட்ட அந்த ஊருக்கு ஸ்ரீரங்கராயப்பட்

டணம் எனப் பேர்வைக்கவேண்டுமென்று இங்கிலீஷ்காரர்கள் கேட்டுக்கொண்டபோதிலும், சந்த்ரகிரியாசன் தான் செங்கல்பட்டின் தலைவனாயிருந்தபோது தனக்கிருந்த 'சென்னப்பன்' என்னும்பேராலே அவ்வூர்க்குச் 'சென்னப்ப பட்டணம்' என்று பேரிடவேண்டுமென்று விரும்பினன். அந்தப்பெயரே இப்போது சென்னப்பட்டணம் எனச் சிதைந்து வழங்குகின்றது.

இவ்வுலகிலுள்ள ராஜ்யங்களுள் மிகப்பெரியதொன்றான இங்கிலீஷ்காரருடைய இந்திய ராஜ்யம், இவ்வாறு மிகச்சிறிய விஷயத்திலிருந்து ஆரம்பமாயிற்று. பின்னால் நடந்தவையெல்லாம் சரித்ர ப்ரஸித்தமானவைதாமே.

உண்மையும் நீதியும் ஒளிர்க எங்கணும்;
வண்மையும் செல்வமும் வளர்க நாளுமே;
திண்மையும் பெருமையும் சேரும் ஆங்கிலர்
ஒண்மைசேர் அரசியல் உயர்வுற் றோங்கவே.

பத்மினி முற்றிற்று.